பழனி

# கும்பாபிஷேக மலர்

[29—8—1960]

9340



## ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி கோயில்

# அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம்

சார்வரி ஆவணி 14உ

## பழனி தேவஸ்தான வெளியீடு

# பழனி ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி கோயில்
# ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகாகும்பாபிஷேக
# யாக மண்டபப் படம்



64-க்கு 64 பதத்தில் 33 குண்டங்கள் அமைக்கப்பெற்றது

பழனி

# ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி கோயில்

# அஷ்டபந்தன மகாகும்பாபிஷேக

# மலர்

சார்வரி, ஆவணி 14-ஆம் நாள்

29—8—1960

வெளியிடுவோர்

ஸ்ரீ தண்டாயுதபாணி தேவஸ்தானம்

பழனி, மதுரை மாவட்டம்.

# ஆலய ஆட்சிக்குழுவினர்

| | | |
|---|---|---|
| திரு. | P. S. K. இலட்சுமிபதிராஜு M.L.A. | தலைவர் |
| ,, | V. V. C. R. முருகேச முதலியார் | உறுப்பினர் |
| ,, | A. S. மாணிக்கம் பிள்ளை | ,, |
| ,, | P. S. சீனிவாசன் செட்டியார் | ,, |
| ,, | S. R. ஆறுமுகம் M.P. | ,, |

## இறைபணியாளர்

திரு. C. S. தீனதயாளு, B.Sc., B.L.,

## திருக்குடமுழுக்கு விழாக் குழுவினர்

1. திரு. P. S. K. இலட்சுமிபதி ராஜு, M.L.A., தலைவர், ஆட்சிக்குழு, ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தானம்.
2. திரு. V. V. C. R. முருகேச முதலியார், உறுப்பினர், ,,
3. திரு. P. S. சீனிவாசன் செட்டியார், ,, ,,
4. திரு. A. S. மாணிக்கம் பிள்ளை, ,, ,,
5. திரு. S. R. ஆறுமுகம், M. P. ,, ,,
6. திரு. C. S. தீனதயாளு, B.Sc., B.L., இறைபணியாளர், ,,
7. திரு. அனந்தராமகிருஷ்ணன், சிம்சன் & கம்பெனி, சென்னை.
8. திரு. அய்யாசுப்பிரமணிய முதலியார், அறங்காவலர், ஸ்ரீ கபாலீஸ்வரர் கோயில், மைலாப்பூர், சென்னை.
9. திரு. S. C. பாலகிருஷ்ணன், M.P., பழனி.
10. திரு. A. சிதம்பர முதலியார், M.L.C., மதுரை.
11. திரு. I. A. சிதம்பரம் பிள்ளை, M.A., M.L.C., இலஞ்சி.
12. திரு. S. K. சின்னசாமி நாயுடு, நெய்க்காரப்பட்டி.
13. திரு. S. N. சின்னசாமி நாயுடு, கோவை.
14. திரு. M. M. Sn. சொக்கலிங்கம் செட்டியார், காரைக்குடி.
15. திரு. O. சின்னசாமி பிள்ளை, முருகன் டிரான்ஸ்போர்ட், திண்டுக்கல்.
16. திரு. G. R. கோவிந்தராஜலு நாயுடு, பீளமேடு, கோயமுத்தூர்.
17. திரு. K. V. ஜெகநாதன், M.A., ஆசிரியர், கலைமகள், சென்னை.
18. திரு. கிருபானந்த வாரியார், சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.
19. திரு. T. M. கிருஷ்ணசாமி அய்யர், B.A., B.L., வழக்குரைஞர், சென்னை.
20. திரு. N. கிருஷ்ணராஜ், அனந்தகுமார் மில்ஸ், கோவை.
21. திரு. K. S. இலட்சுமிபதி நாயக்கர், ஜமீன்தார், இடையகோட்டை.
22. திரு. K. J. இலிங்கம், சென்னை.
23. திரு. A. மதனம், சேர்மன், முனிசிபல் கவுன்சில், பழனி.
24. திரு. N. M. Sp. Rm. மெய்யப்ப செட்டியார், பசுமடம், பழனி.
25. திரு. I. T. ஒபளக்கொண்டம நாயக்கர், ஜமீன்தார், ஆயக்குடி, பழனி.
26. திரு. P. A. இராஜு செட்டியார், கோவை.

27. திரு. K. அரங்கசாமி முதலியார், B. A. திருவடி நிலையம், பழனி.
28. திரு. மணலி இராமகிருஷ்ண முதலியார், B.A., சென்னை.
29. திரு. P. T. இராஜன், M L.C. மதுரை.
30. திரு. S. R. பொன்னுசாமி செட்டியார், M.L.C. கோவை.
31. திரு. A. சேனுபதி கவுண்டர், M L.A தாராபுரம்.
32. திரு. V. S. தியாகராஜ முதலியார், M.A.
33. திரு. V. வித்யாசாகர்—உடுமலை
34. திரு S. S. வெங்கடராமதேவர், எஸ். எஸ். வி. பஸ். சர்விஸ், சூலூர்.
35. திரு. C. R. சதாசிவம், கோவை.
36. திரு. T. S. சுப்பிரம்ணியன். தஞ்சாவூர்.
37. திரு. C. V. Ct. V. வெங்கடாசலம் செட்டியார், கானாடுகாத்தான்
38. திரு. S. V. N. சின்னகண்ணுபிள்ளை, தூத்துக்குடி.
39. திரு. S V. மெய்யப்ப செட்டியார், பர்மாஷெல், தேவகோட்டை.
40. திரு. K. கனகசபை பிள்ளை, திருக்கடையூர்.
41. திரு. N. S. இராமலிங்கம், M.L.A. தஞ்சாவூர்.
42. திரு. M. D. தியாகராஜபிள்ளை, M.L.A. தஞ்சாவூர்.
43. திரு. சுவாமிநாத உடையார், M.L.A., தஞ்சாவூர்.
44. திரு. A. கிருஷ்ணசாமி வாண்டையார், M L.C. தஞ்சாவூர்.
45. திரு. K. K. சுப்பணகவுண்டர், கூகலூர்.
46. திரு. M. சுப்பையா செட்டியார், M.L.C. திருச்சிராப்பள்ளி.
47. திரு. A. R. A. S. ஆறுமுகசாமி நாடார், தூத்துக்குடி,
48. திரு. N. மகாலிங்கம், M.L.A., பொள்ளாச்சி.
49. திரு. ஈசானசிவாச்சாரியார், பழனி.
50. திரு. நல்லசேனுபதிசக்கரை மன்ருடியார், பழையகோட்டை பட்டகாரர்.
51. திரு. V. K. பழனிச்சாமி கவுண்டர், வேட்டகான்புதூர்.
52. திருமதி. T. S. சௌந்தரம் இராமச்சந்திரன், காந்தி கிராமம், திண்டுக்கல்.
53. திருமதி. புஷ்பம் நடராஜன், மதுரை.
54. திரு P. R. இராமகிருஷ்ணன், M.P. கோவை.
55. திரு. A. S. சுப்பராஜ், M.L.A. போடிநாயக்கனூர்.
56. திருமதி. சி. ந. குழந்தையம்மாள், M.L.A. கோவை.
57. திரு. T. S. கிருஷ்ண, T.V.S. மதுரை.

# வாழ்த்துரைகள்

திரு. எம். பக்தவத்சலம், பி.ஏ., பி.எல்., அறநிலைய அமைச்சர், சென்னை

''வெற்றி வடிவேலன்—அவனுடைய
வீரத்தினைப் புகழ்வோம்!
சுற்றி நில்லாதே போ—பகையே
துள்ளி வருகுது வேல்!''

—பாரதியார்.

அழகின் ஒளிவடிவாய், இளமை தவழும் பூங்கொழுந்தாய், இறைவனின் அருள்மருந்தாய், மங்கல வாழ்வின் வாடா நறுமலராய், பக்தர்களுக்குக் காட்சி தருகின்றான், ஏறுமயிலேறி விளையாடிவரும் எழில் மலை முருகன். குழந்தை உருவோடு பழநியம்பதியில் வீற்றிருக்கும் ஸ்ரீ தண்டாயுதபாணியின் இயற்கை அழகு, கண்டோர் கண்ணையும் கருத்தையும் கொள்ளைகொள்ளும்அற்புத சக்திவாய்ந்தது. 'கைபுனைந்தியற்றாக்கவின் பெறு வனப்பு'' என்று திருமுருகாற்றுப் படை காட்டும்சொல்லோவியத்தின் உயிரோவியத்தை, அங்கு இன்றும் தரிசித்து மகிழலாம்.



மற்றொரு அற்புத சக்தி, பழநி பஞ்சாமிர்தம். பழநி பஞ்சாமிர்தத்தின் வியத்தகு ஆற்றலும் நோய் தீர்க்கும் வல்லமையும் உலகப் பிரசித்தம். போக முனிவர் என்ற சித்தர் பெருமான் அமைத்த மூலவர் உருவம், பிணிதீர்க்கும் மூலிகைகள் கொண்ட சிறந்த கலவை என்பது, பக்தர்களின் அனுபவ நம்பிக்கை. அத்துடன், இங்கே சஞ்சீவி மூலிகையின் காற்றும் வீசுவதாகக் கருதப்படுகிறது.

எங்கும் நிறைந்துள்ள இறைவனை, திருக்கோயில்களில் வைத்து வழிபடுவதில் உள்ள நுட்பம், ஆழ்ந்து அறிந்து அனுபவிக்கத்தக்கது. மனித அறிவுக்கும் உணர்வுக்கும் அப்பாற்பட்ட இறைவனின் பெருமையை, கொஞ்சம் கொஞ்சமாக அறிந்து போற்றுவதற்கான வழிப்படிகளைப் போல் உதவுவதே, 'கோயில் வழிபாடு'' என்று கூறலாம். சமுதாயத்தில் ஒழுங்கு, அமைதி, தொண்டார்வம் முதலியவற்றை வளர்த்து, மனிதனின் சுயநலத்தை ஓரளவு போக்கி, அருள் நெறியைப் பரப்புவதற்கான பயிற்சியளிக்கும் முயற்சியாக,இதைநம் நாட்டுப் பெரியோர்கள் மேற்கொண்டனர். மலையின் உச்சியை அடைய விரும்புவோர், பல படிகளைக் கடந்துதான் போகவேண்டும். சாதாரண மக்கள் செய்யத்தக்க முறை அதுவேயாகும். ஒரு சிலர், விமானம் மூலம், நேரே மலை உச்சியை எட்டிப்பிடிக்க முயலலாம். ஆனால், அத்தகையவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருக்கும். அதற்கேற்ற வசதியும், சக்தியும் கிடைப்பது அருமை. எனவே, பெரும்பாலோர், படிகள் மூலம் சிறுகச் சிறுக ஏறி, காலக்கிரமத்தில் மலையின் உச்சியை அடைய முடியும்.

மலையேறும் முயற்சியில் ஈடுபடுவோர்க்கு, தளராத ஊக்கமும், உடல் வலிமையும் மிகவும் தேவை. அத்துடன், அனுபவம் பெற்ற பெரியோரின் உதவி கிடைத்தால், மிகவும் நன்மை ஏற்படுவது

நிச்சயம். சாதாரண மலைப்பிரயாணத்தைப் போன்றதே, ஆத்மீக நல்வழி முன்னேற்ற மும். எங்கும் நிறைந்து விளங்கும் பரம் பொருளை நாடி அடையும் ஆன்மநேய அருள் நெறியில் முன்னேறுவதற்கு, ஆகம முறைப் படி அமைந்த ஆலய வழிபாடும், பக்தி நெறி யும், சிறந்த பயனளிக்கும் என்பதில் சந்தேக மில்லை. இந்த உண்மை, அனுபவத்தில் உணர்ந்து போற்றத்தக்கதாகும்.

''முருகு'' என்ற சொல்லுக்கு ''அழகு, இளமை, மணம், கடவுள்தன்மை'' ஆகிய நான்கு பொருள்கள் உண்டு. இதை, தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள், ''முருகன் அல்லது அழகு'' என்ற நூலில் மிகத் தெளி வாக விளக்கியிருப்பதை நினைவூட்ட விரும்புகிறேன். முருகப் பெருமானின் பெருமையை, சங்க காலம் முதற்கொண்டு, பல நூல்கள் பறைசாற்றி வருகின்றன. ''உலகம் உவப்ப'' திருமுருகாற்றுப் படை யைப் படைத்தருளிய நக்கீரர் முதற் கொண்டு, வேலனைப்பாடி உருகும் அருட் புலவர் கூட்டம், வாழையடி வாழையாய், இன்றும் விளங்கி வருகிறது. முருகப்பெரு மானின் வீரச்செயல்களையும், காதல் விளை யாட்டுக்களையும், தத்துவ நுட்பங்களோடு ஆராய்ந்து கூறும் அறிஞர்களும், பக்திச் சுவை மிக சொட்டச் சொட்டப் பாடிப் பரவசமூட்டும் அன்பர்களும், நம் கண் ணெதிரே பலர் இருப்பதைக் காணலாம்.

சமய நெறியின் மறுமலர்ச்சிக்கும், ஆன் மீக வாழ்வின் முழு முதிர்ச்சிக்கும் சிறந்த வகையில் வழிகோலும் நிலையங்களாக, நம் நாட்டின் திருக்கோயில்கள் நிகழவேண்டும் என்பது என் பிரார்த்தனை. சமயக்கல்வி, தத்துவ விளக்கம், ஆகம நுட்பம், இலக்கிய ஆராய்ச்சி, இசைப் பயிற்சி, முதலியவற்றைத் தக்க முறையில் போற்றி வளர்க்கும் பயிற்சி நிலையங்கள், நாடெங்கும் தோன்ற வேண்டும். இந்த வகையில், பழநியம்பதி, எல்லோரை யும் முந்திக் கொண்டுவிட்டது. சமய நெறிக் கான கீழ்த்திசைக் கலைக்கல்லூரி இங்கே தொடங்கி இருப்பது எல்லோருக்கும் தெரிந் திருக்கலாம். இந்த முயற்சிக்கும், இறைவன் திருவருள் பரிபூரணமாகக் கிடைத்துள்ளது.

ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி தேவஸ் தானத்தின் தர்மகர்த்தர் குழுவின் தலைவர் திரு. பி. எஸ். கே. இலட்சுமிபதிராஜு, எம். எல். ஏ., யும், அவருடைய சக தர்மகர்த் தர்களும், மிகுந்த சிரத்தையோடு சேவை புரிந்து, யாத்ரீகருக்குத்தேவையான வசதிகள் செய்து வருவதை அறிந்து அவர்களைப் பாராட்டுகிறேன். மேலும் ஊக்கத்தோடும், இன்னும் அநேக பணிகளை அவர்கள் செய் வார்களென்று நம்புகிறேன்.

கும்பாபிஷேக சமயத்தில், இம்மலர் வெளியிடுவதோடு, பல புதிய பணிகள் செய்ய முன்வந்திருப்பது, பக்தர்களுக்கும் தமிழ் அன்பர்களுக்கும் ஆனந்தமளிக்கும். ஸ்ரீ தண்டாயுதபாணியின் திருவுருவப் படங் களைத் தக்கவர்களைக் கொண்டு எழுதி வெளியிடவும், பழநி திருப்புகழ்ப்பாடல்களை இசைத்தட்டுகளில் அமைத்து வெளியிடவும் தேவஸ்தான தர்மகர்த்தக் குழுவினர் ஏற் பாடு செய்திருக்கிறார்கள். பக்திநெறி பரவு வதற்கு இந்தச் சாதனங்கள் மிகவும் பயன் படும்.



திரு. சி. சுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்., நிதியமைச்சர்

ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமிக்கு விமரிசையான முறையில் அஷ்டபந்தன கும்பாபிஷேகம் நடத்தப்பெறுவது பக்தர்கள் அனைவருக்கும் அகமகிழ்ச்சியைத் தரும். இந்த திருப்பணியை யொட்டி கும்பாபிஷேக மலர் வெளியிடுவதென்பது ஒரு புதுமையான முயற்சி; இது மிக வரவேற்கத் தக்க பணியுமாகும். இறை வழிபாடு முறைகள், நியமங்கள் பற்றி ஆஸ்திகப் பெரியார்களிட மிருந்து சாதாரண மக்கள் எவ்வளவோ அறிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. அப்படி வழிபாட்டுமுறை அறிவைப் பரப்புவதில் இதுபோன்ற சிறப்பு மலர்கள் பெரிதும் பயன்படும். தங்கள் முயற்சி வெற்றி பெறவும், அதன் மூலம் மக்கள் பயனடைந்து இறை அருள் பெருகவும் உளமாரப் பிரார்த்திக்கிறேன்.

# அணிந்துரை

[திரு. அ. உத்தண்டராமன், ஐ.ஏ.எஸ்., ஆணையாளர், அறநிலையத்துறை, சென்னை]

எப்போதகத்தும் நினைவார்க் கிடரில்லை
கைப்போதகத்தின் கழல்.

காவி என்குடிலுறு காமர் பொன்னகர்
மேவினன் குடிவா விளியச்சூர் முதல்
பூவினன் குடிலை யம்பொருட் குமாலுற
ஆவினன் குடிவரும் அமலற் போற்றுவாம்!

கூறுடையாளும் குன்றாக்
குணப்பெருங்குன்று ஞானப்
பேறுடைப் பழநீ யென்னப்
பெயரது மருவி யெங்க
ளாறுமுக வன்வைகும்
நகரமுமன்று தொட்டு
வீறுதொல் பழநீ யென்றே
விளம்பின உலக மூன்றும்!

ஆறுமுகத்தில் அதிபதி நான் என்றும்
கூறுசமயக் குருபரன் நான் என்றும்
தேறினர் தெற்குத் திரு அம்பலத்துள்ளே
வேறின்றி அண்ணல் விளங்கி நின்றானே!

முருகப் பெருமானுக்கு உரிய தலங்களாக திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை என்ற ஆறையும் நக்கீரர் தம்முடைய திருமுருகாற்றுப் படையில் கூறியுள்ளார். இத்தகைய வகுப்பை முதலில் தோற்றியவர் அப்புலவர் பெருந்தகையாரே. ஆறு திருமுகங்களையுடைய குமரக் கடவுளுக்கு ஆறு இடங்களைச் சிறப்பித்துக் கூறியிருப்பது அப்புலவரின் நுண்மாண் நுழைபுல



மாட்சியைக் காட்டுகிறது. இதையே பிற்காலத்தில் ஆறுபடை வீடுகள் என்று வழங்கிவரலாயிற்று. உண்மையில் திருச்செந்தூர் ஒன்றே படைவீடாகும். குமரகுருபர முனிவரும் "ஆறு திருப்பதி கண்டு ஆறெழுத்தும் அன்பினுடன் கூறு மவர் சிந்தைகுடி கொண்டோனே" என்றும், அருணகிரிநாதர் "ஆறு திருப்பதியில் வளர்பெருமாளே" என்றும் கூறியிருத்தல் காண்க. இந்த ஆறு தலங்களில் மூன்றாவதாக வைத்து ஓதப்பெற்றிருப்பது திரு ஆவினன் குடி. இது பழனிமலை அடிவாரத்தில் உள்ளது. இத்தலம் முல்லை நிலத்தது. இத்தலத்தில் திருமுருகன் காட்சியைக்காண தேவர், மூவர், முனிவர் எல்லோரும் வருகின்றனர். என்று திருமுருகாற்றுப்படையில் கூறுகிறார். மயிலுக்குப் போர்வை ஈந்த வள்ளலான வையாவிக் கோப்பெரும்பேகன் என்ற அரசன் தன் தலைநகராக இவ்விடத்தைக்கொண்டு ஆண்டுவந்தான். ஆவியர் குலத் தலைவனான அவன் இங்கிருந்தமையால் ஆவினன்குடி என்ற பெயர் ஏற்பட்டது.

"வல்லமை செறிந்த திருவாவினன்குடி நாடு" என்று கொங்குமண்டல ஊர்த்தொகை நூலிலும், "சேரர் கொங்குவைகாவூர் நன்னாடதில் ஆவினன்குடி வாழ்வான தேவர்கள்பெருமாளே" என்று திருப்புகழிலும் கூறக் காண்கிறோம். திரு + ஆ + இனன் + கு + டி என்று திருமகள், காமதேனு, சூரியன், பூமி, அக்கினி இவர்கள் வழிபட்ட இடமென்றும் பிற்காலத்தில் தலபுராண முடையார் கூறியிருக்கின்றனர். இவ்வைவர் உருவங்களையும் கோயிலில் அமைத்திருக்கின்றனர்.

பழனி என்பது குன்றின் மேலுள்ள திருக்கோயிலைக் குறிப்பது. பொதினி என்பது அதன் பழம் பெயர். அப்பெயரே மாறி

பழனி ஆயிற்றென்றும், பழனங்கள் சூழ்ந்த இத்தலம் பழனியாயிற்றென்றும் ஆராய்ச்சி யாளர் கருதுகின்றனர். மாமூலனார் என்ற புலவர்,

'நெடுவேள் ஆவி
அறு கோட்டியானைப் பொதினி,
முழவுறழ் திணிதோள் நெடுவேள் ஆவி
பொன்னுடை நெடுநகர்ப் பொதினி'

என்று கூறுவதால் ஆவினன்குடியாகிய ஊரையும், பொதினியாகிய மலையையும் உடையவன் ஆவியர் கோனான பேகன் என்று அறிகிறோம்.

பழனி என்ற பெயர் வருவதற்கு வேறு காரணமும் கூறப்படுகிறது. சிவபெருமான் திருமுன்னர் நாரதமுனிவர் ஒரு பழத்தைப் படைத்தார். விநாயகரும் முருகரும் இரு மருங்கும் அமர்ந்திருந்தனர். அவர்களை நோக்கிச் சிவபெருமான், "உங்கள் இருவரில் எவர் முதலில் உலகத்தைச் சுற்றி எம்மை அடைகின்றீரோ அவரே இந்தப் பழத்தைப் பெறும் தகுதியுடையவர்" என்று அருளினார். உடனே தனது கோலக்கலாப மயில் மீதேறி உலகத்தைச் சுற்றிவரப் புறப்பட்டார் குமாரமூர்த்தி. அவர் வருவதற்குள் விநாயகப்பெருமான் அம்மையப்பரைச் சுற்றி வந்து வணங்கி பழத்தைப் பெற்றார். உலகை நொடிப்பொழுதில் வலம் வந்து சேர்ந்த அறுமுகன் அதுகண்டு கோபம் கொண்டு பொதினி மலைமேல் போய்த் துறவுக் கோலம் பூண்டு நின்றார். சிவபெருமானும் உமாதேவியும் அம்மலைக்கு எழுந்தருளி "பழம் நீயாக இருக்கையில் உனக்கு வேறு பழம் எதற்கு" என்று கூறித் தேற்றினர். அவர்கள் கூறிய பழம்நீ என்ற தொடரே பழநி ஆயிற்றென்று தலபுராணம் கூறும். முருகன் உலகத்தைச் சுற்றிவந்தது இறைவன் வியாபக சக்தியையும், ஆற்றலையும், கணபதி இறைவனை வலம்வந்தது சகலப் பிரபஞ்சங்களும் அவனுள் அடக்கம் அவன் எல்லா உயிர்களுக்குள்ளும் உயிர்க்குயிராய் நின்று ஆட்டிவைக்கிறான் என்னும் ஞானத்தையும் குறிக்கும் என்ற தத்துவ உண்மைகளை இவ்வரலாறு விளக்கும் என்று மேலோர் கருதுவர். அகத்தியருடன் இடும்பன் கொண்டுவந்த சத்திகிரி, சிவகிரி, குராமர வரலாறும் காவடி எடுப்போர்க்குப் பலனும் தனக்கு வாயில் காக்கும் பணியும் வரங்களாக இடும்பன் வரம் பெற்றதும் யாவரும் அறிந்ததே. தமிழ் மூதாட்டியாராகிய ஔவையார் இத்தலத்தைச் சித்தன் வாழ்வு எனக் கூறியுள்ளார். போகர் என்ற சித்தர்ஆதியில் நவபாஷாணங்கள் சேர்க்கையால் ஆண்டவர் திருவுருவத்தை யமைத்து அவரால் வழிபடப்பெற்றதாலோ அல்லது எல்லாம் வல்ல சித்தன் என்ற நாமம் தனக்கேயுடைய கலியுகவரதனாகிய முருகப் பெருமான் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருப்பதாலோ இப்பெயர் வழங்கப் பெற்றிருக்கலாம். போகர் சமாதியும் அவர் வழிபட்ட புவனேசுவரி திருவுருவமும் மலைக் கோயில் உட்பிரகாரத்தில் தென்மேற்கு மூலையில் உள்ளன. முத்தீ வளர்த்து வேள்விகள் இல்லந்தோறும் செய்யப்பெற்றன என்ற குறிப்பும் இந்நகரின் சிறப்பை நன்கு விளக்கும்.

"நல்லம்பர் நல்ல குடியுடைத்துச் சித்தன் வாழ்வு
இல்லந்தொறுமூன் றெரியுடைத்த—நல்லரவப்
பாட்டுடைத்துச் சோமன் வழிவந்த பாண்டிய நின்
நாட்டுடைத்து நல்லதமிழ்"
—என்பது ஔவையார் வாக்கு.

இத்தகு பழமை, மகிமை, பெருமை தூய்மை எல்லாம் ஒருங்கே வாய்ந்த பழனியம்பதியில்தண்டாயுதபாணி எழுந்தருளியுள்ள கோயிலுக்கு 29-8-60 அன்று மகாகும்பாபிஷேகம் நடைபெறுகிறது. கும்பாபிஷேகத்தின் நினைவாக தேவஸ்தானத்தார் ஒரு மலரை வெளியிடுவது சாலப்பொருத்தமானதே. அந்த மலரில் பல பேரறிஞர்களின் கட்டுரைகளும், அறநிலைய அமைச்சர், நிதியமைச்சர் இவர்களின் வாழ்த்துரைகளும் இடம்பெற்றிருக்கின்றன.

பேராசிரியர் திரு. ஜி. சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள் தமது "தமிழ்ப் பன்னீரால்" நம் உள்ளத்தையும் உடலையும் குளிர வைக்கிறார்கள். திருப்புகழ்மணி திரு டி. எம். கிருஷ்ணசாமி அய்யர் அவர்கள் இறைவனுக்குச் செய்யப்பெறும் கும்பாபிஷேகம் அவன் உயிர்க்குயிராய்த் தங்கியிருக்கும் ஒவ்வொரு இதயத்திலும் நடைபெறும் கும்பாபிஷேகம் என்று காட்டியுள்ளார்கள். திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள் காயைக் கனியவைக்கும் எம்பெருமான் வீற்

திருக்கும் பழனியம்பதியைக் குறித்து 'பழனி' என்ற தலைப்பில் கட்டுரை வழங்கியுள்ளார்கள். திருவாசகமணி கே.எம். பாலசுப்பிரமணியம் அவர்கள் மூன்று கீர்த்தனைகளைப் பாடியுள்ளார்கள். திருமதி. காமாட்சிகுமாரசாமி அவர்கள் "திருமுழுக்குச் சிறப்பு" என்ற கட்டுரையில் கும்பம் திருமுழுக்குப்பெற்றுத் தூய்மை அடைவதுபோல உலகத்துயிர்களும் அகத்தூய்மை புறத்தூய்மை பெறும் என்னும் நம்பிக்கையை நமக்கு ஊட்டுகிறார்கள். வடமொழிப்பேராசிரியர் திரு பி. ஞானசம்பந்தம் அவர்கள் 'குமரன் திருவிளையாடல்" என்ற தலைப்பில் காளிதாச மகாகவியின் குமாரசம்பவத்திலிருந்து சில காட்சிகளை நம் கண்முன்னே நிறுத்தி, ஆதி சங்கரரின் சுப்பிரமணிய புஜங்கத்திலிருந்து தோத்திரம் ஒன்றைக்கூறி முடிக்கிறார்கள். குகஸ்ரீ ரசபதியவர்கள் இனிய எளிய முறையில் 'பழனித் தேவர்' என்ற கட்டுரையில் பழனியில் தொண்டுசெய்து பேறுபெற்ற அடியாரின் வரலாற்றைச் சித்தரித்துக் காட்டியுள்ளார்கள். 'கலைமகள்' ஆசிரியர் திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் "சங்க நூல்கள் கூறும் பழனி" என்ற கட்டுரையில் சங்க இலக்கியத்தில் காணப்படும் குறிப்புக்களைத் தொகுத்து நன்கு விளக்கியுள்ளார்கள். இலஞ்சி திரு. ஐ. ஏ. சிதம்பரம்பிள்ளையவர்கள் "கந்தர் அலங்காரத்தின்" சிறப்பை நன்கு விளக்கியுள்ளார்கள். கோவை திரு சி. எம். இராமச்சந்திரன் செட்டியார் அவர்கள் "சமயநெறிகளிலும் மாறுதல்" என்ற ஆராய்ச்சிக் கட்டுரை யொன்று வழங்கியுள்ளார்கள். அரசாங்க அறநிலையத் துறை வெளியீடான "திருக்கோயில்" இதழின் ஆசிரியர் திரு. ஜி. கலியாணம் பிள்ளை அவர்கள் 'தமிழ் இலக்கியத்தில் முருகன்' என்ற கட்டுரையில் பழங்காலத்திலிருந்து அண்மைவரையிலுள்ள நூல்களில் முருகனைப்பற்றிக் கூறப்படும் குறிப்புக்களைத் திரட்டிக் கொடுத்திருக்கிறார்கள். தண்டாயுதபாணி தேவஸ்தான தருமகர்த்தக் குழுத்தலைவரான திரு. பி எஸ். கே. இலட்சுமிபதிராஜு அவர்கள் 'பழனித்தல வரலாறு' என்ற தலைப்பில் திருவாவினன்குடி, பழனிமலை, பெரியாவுடையார் கோயில், கைலாசநாதர் கோயில் முதலியவைகளைப் பற்றிய செய்திகளை நன்கு விளக்கியுள்ளார்கள்.

மேற்சொன்ன கட்டுரைகளேயன்றி வேறுபல அறிஞர்கள் கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன. மேலும் கோயில் திருப்பணிகள், கோயிலைச்சார்ந்த ஏழைகள் விடுதி' தேவஸ்தானத்தாரால் நடத்தப்பெறும் நாத சுவரக் கல்லூரி, தேவார இசைப்பள்ளி, வேதாகம பாடசாலை, கீழ்த்திசைக்கலைக் கல்லூரி, இக்கோயிலிலிருந்து பிற கோயில்களுக்கு நன்கொடையாக வாரிவழங்கப் பெற்ற தொகைகள் முதலிய பல விவரங்களும் இம்மலரில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. கும்பாபிஷேக மலருக்குக் கட்டுரைகள் வழங்கிய பேரறிஞர்களுக்கும், இதை வெளியிட்ட தேவஸ்தான திருப்பணிக்குழுவினருக்கும் சைவத் தமிழுலகம் நன்றி பாராட்டும் கடப்பாடுடையது.

இந்தத் திருக்கோயிலில் நடைபெறவிருக்கும் கும்பாபிஷேகம் 33 குண்டங்களையும், 64 பதங்களையும் கொண்ட மாபெரும் வைபவமாகக் கொண்டாடப்பெறும். சாதாரணமாக பஞ்சகுண்டங்கள் நவகுண்டங்களையே பார்த்து மகிழ்ந்துவரும் சைவப் பெருமக்கள் இம்மாபெரும் 33 குண்டங்கள் அமைந்த யாகசாலைப்பூஜைகள் திருமறைகள் திருமுறைகள் முழக்கம் முதலிய கண்கொள்ளாக்காட்சிகளைக்கண்டு கேட்டுக் களிக்கும் பெரும் வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்வார்களென்று நம்புகிறேன்.

'கையாலுனைத்தொழச் சென்னியினாலுன்
கழல் வணங்க
மெய்யாயடிக் கடிவாக்காற்றுதிக்க
விதித்து மனம்
நையாவியற் கையுநல்கினி
யென்னை நழுவவிடேல்
ஐயாவுனக் கபயம்
பழனு புரியாண்டவனே'

'பரமகுருபர எனு முரை பர சொடு
பரவியடியவர் துதிசெய மதி தவழ்
பழனிமலை தனிலி னிதுறை
யமரர்கள் பெருமானே!

'உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே'

# கடவுள் வாழ்த்து

கங்கைக் கொருமா மகனே ! குகனே !
கனியே ! கண்மணியே !
கருணு லயமே ! மறையோர் தவமே !
கருதும் பெருவாழ்வே !
திங்கட் சடிலன் மகிழுங் குருவே !
தேவர்கள் பணிகோவே !
தெய்வச் சுருதிப் பொருளே ! பொருளின்
தெளிவே ! களிகூரும்
துங்கப் புயனேர் திருமால் மருகா !
சோதிச் சுடரொளியே !
தோகைக் குடையாய் ! நீபத் தொடையாய்
சொல்லுக் கினி யானே !
சங்கத் தொருவா ! பழநித் தலைவா !
தாலோ தாலேலோ
தமிழால் உயரும் சிவமா மலையாய்
தாலோ தாலேலோ.

*—பழநி பிள்ளைத்தமிழ்*

— பழநி. விசையைகிரிவேலச் சின்னுவையன்.

அபகார நிந்தைபட் டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
உனைநானி னைந்தருட் பெறுவேனே
இபமாமுகன் தனக் கிளையோனே
இமவான் மடந்தையுத் தமிபாலா
ஜெபமாலை தந்தசற் குருநாதா
திருவாவினன் குடிப் பெருமாளே

*—பழநித் திருப்புகழ்.*

மாதா பிதா குருதெய்வங்களெலாம் இங்கெனக்கு
நீதான் எனவிலக்கல் நீதியன்ருல்—ஆதாரம்
வேறுணர்கிலேன் பழனிவித்தகா வெவ்வினையை
நீறு செயல்வேண்டும் இன்றே நேர்ந்து

*—மாம்பழக்கவிச்சிங்கநாவலர்.*

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே

*—கந்தரனுபூதி.*

பற்றுக பற்றற்ருன் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்றுவிடற்கு. *—குறள்.*

உலகத்தார் உண்டென்பது இல்என்பான் வையத்து
அலகையா வைக்கப்படும். *—குறள்.*



திரு. K. காமராஜர்



திரு. M. பக்தவத்சலம்



திரு. C. சுப்பிரமணியம்



திரு. M. மாணிக்கவேலர்



திரு. P. கக்கன்



திரு. V. இராமையா



திரு. R. வெங்கடராமன்



திருமதி. லூர்தம்மாள் சைமன்



திரு. P. S. சீனிவாசன்
செட்டியார்

உறுப்பினர்கள்

திரு. V. V. C. R
முருகேசமுதலியார்



## ஆலய ஆட்சிக் குழுவினர்



திரு. P. S. K. இலட்சுமிபதிராஜு, M.L.A.
தலைவர்



திரு. S. R. ஆறுமுகம்,
M.P.

உறுப்பினர்கள்

திரு. A. S மாணிக்கம்
பிள்ளை



## முன்னாள் ஆட்சிக் குழுவினர்



திரு. ஏ. அருணாசலம் பிள்ளை



திரு. G. R. கோவிந்தராஜுலு நாயுடு



திரு. I. T. ஒபளக்கொண்டம நாயக்கர் அய்யன்



திரு. S. C. பாலகிருஷ்ணன் M. P



திரு. M. P. மங்கல கவுண்டர்

# பொருளடக்கம்


1. பழனித்தல வரலாறு—P. S. K. இலட்சுமிபதிராஜு, M.L.A.
2. பழனி—திருமுருக கிருபானந்தவாரியார்.
3. திருமுழுக்குச் சிறப்பு—காமாட்சி குமாரசாமி, M.A.
4. பழனியில் கும்பாபிஷேகம்—திருப்புகழ்மணி T. M. கிருஷ்ணசாமி அய்யர், B.A., B.L.
5. தமிழ்ப்பன்னீர்—G. சுப்பிரமணிய பிள்ளை, M.A., B.L.
6. கந்தரலங்காரம்—I. A. சிதம்பரம் பிள்ளை, M.A., M.L.C.
7. குமரன் திருவிளையாடல்—பெ. ஞானசம்பந்தம், M.A.L.T.
8. காசியில் மீறிய பழனி—P. K. சண்முகநாதன், B.A., B.L.
9. பழனி ஆண்டவர் கீர்த்தனங்கள்—திருவாசகமணி K. M. பாலசுப்பிரமணியம், B.A., B.L.
10. சமயநெறிகளிலும் மாறுதல்—C. M. இராமச்சந்திரன் செட்டியார் B.A., B.L.
11. சிவபெருமான் பெற்ற பெருஞ்செல்வம்—ஒண். கி. சந்திரசேகரன், M. A., B.T., M. O L.
12. பழனித்தேவர்—குகஸ்ரீ ரசபதி.
13. தமிழ் இலக்கியத்தில் முருகன்—G. கலியாணம், M.A.
14. சங்க நூல் கூறும் பழனி—கி. வா. ஜகந்நாதன், M.A.
15 ஸ்ரீ காந்தவிமானம்.
16. தேவஸ்தான முன்னாள் அறங்காவலர்கள்.
17. தேவஸ்தான ஆட்சியிலுள்ள கோயில்கள்.
18. ஆண்டவர் அபிஷேக அர்ச்சனை விவரங்கள்.
19. தேவஸ்தானத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் திருப்பணிகள்.
20. தேவஸ்தானத்தில் நடைபெற்ற திருப்பணிகள்.
21. தேவஸ்தானத்தில் நடைபெறவிருக்கும் திருப்பணிகள்.
22 தேவஸ்தானத்தால் நடைபெறும் நிலையங்கள்.
23. தேவஸ்தானத்திலிருந்து மற்ற கோயில்களுக்கு நன்கொடைகள்.
24. யாகசாலை குண்டங்களின் விவரம்.
25. கும்பாபிஷேக 33 குண்ட யாகசாலை தத்துவங்கள்.
26. தேவஸ்தான முன்னாள் இறைபணியாளர்கள்.
27. தேவஸ்தான வருமான விபரம்.
28. நினைவூட்டுதல்.


விலை ரூ. 1-50

# பழநித் தல வரலாறு

திரு. P. S. K. இலட்சுமிபதிராஜு M.L.A.,
ஆலய ஆட்சிக்குழுத் தலைவர், பழனி.

அறிவாகிய கோயிலிலே
அருளாகிய தாய் மடிமேல்
பொறிவே லுடனே வளர்வாய் அடியார்
புதுவாழ்வுறவே புவிமீதருள்வாய்
முருகா முருகா முருகா
—பாரதியார்.

## 1. திருவாவினன்குடி

இது பழநிமலை அடிவாரத்திலுள்ள குழந்தை வேலாயுதர் புராதன சந்நிதி. ஆறு படைவீட்டுத் தலங்களுள் மூன்றாவது தலம். திரு-இலக்குமியும், ஆ-பசுவும்-காமதேனுவும், இனன்-சூரியனும் பூசித்த தலமாதலில் இப் பெயர் வந்தது. குடி-தலம். குடி என்பதற் குத் தலமென்னும் பொருளேயன்றி கு-பூமி யும், டி-அக்கினியும் பூசித்ததென்றும் கூறு வர். திருக்கோயில் கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம் இவைகளை காரைக்குடி நா. மு. இலட்சுமணன் செட்டி யார் அவர்களால் புதுப்பிக்கப் பெற்று சாதா ரண வருஷம் ஆனி 13-ல் கும்பாபிஷேகமும் நடைபெற்றது. இங்கே ஆண்டுதோறும் பங்குனி உத்திரத் திருநாள் சிறப்பாய் கொண்டாடப் பெறும். முருகப்பிரான் வீற் றிருந்தருளும் பழமையான தலம் இதுவே.

## 2. பழநி மலை

திருவாவினன்குடியைச் சார்ந்த பழநி மலை, "சிவகிரி" என்று சொல்லப்படும். இது முன்பு ஒரு காலத்தில் தமிழ் முனிவ ராகிய அகத்தியர், சிவபெருமானையும் உமா தேவியாரையும் இரண்டு மலை வடிவிலே பாவித்துப் பூசிக்க விரும்பி, இறைவனைப் பிரார்த்தித்தபோது கந்தகிரியிலுள்ள இணை பிரியாத இரண்டு மலைகளை அங்ஙனமே பூசிக்குமாறு அளித்தனர். அவர் அந்த இரண்டு மலைகளையும் கொண்டு வந்து இமய மலை திருக்கேதாரத்தையடுத்த பூர்ச்சவனத் திலே சிவசக்தி வடிவாகப் பாவித்துப் பூசித்து வைத்துவிட்டுப் பொதிகையை நோக்கி நடந் தார். அது சமயத்தில் சூரபன்மன், சிங்க முகன், தாரகன் முதலாயினோருக்கு வில் வித்தை கற்பித்த இடும்பா சூரன் தன் மனைவி யுடன் முனிவரை எதிர்கொண்டு வணங்கித் தேவரீர்! அடியேனை ஆட்கொண்டருள வேண்டுமென்று பிரார்த்தித்தான். அவன் வேண்டுகோளுக்கிரங்கிய முனிவர், "அவ் வாறேயாகுக" வென்று கூறி, "அன்பனே! நீ திருக்கேதாரத்தைச் சார்ந்த பூர்ச்சவனத்தி லுள்ள இரண்டு மலைகளையும் நம் பொதிகைக் குக் கொண்டு வருவையேல் பெறுதற்கரிய பேற்றை அடைவாய்" என்று கூறி, அவற் றின் மகிமைகளையும், ஆங்குச் செல்லும் வழி களையும் தெரிவித்து, முருகக் கடவுளுடைய ஆறெழுத்தையும் (ஷடாக்ஷரம்) அதனைக் கணிக்குமுறையையும் உபதேசித்து அனுப் பினர்.

இடும்பன் தன் மனைவியுடன் அங்ங னமே சென்று பல பல தலங்களையும் தரி சித்துக்கொண்டு பூர்ச்சவனத்தில் அந்த மலை களைக் கண்டு தொழுது வணங்கி முனிவரர் உபதேசித்த முறைப்படி சடாக்கரமந்திரத் தைக்கணித்துத் தண்டு கயிறு முதலியன வந்து பொருந்தக் காவடியமைத்து அந்த மலைகளி ரண்டையும் காவடி எடுப்பார்போலக் காவிக் கொண்டு, நடந்து, விந்தமலை, மல்லிகார்ச்சு னம், திருக்காளத்தி, திருவண்ணமலை, விருத் தாசலம், புட்பகிரி, சென்னிமலை வழியாக வந்து வழிதெரியாது மயங்கி நிற்பச், செவ் வேள் அரசகுமாரவடிவங்கொண்டு வராக மலை வழியே சென்று பொதிகைக்குப் போவாயாக, என, வழிகாட்டியபடியே வந்து, வராகமலைக்கு வடக்கேயுள்ள திருவா வினன்குடியை யடைந்தான். திருவாவினன் குடியடைந்ததும் முருகப்பெருமான் திருவரு ளால் மலைகளிரண்டும் அதிகப் பாரமாகத் தோன்றக் கால்களும் தளர்ச்சியுறத், தாகமும் பசியும் வருத்த, இருமலைகளினது சுமையை நிலத்தில் வைத்து, இடும்பி யுதவிய காய் கனிகளையுண்டு வழியினைப்பாறி மீண்டும்

மலைகளைத்தூக்க ஆரம்பித்தான். புயங்கள் முறிந்தன; முழந்தாளும் கால்களும் ஒடிந்தன; விழிகள் பிதுங்கின; இதற்குக்காரணம் யாதென்று கண்டு இது செய்தவனைத் தண்டிக்கவேண்டுமென்று பார்த்தான். சிவகிரியின்மீது குராமரத்தின் நிழலில் மழலை முதிர்ந்த கனிவாய்ச்சிறுவன் தனியே நிற்பதைக் கண்டு, கோபம் நீங்கி மகிழ்ச்சி மிகுந்து, இக் கட்டழகுடைய பாலன் இயக்கனோ! தேவர்களுள் ஒருவனோ! மந்திரம் மாயையிவற்றைப் பயின்றவனோ! மற்றியாவனோ! அறியேன் என்று, அவரது அழகியகுஞ்சியும், கருணை ததும்பும் கண்களும் அழகுபொழியும் திருமுகமும், உபவீதம் அணிந்த மார்பும், தண்டாயுதமும், கோவணவுடையுடன் நிற்கும் நிலையையும் பார்த்து, "நீ யாரென்னச்". செவ்வேள் புன்னகைபுரிந்து, மவுனமுற்றார். இடும்பன் சினந்து, "மலையை விட்டு அப்பால் செல்லுக," என்றான். குழந்தை வேலர் "இவை நமக்கு இனிய இருக்கையாகும்; இதனை இங்கே வைத்துச் செல்லுதல் நன்று. இல்லையேல் உனக்கு வலிமையிருந்தால் கொண்டு செல்க" என்றார். இடும்பன் சீறிச் சினந்து முருகவேள்மீது பாய்ந்தான்; பாய்ந்த போது ஐயனது தண்டாயுதமோ! வேலாயுதமோ! அவனைக் கொன்றது. மந்திரவலியினால் வந்துபொருந்திய, பிரமதண்டும், பாம்பின் கயிறுகளும் மின்போலமறைந்து அகத்திய முனிவர்க்குத் தெரிவித்துத் தத்தம் இருக்கை சேர்ந்தன.

இதனையறிந்த இடும்பி வந்து மாங்கல்யப் பிச்சை தந்தருளுமாறு துதித்து வேண்டி நின்றாள். செவ்வேளும் இடும்பனைக் கடைக் கணித்தார்; அவன் எழுந்தான்; செவ்வேளின் திருவடியில் வீழ்ந்தான்; பிழைபொறுக்க வேண்டினான்; இத்திருமலையிலிருந்து தேவரீருக்குத் திருத்தொண்டு புரிந்துகொண்டிருக்குமாறு கருணைபுரிய வேண்டுமென்று திருவடி தொழுது நின்றான்; ஐயனும் அவ்வாறே அருளிமறைந்தருளினார். செவ்வேளை வழிபடும் அடியார்கள் முதலில் இடும்பனை வழிபட்டே பின்பு பெருமானைத் தரிசிக்கலானார்கள். அன்றுமுதல் சிவகிரியானது ஞானதண்டாயுதபாணி வீற்றிருக்கும் இனிய இருக்கையாயிற்று. இங்கே சிவபெருமான் உமாதேவியார் ஞானதண்டாயுதபாணி, வள்ளிதேவசேனாசமேத சண்முகர், தண்டாயுதபாணி உத்சவமூர்த்தி, நவவீரர்கள் மற்ற பரிவாரங்கள் சந்நிதிகளும் போகர் சந்நிதியும் உண்டு.

## பழநி என்னும் தலப் பெயர்க்காரணம்

சிவபெருமான் உமாதேவியாருடன் வீற்றிருக்கும் திருக்கோலத்தைக் காணவந்த நாரதர் தாம் கொண்டுவந்த மாதுளம் பழத்தைப் பெருமான் முன்வைத்து வணங்கினார். இறைவன் பரங்குன்றில் முன் நிகழ்ந்த பிரமன் சாபத்தை நினைத்தருளி, உலகுக்கெல்லாம் இனிய பழம் ஒன்றை அளிக்க விரும்பி ஒரு திருவிளையாட்டாக இவ்வுலகனைத்தையும் யார் விரைந்து வலம் வருகிறார்களோ அவர்களே இதனைப் பெறுதற்குரியாரெனக் கணபதியையும் கந்தவேளையும் பார்த்துக்கூறினர். கந்தவேள் விரைந்து வலம் வரச்சென்றார். கணபதி அம்மையப்பரை அங்கேயே வலம்வந்து, "உலகெலாமாயிருப்பவர் நீரே! தங்களை வலம் வந்தது உலகை வலம் வந்ததனோடொக்கும்; ஆதலால் கனியைத் தந்தருள்க" என வேண்டிக் கனியைப் பெற்று இனிதிருந்தார். வலம் வந்த முருகவேள் கயிலையையடைந்து மூத்தப் பிள்ளையார் கையில் கனியிருப்பதைக்கண்டு பிணங்கினவர் போன்று திருவாவினன் குடியையடைந்து அடியராயினார்க்கு இட்ட சித்திகளை அளித்திருந்தனர்.

கயிலையில், உமாதேவியார் இதனையறிந்து ஆற்றாது இறைவருடன் திருவாவினன்குடியடைந்து, முருகவேளைக்கண்டு வாரியெடுத்து மார்புறவணைத்து, இன்சொல் வழங்கிச் "செல்வக் கண்மணியே! நீ என்றும் இளமையுடையாய், எல்லாவறிவும், எல்லா முதன்மையுமுடையாய், நீ சிறுவனோ? இல்லை! இல்லை! பெரியரிற் பெரியன், உன்னையன்றி மாதுளங் கனிக்கு ஒரு சுவையுண்டாமோ? நீயே என்றுந் தெவிட்டாத பேரின்பச்சுவையைக் கொடுக்கும் சிவஞானப் பழம் ஆவை. அங்ஙனமுள்ள பழம் நீயாகவும் நினக்கு வேறுபழமும் வேண்டுமோ "பழம் நீ" என்று உலகெலாம் அறியக்கூறினார். இதனால் அன்றுமுதல் திருவாவினன் குடியும் சிவகிரியும் பழநி என்னும் திருப் பெயரால் வழங்கலாயின.

பின்பு, தெய்வத்தச்சனால் அமைக்கப் பெற்ற ஆலயத்தில் ஞானதண்டாயுதபாணி

யாய் வீற்றிருந்து, அகத்தியர், போகர், புலிப் பாணி முதலாயினேரும், சேர, சோழ பாண்டிய மன்னர்களும் பல திருத்தொண்டு செய்யப்பெற்றுச் சேர அரசரால் புதுக்கு வித்த திருக்கோயிலில் எழுந்தருளி, இப் பழனிமலையைச் சார்ந்த குறுநில மன்னர்கள் குகனடியார்களால் பல திருப்பணிகளும் செய்யப் பெற்று இன்றுவரை, நாளுநாளுஞ் சீருஞ்சிறப்புமெய்த காண்டற்கரிய காட்சி தந்து தமதடியார்களைச் சிவஞானச் செல்வர் களாய்த் திகழுமாறு அருள்புரிந்துவரு கின்ருர்.

## 3. பெரியாவுடையார் கோயில்

இந்தத்தலம் பழநிக்கு வடக்கில் 3 மைலில் உள்ளது. மிகப்பழைமையானது. இது, கன்னிதாரவனம், கோங்குவனம். இதற்கு வடமொழியில் "பலினி" என்று பெயர். சிவபுரம், கோசலபுரம், வன்னிபுரம், புயங்கபுரம், பிரமபுரம், விஷ்ணுபுரம், திருக் காமகோட்டம் என்னும் பெயர்களும் பெற் றது. இங்குள்ள சிவபெருமானுடைய சிவ லிங்கத்திருவுருவம் உளியினல் செதுக்கப் பெருது பாதாளத்தினின்றும் தோன்றிய சுயம்பு இலிங்கமாம். பெருவுடையார் (பிரஹ தீஸ்வரர்) என வழங்குவர். உமாதேவியா ருடைய திருவுருவம் தனித்து இக்கோயிலில் இல்லை. அக்கினிக்குச் சூடுபோல இறை வனைவிட்டுப் பிரியாத சக்தியை நமக்கு அறி விக்கவேண்டி சிவம், சத்தியென இருகூருய்ப் பிரித்து வழிபாடு செய்யுங்காலத்துக்கு முன்னர் அமைத்த பழமையான தலம். இது "மாதோர் பாகம் திருவினுள் சேர்வதற்கு முன்னே பின்னே திருவாரூர் கோயிலாகக் கொண்ட நாளே" என்னும் தேவாரச் சுருதிக்கேற்ப மிகத் தொன்மையான சிவ லிங்கம். இவரை முன்பு, பிரம, விஷ்ணுக் கள் பூசித்துப் பேறுபெற்றனர். உமாதேவி யார் இதன் பெருமை கேட்டுத் தவஞ்செய்து இறைவனை மணந்தனள். அக்கினி, சேடன், சௌசலசேரன், பிரமேந்திரன், நித்திய நாதன், சுவர்ணகுப்தன், வசுமந்தன் முதலிய மெய்யடியார்கள் நான்குயுகங்களிலும் பூசித் தது. இத்தகைய பரமகாருணியராகிய இறைவனை வழிபாடுசெய்து விரும்பிய பேறு களை அடைவார்களாக.

## 4. கைலாசநாதர், பெரியநாயகியம்மன் சந்நிதி

இது ஊர்க்கோயில், என வழங்கும். இங்குதான், இறைவனைக் குறித்துத் தவஞ் செய்த உமாதேவியார் திருவுருவமும் அவர் க்கிரங்கிக் கயிலையினின்று வந்து காட்சி தந்த கைலாசநாதர் திருவுருவ மும், இவ்விருவர் அன்புக்குரிய ஸ்ரீ வள்ளி தேவசேனசமேத சுப்பிரமணிய சுவாமி மூலத்தானமும், பழநி ஆண்டவர், திருவா வினன்குடி குழந்தை வேலாயுதர், மேற் கண்ட மூலத்தானம், சுப்பிரமணிய சுவாமிக் கும் பிரதிநிதியாக, தை, பங்குனி, வைகாசி மாதம் முதலிய எல்லா திருத்தேர்உலா சிறப் புக்களையுங் கொண்டருளும், ஸ்ரீ வள்ளி தேவசேன சமேத ஸ்ரீ முத்துக்குமாரசாமி திருவுருவமும், திருக்கோயிலுக்குள்ள எல்லாப் பரிவார மூர்த்திகளும், திருக் கோயில்களுக்கு வேண்டப்படும் இரதம், வெள்ளித்தேர் யானைகள் முதலிய உற்சவ அங்கங்கள் குறைவறவமைந்தது. இங்கே தை மாதம், வைகாசி மாத விழாக்களும் மற்ற மகோற்சவ பட்சோற்சவங்களும் நடைபெற்று வருகின்றன.

இன்னும் இந்தச் சிறந்த தலத்தைச் சார்ந்த பலதலங்களும் அவற்றின் வரலாறுகளும் விரிக்கிற் பெருகும். **பழநித்தல புராணம், பழநித்தல மகத்துவம்** முதலிய விரிந்த நூல்களுள் கண்டுகொள்க.

# பழநி

[திருமுருக - கிருபானந்தவாரியார்]

பழநியைப் பலகாலும் சிந்திக்க வேண்டும். வந்திக்க வேண்டும். 'பழநி' 'பழநி' என்று வாய்குளிரச் சொல்லி வாழ்த்த வேண்டும்.

"படிக்கின்றிலை பழநித் திருநாமம்
படிப்பவர்தாள் முடிக்கின்றிலை"

என்கிறார் அருணகிரிநாதர்.

இந்த வாக்கு உயிருள்ள வாக்கு, நமக்கு உயிர் தருகின்ற வாக்கு, உயிரினும் உயர்ந்த உத்தம வாக்கு. சொன்னவர் வாக்கிற் பெரியவர்.

அரும்பு மலராகின்றது; மலர் காயாகின்றது; காய் கனியாகின்றது.

அரும்பு — சரியை
மலர் — கிரியை
காய் — யோகம்
பழம் — ஞானம்

விரும்புஞ் சரியை முதல் மெய்ஞ்ஞானம் நான்கும்
அரும்புமலர் காய்கனிபோல்
அன்றே பராபரமே

என்பது தாயுமானப் பெருந்தகையாருடைய அமுத வசனம்.

காய் துவர்க்கும், புளிக்கும். பழம் தித்திக்கும். வாழைக்காய் துவர்க்கின்றது. மாங்காய் புளிக்கின்றது. வாழைப்பழமும் மாம்பழமும் இனிக்கின்றன.

நமது மனம் காயாக இருக்கக் கூடாது, அது அன்பாலும் அருளாலும் முதிர்ந்து பழுக்க வேண்டும். மனம் பழுத்தவர்கள்தான் ஞானிகள். மனம் பழுத்த அடியார்களிடம் ஆசையாகிய துவர்ப்பும், கோபமாகிய புளிப்பும் இருக்க மாட்டா.

காமக்ரோத லோப மத மாத்சர்யம் உள்ளது அழுக்கு மனம்.

இவையில்லாத தூயது பழுத்த மனம்.

செழுக்கமலத் திரளனநின் சேவடி சேர்ந்தமைந்த
பழுத்த மனத் தடியருடன்
போயினர்யான் பாவியேன்
புழுக்கணுடைப் புல்குரம்பைப்
பொல்லாக் கல்வி ஞானமிலா
அழுக்கு மனத் தடியேன் உடையாய்
உன் அடைக்கலமே

என்கிறார் மாணிக்கவாசக சுவாமிகள்.

"கடைச்சிறியேன் உளம்பூத்துக் காய்த்ததொரு
காய்தான் விளக்கமுறப் பழுத்திடுமோ."

என்று ஏங்குகின்றார் இராமலிங்க அடிகள். இந்த ஏக்கமே நம்மில் பலருக்கு வரவில்லை. ஏக்கம் எய்தாதவர் எங்ஙனம் உய்வு பெறுவர்.

ஆசையை விட்ட மனந்தான் பழுக்கும். மனிதர்கட்கு உணவிலேதான் எத்தனை ஆசை அந்தோ! சோற்றாசை விடாத ஒருவன் வேற்றாசையை எங்ஙனம் விடுவான்?

உணவிலே ஒருவனுக்கு உள்ளஞ் சென்றால் உணர்வு சுருங்கும். அதனால் தவஞ் சுருங்கும். அல்லும் பகலும் உணவு நசையால் உழன்று மாந்தர் மதிமயங்கித் திரிகின்றனர்.

அற்றைக் கிரைதேடி
அந்தத் திலுமாசைப்
பற்றித் தவியாத
பற்றைப் பெறுவேனோ ?
வெற்றிக் கதிர்வேலா
வெற்பைத் தொளை சீலா
கற்றுற் றுணர் போதா
கச்சிப் பெருமாளே

என்கிறார் அருணகிரிநாதர்.

விலங்குகளின் உணவு இரை. மனிதனும் விலங்குபோல் அலைந்து உணவு தேடுவதனால் இரை தேடி என்று இடித்துரைக்கின்றார்.

சோற்றிலே விருப்பஞ் சூழ்ந்திடல் ஒருவன்
துன்னுநல் தவமெலாஞ் சுருங்கி
ஆற்றிலே கரைத்த புளியெனப் போம் என்
றறிஞர்கள் உரைத்திடல் சிறிதும்;
போற்றிலேன் உன்னைப் போற்றிலேன் சுவையில்
பொருந்திய காரசாரஞ் சேர்
சாற்றிலே கலந்த சோற்றிலே ஆசை
தங்கினேன் என்செய்வேன்? எந்தாய்!

என்று உலகினர் தன்மையைத் தன்மேல் வைத்துக் கூறி முறையிடுகின்றார் வள்ளலார். எனவே ஆசாபாசங்களை அறவே விட்டார்க்கு உள்ளம் பழுக்கும்.

இந்நிலையை ஆன்மகோடிகட்கு எளிதில் தரவல்லது பழநியம்பதி.

காயைக் கனியவைக்கும் அப்பழநியம் பதியில் எம்பெருமான் ஞானப் பழமாக வீற்றிருக்கின்றான்.

தன்னையடைந்தவர்களின் உள்ளங்களை யெல்லாம் பழக்க வைக்கின்றான்.

பிறக்கமுத்தி — திருவாரூர்
தெரிசிக்கமுத்தி — தில்லை
இறக்க முத்தி — காசி.

காசியிலே இறந்தால் முத்தி, சிந்தியுங்கள். பல கொலைகளும், எண்ணற்ற களவுகளும் புரிந்த ஒருவன் காசியிலே சென்று ஒரு மரத்திலே கயிறு மாட்டிக்கொண்டு தற்கொலை புரிந்து கொண்டால் முத்தி வருமா? ஒரு போதும் வராது. இதன் உட்பொருள் யாது?

திருவாரூர் — மூலாதாரம்
திருவானைக்கா — சுவாதிஷ்டானம்
திருவண்ணமலை — மணிபூரகம்
திருத்தில்லை — அநாகதம்
திருக்காளத்தி — விசுத்தி
காசி — ஆக்ஞை
ஆக்ஞை என்பது புருவநடு.

புருவநடுவில் நாட்டத்தை வைத்து எல்லா எண்ணங்களையும் மறக்கின்றவனே காசியில் இறந்தவன் ஆகின்றான்.

திருவளர் ஆரூர் மூலம்
திருவானைக் காவே நாபி
மருவளர் பொழில் ஆழ் அண்ணு
மலைமணி பூரம் நீவிர்
இருவருங் கண்ட மன்றம்
இதயமாம் திருக்காளத்தி
பொருவரும் கண்ட மாரும்
புருவமத் தியமே காசி
—திருவிளையாடற் புராணம்.

"கருவிகள்நா அலான்பதும் வேறதாகக்
கண்டகன்ற அத்தநிலை காசியாகும்"
—சிவஞான தீபம்

ஆன்ம தத்துவம் 24, வித்யாதத்துவம் 7. சிவதத்துவம் 5, ஆக 36 தத்துவங்களி னின்றும் கழன்று ஆன்மா தத்துவாதீதத்தில் நின்ற அருள் நிலையே காசியாகும்.

புருவநடு நடுமூக்கு எனப்படும்.

அங்கே நாட்டம் வைத்தவன் நானற்று தானுந்தன்மை அடைவான்.

நாட்டம் இரண்டும் நடுமூக்கில் வைத்திடில்
வாட்டமும் இல்லை மனைக்கும் அழிவில்லை
ஓட்டமும் இல்லை உணர்வில்லைத் தானில்லை
தேட்டமும் இல்லை சிவன் அவன் ஆமே
— திருமந்திரம்

காசியில் உள்ள பெருமான் எல்லாந் தானு னதற்பரன். விசுவநாதன். விசுவம்-எல்லாம்.

அந்த விசுவேசப் பெருமானுகிய சிவ பெருமான் முருகனைப் பார்த்து பழம் நீ என்றுச் சுட்டிக் காட்டினர்.

இந்த நுணுக்கமான தத்துவத்தை யுணர்ந்த அருணகிரிநாதசுவாமிகள்

"காசியின் மீறிய பழநுபுரி"
என்கிறார்.

காசியிலும் உயர்ந்தது பழநுபுரி என்ற அருமையை உன்னுந்தொறும் உன்னுந் தோறும் உள்ளம் உருகுகின்றது. ஆ! ஆ! என்ன அதிசயம்!

அதிசயம் அநேகம் உற்ற பழநிமலை
மீதுதித்த அழக!

என்ற திருப்புகழையும் ஈண்டு சிந்தியுங்கள்.

இனி பழநியப்பனை வணங்கினால்தான் மனம் பழுக்கும் என்ற நியதி இல்லை. பழநி என்ற ஊரை வணங்கினலேயே மனம் பழுத்துவிடுமாம். அத்துணை மகிமையுடைய திருத்தலம் பழநி.

"உனது பழநிமலை யெனும்
ஊரைச்சேவித் தறியேனே"

என்று நமக்கு உபதேசிக்கின்றார் என் அருணகிரிநாதர்.

அஞ்ஞான இருளகற்றும் மெய்ஞ்ஞான பண்டிதன் அருட் செங்கோலே ஊன்றி அரசு புரியுந் திருத்தலம் பழநி.

பவநோய்களைந்து முத்தி நலம் புரியும்
பெரிய வைத்திய நாகக் கந்தநாதன்
சந்ததமும்
திருவருள் பாலிக்கும் பரமபதம் பழநி
பாடாத ஊமரும் ஆடாத முடவரும்
பாடியாடும் பழம்பதி பழநி
பழநிமலையைக் கண்டவரைக் கண்டாலும்
கலிதீர்க்கும் கருணைக்குன்றம் பழநி
இருமலையும், வினைபெருகித் துயரந்
தருமலையும்
கருமலையும், திரண்டுவந்தப்பாபப்
பெருமலையும்,
துகளாகச் செய்யும் ஞானத் திருமலைஎனத்
திகழும் ஒருமலை பழநி
சிவமலையானதவமலை யென்று நவநாதரும்
நனிபுகழும் நவமலை பழநி.

இகபர நலன்களை எளிதில் தரவல்ல பழனுபுரியைப் பண்புடன் பணிந்து, பவப் பணிதணிந்து பழநிமலையைப் பணிந்தோரது பதமலரை யணிந்து பரமசுகத்தை அன்பர்கள் பெறுக.

வரதா மணிநீ யெனவோரில்
வருகா தெதுதா னதிவார
திரதா திகளால் நவலோக
மிடவே கரியா மிதிலேது
சரதா மறையோ தயன்மாலும்
சகலா கமநூ லறியாத
பரதே வதையாள் தருசேயே
பழனு புரிவாழ் பெருமாளே.

வாழ்க பழநி. வளர்க ஞானம்.



தேவஸ்தான சத்திரம் உள்தோற்றம்




திருவாவினன்குடியும் மலையும்




வையாபுரிக்குளமும் பழனி நகரமும்



ஆணையர் மலைக்கோபுரத்தில் தங்கத்தகடு பொருத்தல்



மெருகு போடுதல்



வேலைப் பட்டறை



தகடு மெருகு போடுதல்



தேவஸ்தான தலைமை அலுவலகம்



இராமகிருஷ்ண விடுதி

# திருமுழுக்குச் சிறப்பு

திருமதி அ. காமாட்சிகுமாரசாமி, M.A.
தமிழ் விரிவுரையாளர், சேலம் கல்லூரி.

ஆயிரமாயிர வகைகளாய் விளங்கும் அத்தனை உயிர்கட்கும் அவ்வவர்க்கேற்ற வழிபாட்டு முறைகளை வகுத்துக்காட்டிப் பேருரிமை வழங்கும் பெருஞ்சமயம் நமது இந்து சமயமேயாகும். பாமரர் முதல் பழுத்த ஞானிகள்வரை, பரமனை வழிபடும் நெறிகளை, சரியை, கிரியை, யோகம், ஞானம், என நான்காக முறைப்படுத்தினர். இவற்றுள் ஒவ்வொன்றிலும் நான்கினையும் புகுத்தி விரித்துரைக்கும் மரபும் உண்டு.

திருக்கோயிலுக்குச் செல்லுதல், அலகிட்டு மெழுகிக் கோலமிடல், பூமாலை புனைதல், போன்றவை சரியையின் பாற்படும். பரம்பொருளின் திருவுருவத்தினை நீராட்டி, மலரிட்டு, மாலை சூட்டிப் போற்றிப்பாடுதல் முதலியன கிரியையின்பாற்படும். இவ்விரு நிலைக்குப் பின்னரே கண்மூடி நின்று யோக நிலையில் மெய்யுணர்தலாகிய ஞானத்தை யெய்துவர். ஞானிகளுங்கூட இந்நாற்படிகளிலும் நிற்பர் என்பதை, பழுத்த சைவத் தந்தையான அப்பரின் அருள் வாக்கான

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தமும் எம்பெருமானுடைய கோயில் புக்குப்
புலர்வதன் முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடி சங்கரா
சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீயென்றும்
ஆரூரா என்றென்றே அலறுநில்லே

என்ற பாட்டால் அறியலாம். ஆண்டவன் முன்னிலையில் காவடி கொண்டு கூத்துமாடி "களிப்போர் எத்துணைபேர்!" சங்கரா! எனும் ஒலிக்குப்பதில் அரகரா எனும் ஒலியின் எழுச்சிதான் என்னே!

ஞானமாம் நன்கனியைப் பெற இவை யனைத்துமே படிகள் என்பதை,

"விரும்பும் சரியை முதல்
மெய்ஞ்ஞான நான்கும்
அரும்பு மலர் காய்கனிபோல்
அன்றோ பராபரமே"

என்ற பாட்டில் தாயுமானவர் ஆய்ந்துரைப்பார். இந்நான்கு நிலைகளுமே பழனிமலையின் மீது நீங்காதிருக்கப் பார்க்கின்றோம்.

ஆண்டவன் கோயிலுக்குச் செல்லப் படிகள் ஏறியே போகவேண்டும். சரியையில் சிறப்பு! அது ஆண்டவனுக்கு நடக்கும் திருமுழுக்கோ (அபிஷேகம்) இடையறாதது. வேறெக்கோயிலிலும் காணமுடியாக் கண்கொள்ளாக் காட்சி கிரியையின் பெருமை இது! யோக, ஞான நிலைக்கோ பக்கத்தேயிருக்கும் போகர் நிலையே சான்றாகும்!

புறத்தூய்மை நீரால் அமையும் என்ற நிலை புலால் உடம்பினராய நமக்குத்தான் தேவை. புனித உடம்பினனாகிய அவனுக்குத் தேவையில்லையாயினும், அடியார்கள் கண்குளிர — மனங்குளிர — எதையெல்லாம் உயர்ந்த பொருளாகக் கருதுவரோ அதையெல்லாம் ஆண்டவன்மேல் இட்டும், அதை மீண்டும் பெற்றுத்தொட்டும், இட்டும் பருகியும், பூசியும் மகிழ்வார். அத்தகைய திருமுழுக்குப் பொருள்கள்தாம் எவையென்பதை சிவப்பிரகாசர் பிரபுலிங்க லீலை எனும் நூலில் மாயை பூசைகதி என்னும் பகுதியில் பின்வரும் பாட்டில் அழகாய் அடுக்கிக் கூறுவர்.

தயிலமுடன் ஆனிடத்தைந்து ஐயமுத
நறு நெய் பால்தயிர் செழுந்தேன்
வயலினெழு கரும்புடைத்துக் கொள்
சாறு, பழம்பிழிந்து மதுரச்சாறு,
புயலளவு தாழை இளநீர்
நறுஞ்சந்தனக் குழம்பு போற்று நூலின்
இயலினிமை தபனமிவை ஒன்றன்பின்
ஒன்று முறை இறைவற்கு ஆட்டி

என்ற பாட்டில், மாயை யெனும் மங்கை, அரனுர்க்கு அபிஷேகஞ் செய்ததைக் குறிப்பர் ஆசிரியர். "ஐயமுது" என்ற சொல் "பஞ்சாமிர்தம்" என்பதன் தமிழ்ச் சொலாய் இலங்குவதையும் சுவைக்கலாம். மேற் கூறிய அத்தனைப் பொருள்களும் இன்றும் ஆண்டவனை ஆட்டுவதைப் பார்க்கிருேம். இக்காட்சியினை இடையருது கண்டும் அடியார்கள் சலிப்பதில்லை. எனவே எண்ணிறந்த அடியோர்க்கெலாம் இத்திரு முழுக்கெனும் கிரியை தான் எத்துணை இன்பம் பயக்கின்றது!

நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம் அன்பே
மஞ்சனநீர் பூஜைகொள்ள வாராய் பராபரமே.

காயமே கோயிலாகக்
கடிமனம் அடிமையாக
வாய்ம்மையே தூய்ம்மையாக
மனமணி இலிங்கமாக
நேயமே நெய்யும் பாலா
நிறையநீர் அமைய ஆட்டிப்
பூசனை ஈசனுர்க்குப்
போற்றவிக் காட்டினேமே

என்ற பாடல்களிலும் திருமுழுக்குத்தான் உருவகமாய் அமைந்துளது. அத்தகைய உயர்நிலைக்குச் சென்ருேர்க்கும் இக்காட்சி இனிய காட்சிதான்.

ஆண்டவனின் ஆலயத்தின்மீது உயிர்களின் உடலங்களின் உருவகமாகவே கருதப் பெறும் கும்பமும்—பொன்னுய்ப் பொலிந்து இன்று தானும் தன் ஆண்டவனைப் போன்றே திருமுழுக்கைப் பெறுகின்றது. கும்பம் திருமுழுக்குப் பெற்று தூய்மை அடைவதே போன்று உலகத்துயிர்களும் அகத் தூய்மை புறத்தூய்மை பெற்று, இன்புறுவாராக.

ஆண்டவன் அடிகளே போற்றி.



தேவஸ்தான சத்திரம் வெளித்தோற்றம்

# பழநியில் கும்பாபிஷேகம்

[திருப்புகழ்மணி திரு. T. M. கிருஷ்ணசாமி அய்யர், B.A., B.L. சென்னை]

ஸ்ரீ அருணகிரிநாதர் பழநியில் தங்கித் தரிசிக்கும்போது பழநியில் நின்ற ஆண்டவனைப் பூரணமாகத் தெரியலுற்றார். தான் உணர்ந்து அறிந்த பொருளை உலகுக்குத் தெரியுமாறு பாடியும் விட்டார். வேத வேதாந்த முழுமுதற் கடவுளாகத்தான் முருகனை யுணர்ந்தார்.

சுருதிமுடி மோனம் சொல் சித்பரமஞான சிவ
சமயபடியாய் வந்த அத்வதைமான பரச்
சுடர் ஒளியதாய் நின்ற நிட்கள சொரூப
ஒருவாழ்வோ, முருகன். முதல்

திருப்புகழில் உபதேசித்த இந்த தத்துவத்தை கச்சியப்ப சிவாச்சாரியர் கந்த புராணத்தில் விளக்குவதாவது,

" வேதக் காட்சிக்கும் உபநிடத
உச்சியின்மேல் விரித்த
போதக் காட்சிக்கும் காணலன்
புதியரின்புதியன்
மூதக்காக்கு மூதக்கவன்
ஆதிக்கு ஆதியாய்
உயிருக்கு உயிராய்
நின்ற அமலன் "

என்றார்.

திருப்புகழ் மேலும் தெரிவிப்பது,

துரிய நிலேயே கண்டமுக்ததரிதயாகமலம்
அதனில் விளையா நின்ற அற்புதசுபோதசுக
சுயபடிகமாயின்ப பத்மபதம்

என்று முருக னியல்பைக் கூறுகிறது.

பக்தியில் பேரானந்தத்திலன்றி வேறு எங்கேயும் முருகனை அணுகுவது அரிது என்றுரைத்தார். எங்கும் நிறைந்து நிற்கும் ஒரே தத்துவமே முருகன். வேதமும் உபநிஷத்தும் அவனைப் ப்ரும்பம் என்றழைக்கும்.

" ஒன்றும் ஒன்றும் ஒன்றுமே
உலகனைத்தும் ஒன்றுமே
அன்றும் இன்றும் ஒன்றுமே
அனாதியானது ஒன்றுமே"

என்று சித்தர்கள் உணர்ந்த உட்பொருளே முருகனாகும். புருஷசூக்தப் பொருள்தான் அவன்.

' ஒருநியமேலிண்ட ஷட்சமயவேத அடி
முடிநடுவுமாய் அண்ட முட்ட வெளியதாய்
எங்கும் உற்பமைதாய் அமருளவோனே

என்று போற்றினார் ஸ்ரீ அருணகிரி.

" உததரிசமா மின்ப புத்தமிர்த போதசுகம்
உதவும் அமலானந்த சக்திகரமேவுணர
உருப்ரணவாமந்த்ர கர்த்தவ்யமாத வரு
குருநாதா

என்றார்.

ஆனந்த சமுத்திரமே பொங்கி ஒரு ஓங்கார ரூபமாய் வந்தால் அது எப்படி இருக்கும்? பழநி ஆண்டவர் ரூபம் போல் தானிருக்கும்.

முருகனைக் கேட்டும் தெரிந்துகொள்ளலாம். வேறு யாரைக் கேட்பது?

பணியுமடியாம் சிந்தை
மெய்ப்பொருள் அதாகநவில்
சரவணபவாவென்ற அக்கரமும்
ஆசிவளர்
பழநிமலை மேல் நின்ற சுப்ரம்மண்யா
அமரர் பெருமானே

அவன், அவனிடத்தில் பேரன்பு கொண்ட பக்தர்களைக் கேட்டாலும் அவன் பண்பு நன்றாய் விளங்கும் என்றார்.

பழநியில் ஷண்முகமாகவும் ஞானபண்டிதனாகவும் பார்க்கலாம். "பழநிஷண்முகா" "ஞானபண்டிதா" என்பது அவனே தன்னை

உபதேசித்த நாமபலம். இவனைக் காணக் கூடிய க்ஷேத்திரங்களை ஸ்ரீ அருணகிரி உபதேசிக்கின்றார்.

"குராவிருக்ஷத்தின் வேர் அடியிலும் அடியவர் சிந்தை வாரிஜத்தின் நடுவிலும் வேதத்தின் முடியிலும் மருவிய குருநாதன், பழநியில் ஆறுமுகனாகக் காட்சியளிப்பான். திருச்செந்திலில் காவலனாக நிற்பன். வேடிச்சி காவலன் வகுப்பில் காவலன் பண்பைப் பூராக உபதேசித்து விட்டார். தணிகையில் இணையிலி என்றார்.

எங்கும் முருகன் இருந்தாலும், அவனை யெங்கும் காண ஞானக்கண் படைக்காதவருக்கு மேற்சொன்ன மூன்று க்ஷேத்திரங்களிலும் தரிசனம் தரக் காணலாம் என்றார். இது ஸ்ரீ அருணகிரியின் அனுபவம்.

முருகனைக் கண்டுவிட்டால் அவன் இதய கமலத்திலே ஒரு ஏட்டிலே முருகன் எழுதிய வள்ளியம்மையாரின் ஒரு அற்புத சித்திரத்தையும் காணலாம். ஸ்ரீ அருணகிரி பாடிய வள்ளியின் சொற் சித்திரத்தைக் கீழே காணலாம்.

"செண்பகாடவியினுமி தனினுமுயர்
சந்த நடவியினு முறை குறமகள்
செம்பொனூபுர கமலமும் வளையணி
புதுவேயும்
இந்துவாள்முக வனசமும் ம்ருகமத
குங்குமா சலயு களமும் மதுரித
இந்தளாம்ருத வசனமும் முறுவலும்
அபிராம
இந்த்ர கோபமும் மரகதபடிவமும்
இந்த்ரசாபமும் இருகுழையொடு பொரு
இந்த்ர நீலமும் மடலிடை யெழுதிய
பெருமாளே

பழநியில் கும்பாபிஷேகமானால் ஒவ்வொரு உயிர்க்கும் உயிராய்த் தங்கும் ஒவ்வொரு இதயத்திலும் அவனுக்கு அபிஷேகம் தானே.




பெரியநாயகி அம்மன் கோயில் மண்டபம்

# தமிழ்ப் பன்னீர்

பேராசிரியர் திரு. G. சுப்பிரமணியபிள்ளை. M.A.,B.L.,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

இத்தலைப்பு பலருக்கும் புதுமையாக இருக்கும். தமிழ்ப் பன்னீர் என்றும் ஒன்று உண்டோ? அதுயாதாய் இருத்தல் கூடும்? கடைக்குச் சென்று பன்னீர் என்று கேட்டால், கோயிலுக்கா? வீட்டுக்கா? என்று கேட்பார்கள். கோயிலுக்கு என்றால் மலிவான விலைக்கு பன்னீர் கிடைக்கும். அந்தப்பன்னீர் வெறும் தண்ணீர்தான். அது அபிடேகத்துக்குத்தானே. கடவுள் புகார் சொல்ல மாட்டார். ஆனால் கலியாணம் முதலிய விசேடங்களில் விருந்தினர் மேல் தெளிப்பதற்கும், வீட்டில் ரசம் பாயசம் முதலிய உணவுப் பொருள்களுடன் சேர்ப்பதற்கும் என்றால், அதற்கு விலை அதிகம் கொடுக்க வேண்டும். அதில் கொஞ்சம் பன்னீர் வாடை இருக்கும். எப்படியும் நல்ல பன்னீர் கிடைப்பது என்பது அருமைதான். நாமும் கடைக்குப்போனால், உயர்ந்த பன்னீராகக் கன்னோசிப் பன்னீர் கிடைக்குமா என்றுதான் கேட்போம். ஆனால் தமிழ்ப் பன்னீர் ஒன்று இருப்பது பலருக்கும் தெரியாதல்லவா? பன்னீர் நல்ல மணமும் குணமும் உள்ளது. உடலுக்குக் குளிர்ச்சியையும் மனதிற்கு மகிழ்ச்சியையும் அளிக்கவல்லது. மேலும், அது வெறும்பன்னீராக இல்லாமல் தமிழ்ப்பன்னீராக இருந்தால் இனிமையும், ஆன்ம விளக்கமும் சேர்ந்திருக்கும் அல்லவா? அது என்னது என்று பார்ப்போம்.

முருகன் தமிழ்க்கடவுள். அவன் என்றும் இளையோன், அழகியோன், ஏறூர்ந்தான் ஏறு. காலைக்கதிரவன் செங்கிரணங்களை வீசிப் பசுங்கடலிலே பசுந்தோகை விரித்த நீலமயிலின் மேல் செஞ்சோதிச் சுடர்ப்பிழம்பாய்க் காட்சியளிக்கிறான் செவ்வேள் முருகன். அவன் சேயோன் என்று சேவிக்கப்படுகிறான். தன்னைத் தொழுதெழும் அடியார்களின் துன்பப் பகையைப் போக்குவதற்குத் துள்ளிவரும் பின்னற் படையாகிய வீரவேலை கையிலே ஏந்தி நிற்கிறான். அவன் ஆறுமுகங்களிற் புன்சிரிப்பும், இரண்டாறு புயந்திகழ் அற்புதமும் தமிழ்மக்களின் அழியாத தனிச்சொத்து. தமிழ் நாட்டார் முருகனையும், அவன் வேலாயுதத்தையும் காலாயுதத்தையும் வழிபட்டு வணங்குவது போல், வேறு எவரும் வழிபட்டதில்லை. மிகத்தொன்மை வாய்ந்த பத்துப்பாட்டில் ஒன்றாகிய திருமுருகாற்றுப் படையில் நக்கீரர் முருகனுடைய மணங்கமழ் தெய்வத்தின் நலத்தினையும் அவன் அடியார்களுக்கு அருள்புரியும் எளிமையும் வியத்தகு முறையில் விளித்துப் பாடியுள்ளார். சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் முருகனுடைய திருக்கைவேலினைச் செந்தமிழ்ச் சொற்களால் சேவித்து மகிழ்கிறார். பரிபாடல் முதலிய சங்க இலக்கியங்களிலும் முருகன் புகழையும் பரக்கக் காணலாம்.

முருகன் என்றால் ஏதா சின்னஞ்சிறு பிள்ளை தினைப்புனம் காக்கும் குறத்தி வள்ளியிடம் கோலாகல விளையாட்டு லீலைகள் விளைத்து நிற்பவன் என்று எண்ணிவிடக் கூடாது. அவன் மாற்றம் மனம் கழிய நின்றவன், மாமறைகாணா ஒருவன். அவன் பெருமையை நாம் கற்பனை செய்தும் அளவிடமுடியாது. தொண்ணூற்றாறு வகைத் தத்துவங்களையும் தனக்குள்ளே அடக்கிக்கொண்டு, தான் அவற்றுக்கும் அப்பாற்பட்டு நிற்பவன். அவன் எப்பொருளுக்கும் எல்லா வகை உயிர்களுக்கும் பொதுவான தலைவன். கோடி சூரியப் பிரகாசங்கொண்ட ஒளிப் பொருளாய் இலங்குபவன். பல்வேறு சமயத்தார்களும் ஒருவருக்கொருவர் கோபித்துக் கொண்டும், அடிபிடி சண்டையிட்டு மண்டையை உடைத்துக்கொண்டும், தந் தெய்வம் எந்தெய்வம் என்று எதிர் வழக்கிடும்படியாய், அவர்கள் எட்டியும் பார்த்து அறிந்துகொள்ள முடியாத பேரறிவுமயமாக

விளங்குகிற உண்மைப் பொருள். அந்த நித்தியமாயுள்ள சத்தியப் பொருளாகிய முருகனை உள்ளவாறு கண்டு தரிசித்தவர் அருணகிரிநாதர். அவர் தாம் கண்ட உண்மையை, தாம் பெற்ற இன்பத்தை உல கறியப் பறைசாற்றி இன்பநிலையை உண்டு பண்ண உளம் துடித்து நின்றார். அவ்வாற் றலே முருகன் திருவருள் தமக்குப் பாலிக்க வேண்டும் என்றும் பாடி வேண்டினார்.

"புனமடந்தைக்குத்
தக்க புயத்தன்
குமரனென் றெத்திப்
பக்தர் துதிக்கும்
பொருளை நெஞ் சத்துக்
கற்பனை முற்றும் பிரிதேதும்
புகலு மெண் பத்தெட்
டெட்டியல் தத்வம்
சகலமும் பற்றிப்
பற்றற நிற்கும்
பொதுவையென் றெக்கத்தக்கதொ
ரெத்தந் தனைநாளும்,
சினமுடன் தர்க்கித்
துச்சிலு கிக்கொண்
டறுவருங் கைக்குத்
திட்டொரு வர்க்குந்
தெரியவரும் சத்யத்
தைத்தெரிசித்துன் செயல்பாடித்
திசைதொறுங் கற்பிக்
கைக்கினி யற்பந்
திருவுளம் பற்றிச்
செச்சை மணக்குஞ்
சிறுசதங் கைப்பொற்
பத்ம மெனக்கென் றருள்வாயே"

சிவபெருமானுடைய முற்றிய திருவும், மூவா இளநலமும், முடிவிலா ஆற்றலும், முதிர்ந்த இன்பமும், மூளும் ஞானமுமே முருகக்கடவுளின் அவதாரம். சத்துச் சித்து ஆனந்தப் பொருளாய் விளங்குபவன் முருகன். அவன் இச்சா சக்தி, கிரியா சக்தி என்னும் இரண்டையும் முறையே வள்ளி தெய்வயானை என்னும் இரண்டு மனைவிய யராகக் கொண்டான். ஞானசக்தியை ஒளிரும் வேற்படையாய் கைக்கொண்டு நிற்கிறான். ஆணவத்தை மயிலாக அடிப் படுத்து ஊர்ந்தவன். மாயை தனை உதறிக் கொடியாகப் பிடித்தான். அவன் சேவலின் நாதம் கேட்டு நம் அஞ்ஞான இருள் நீங்கி விடிவு பிறக்கிறது. இத்தகைய பரம் பொருள் நம் அன்புக்கெளியனாய் அறிவினில் வெளிப்பட்டுக் கண்ணுக்கினியனாய்க் கலியுக வரதனாய் நம்மை வாழ்விக்க வந்த வண ணத்தை வாழ்த்துகிறது கந்தபுராணம்.

"அருவமும் உருவும் ஆகி
அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்று சோதிப்
பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்க ளாறுங்
கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்
குதித்தனன் உலகம் உய்ய."

வினைப்பயன்களை விட்டொழிக்கும் வகையின்றித் துயரில் ஆழ்ந்த உலகத்துயிர் களுக்கு ஆறுதலை யளிக்க ஆறுதலையொடு அமலன் வந்து அவதரித்தான். தன்வயத்த னுதல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், முற்றுமுணர்தல், பேரருளுடைமை, வரம்பி லின்பமுடைமை, முடிவிலாற்றலுடைமை என்னும் சிவபெருமானின் ஆறு குணங் களுமே ஆறுமுகங்களாய் முருகக்கடவுளுக்கு வந்து இயைந்தன. அவன் ஆறு திசைகளை யும் ஆசற நோக்கி எங்கும் எப்பொழுதும் எல்லாம் அறிந்து அருளும் வாலறிவன்.

ஏவர்தம் பாலு மின்றி
யெல்லைதீ ரமலற் குள்ள
மூவிரு குணனுஞ் சேய்க்கு
முகங்களாய் வந்த தென்னப்
பூவியல் சரவ ணத்தண்
பொய்கையில் வைகு மையன்
ஆவிகள் அருளு மாற்றால்
அறுமுகங் கொண்டா னன்றே.

அயரா அன்பினில் அரன்கழல் சேரும் ஆன்மகோடிகளுக்குச் சிவஞானம் இன்றி யமையாதது என்று சைவசித்தாந்தம் உணர்த்துகிறது. சிவபெருமான் குருமூர்த்தி யாய் எழுந்தருளிப் பக்குவப்பட்ட உயிர் களுக்குச் சிவஞானத்தை உபதேசிக்கிறான். அத்தகைய சிவகுருவாய் நமக்கு வாய்த்த ஞான தேசிகன் முருகப்பெருமான்.

முருகன் தனிவேல் முனிநம் குருவென்
றருள் கொண் டறியார் அறியும் தரமோ
உருவன் றருவன் றுளதன் றிலதன்
றிருளன் றொளியன் றெனநின் றதுவே.

அனைத்துயிர்க்கும் குருமூர்த்தி முருகன் என்பதை உலகிற்கு உணர்த்தவேண்டிய சிவபெருமான் அவன் தாள் நிழல் நின்று கைகட்டி வாய் புதைத்துப் பிரணவமந்திரத் தின் நுண்பொருளைக் கேட்டருளி உபதேசம்

பெற்ருன். ஆயினும் சிவனும் முருகனும் வேறல்லர். அவனே முருகன் முருகனே சிவனும். இங்ஙனம் சிவனே சிவகுருநாதனை சித்திரத் திருவிளையாடலைத் தணிகைப் புராணம் இனிது விளக்கிக் காட்டுகிறது:-

தனக்குத் தானே மகனுகிய தத்துவன்
தனக்குத் தானே ஒருதாவரும் குருவுமாய்த்
தனக்குத் தானே யருள் தத்துவங் கேட்டலும்
தனக்குத் தானே தானிகரனுன் தழங்கி
நின்ருடினுன்

தலங்கள் தோறும் சென்று முருகனையே பாடும் முழுவிரதியான அருணகிரிநாதர் சிதம்பரம் பொன்னம்பலத்தாடும் நடராஜப் பெருமானையும் முருகனுக்வே கண்டு சிவம தாகவே பாடி மகிழ்ந்ததை நாம் என்றும் மறத்தல் கூடாது. ''அவகுணவிரகனை'' என்று தொடங்கும் திருப்புகழின் பிற்பகுதி வருவாறு:-

மவுலியி லழகிய
பாதாள லோகனு
மரகத முழுகிய
காகோத ராஜனு
மநுநெறி யுடன்வளர் சோணுடர்
கோனுடன்—உம்பர் சேரும்
மகபதி புகழ்புலி
யூர்வாழு நாயகர்
மடமயில் மகிழ்வுற
வானுடர் கோவென
மலைமக ளுமைதரு வாழ்வே
மனேகர மன்றுளாடும்
சிவசிவ ஹர ஹர
தேவா நமோநம
தெரிசன ப்ரகதி
யானுய் நமோநம
திசையினு மிசையினும் வாழ்வே
நமோநம செஞ்சொல்சேரும்
திணைபுன வனிதை
மணுளா நமோநம
திரிபுர மெரிசெய்த
கோவே நமோநம
ஜெய ஜெய ஹர ஹர தேவா
சுராதிபர் தம்பிரானே.

அருணகிரிநாதரின் பாடல்கள் கல்லையும் கனிவிக்கும், கல்லான நெஞ்சையும் கசிந் துருகச் செய்யும். இயற்றமிழின் சந்தம் கூட்டிப் பாமாலைகள் புனைந்து முருகன் பன்னிரு தோள்களினும் சாத்தினுர். அவற்றை முருகனும் மகிழ்ந் தேற்றுத் தரித்துக்கொண் டான். இதனை,

இல்லை யெனுமாயை யிலிட் டனைநீ
பொல்லே னறியா மைபொறுத் திலையே
மல்லே புரிபன் னிருவா குபிலென்
சொல்லே புனையுஞ் சுடர்வே லவனே

என்னும் அனுபூதிப் பாடலால் அறியலாம்.

வேதங்களின் நுண்பொருள்களையும் அரிய கருத்துக்களையும் தமிழ்ப் பாடங்களில் இழைத்தும் குழைத்தும் அருணகிரியார் பாடினுர். அப்பாடல்களை முருகன் தன் பன்னிரு செவிகளும் குளிரக்கேட்டு உள்ளம் உவந்தான் என்று திருப்புகழே கூறுகிறது.

அருமறைகள் கூட்டி உறை செய்தமிழ்ப் பாட்டை
அடைவடைவு கேட்ட முருகோனே.

முருகனையும் அவனுடைய வெற்றி வேலையும் கொற்றமயிலையும் செஞ்சேவலையும் செந்தமிழ்ப் பாடல்களாகப் பாடிக்கொண் டிருக்கும் பணியையே தமக்கு வரமாகக் கேட் கிருர் அருணகிரியார். நல்ல செந்தமிழிற் பாடும் பண்பும் தமக்கு வேண்டும் என்று முருகனிடம் வேண்டுகிருர், அருணகிரியார்.

பல இடங்களுக்கும் சென்று வந்த அருணகிரிநாதர், உனது ''பழநிமலையெனும் ஊரைச் சேவித்தறியேனே'' என்று அங்க லாய்த்துக்கொண்டே, பழநித் திருநாமம் படி யாதவர் எவ்வாறு உய்தல் கூடும் என்று ஏங்கியவராய்த் திருவாவினன்குடி என்னும் பழநிமலைக்குச் சென்ருர். அங்கே குருநாத னுகிய முருகன் அவருக்குச் செபமாலை யொன்று அருளினுன். அருணகிரியார் தம் ஞானங்கொண்டு நோக்கினுர். முருகன் கழுத்திலும் தோள்களிலும் பொன்னணிகள் பலமின்னிப் பொலிந்தன. அவன் திருமார் பிலே மத்தாணிகளும் பதக்கங்களும் சுடர் விட்டு இலங்கின. கண்ணைக்கவரும் கடம்ப மாலை அவன் மார்பிலே புரண்டுகிடந்தது. அருணகிரியாரின் தமிழ்ப்பாடல்கள் அம் மாலைக்குத் தமிழ்ப்பன்னீர் தெளித்துப் பரி மணம் ஊட்டின. இவ்வுண்மையை அவர் வாக்கிலிருந்தே நாம் அறிகிருேம்.

பலபல பைம்பொற் பதக்க மாரமும்
அடிமைசொ லுஞ்சொற் றமிழ்ப்ப னீரொடு
பரிமள மிஞ்சக் கடப்ப மாலையும் அணிவோனே
பதியினில் மங்கைக் கதித்த மாமலை
யொடுசில குன்றிற் றரித்த வாழ்வுயர்
பழநியி லன்புற் றிருக்கும் வானவர் பெருமாளே.

இதனுல் அருணகிரிப்பாடல்கள் தமிழ்ப் பன்னீர் என்பதும், அத்தமிழ்ப்பன்னீர் பழநி யாண்டவன் அணியும் கடம்பமாலையில் கமழ்ந்துகொண்டிருக்கும் என்பதும் தெளி வாகும்.

# கந்தரலங்காரம்

[திரு. I. A. சிதம்பரம் பிள்ளை, M.A., M.L.C., இலஞ்சி]

முருகன் கலியுகவரதன் கண்கண்ட தெய்வமாக அருள் வழங்கும் தலங்களுள் சிறந்து விளங்குவன ஆறுபடை வீடுகள். அவைகளின் சிறப்புக்களையும், முருகப்பெருமானின் பல்வேறு தன்மைகளையும், மக்கள் தரத்திற்கு ஏற்ப, அவரவர் ஆன்மபரிபக்குவ நிலைகளுக்கு ஏற்ப, முருகன் அருள்புரியும் பெருங்கருணைத் திறத்தினையும் நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் கூறுகிறார்.

திருப்பரங்குன்றத்திலுறையும் முருகனை இயற்கையோடு கலந்த அருவுருவ நிலையில் காட்டுகிறார். திருச்செந்தூர் முருகனை உருவ நிலையில் கருணைகூர் முகங்கள் ஆறும், கரங்கள் பன்னிரெண்டும் கொண்ட பூரணனாகக் காட்டுகின்றார். பழநி என்ற திருவாவினன்குடியில் முருகனே மூவர்க்கும் முதல்வன், பரம்பொருள் என்று கூறி, முருகனை அருவமான பரத்வ நிலையில் காட்டுகின்றார்.

குமரகுருபர சுவாமிகள் முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழில் முருகனை உயிர்க்குயிராய் நிற்கும் தெய்வம் என்றும், புறக்கண்ணே அகக்கண்ணாக முன் நின்று தண்ணளிசுரந்து வேண்டுவார் வேண்டும் வரமெல்லாம் கொடுக்கும் மெய்கண்ட தெய்வமென்றும், நிறைந்த செல்வத்தோடு அழியாத வீடும் தரும் கடவுள் என்றும், மெய்யான தெய்வம் இத்தெய்வம் அல்லால் புவியில் வேறு இல்லை என்றும் கூறுகிறார்.

முருகனின் கருணைக்கு எல்லையே இல்லை. அவன் அடியார்களை அறக்கருணையாலும், அல்லாதாரை மறக்கருணையாலும் ஆட்கொள்ளுகிறான். தனக்குப் பெருந்தீமை செய்தவனாயினும், அவன் அன்பனாயின், அவனுக்கு அருள் செய்குவான். திட்டினும் மகிழ்வான். "முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழவைப்போன்" என்று அருணகிரியார் பாடியுள்ளார்.

கந்தபுராண ஆசிரியரும், இதேகருத்தை

"தீயவை புரிந்தா ரேனும் குமரவேள் திருமுன் உற்றால்
தூயவராகி மேலைத் தொல்கதி யடைவர்"

என்றுதெரிவிக்கின்றார்.

மேலும்,

"நாதா குமரா நம வென்றரனார்
ஓதாயென ஓதிய தெப்பொருள்தான்"

என்ற கந்தரனுபூதிச் செய்யுளில், குமரா நம என்பது அஞ்ஞானத்தை அழிப்பவனுக்கு நமஸ்காரம் என்று பொருள்படும். ஆகவே முருகப்பெருமானின் அடிகளை வணங்கி, மக்கள் உய்தல் வேண்டுமென்று அறிவுறுத்துவதற்காகவே மெய்ஞ்ஞானமே தன்னுருவாகத்திகழும் சிவபெருமான் நடந்து காட்டுகின்றார். முருகனே நமக்குத் தஞ்சம்.

"அராப்புனை வேணியன் சேயருள் வேண்டும் அவிழ்ந்த அன்பால்
குராப்புனை தண்டையந்தாள் தொழல்வேண்டும்"

என்றும்,

"கார்மயில் வாகனனைச் சாந்துணைப் போதும்
மறவாதவர்க்கு ஒரு தாழ்வில்லையே"

என்றும் அருணை முனிவர் கூறுகின்றார். முருகப்பெருமானின் திருவருளைப்பெற முயலுவோமாக.

'கந்தரனுபூதி' பெற்றவர் அருணகிரிநாதர். அவர் நம்மைப்போல வாழ்ந்து, இறைவனால் ஆட்கொள்ளப்பட்டு திருவருளில் திளைத்து இன்புற்றார். தாம் பாடிய பிரபந்தங்களில் எல்லாம், மக்கள் படுந்துன்பத்தைத்தாமே அனுபவிப்பதாகப் பாவித்து, முருகனிடம் தம்மை ஆட்கொள்ளுமாறு விண்ணப்பிக்கிறார். மேலும் நாம் இந்த உலகில் வாழும்போதே இன்ப நலம் பெறல் முடியும் என்றும் கூறுகிறார்.

அவர் பாடிய பிரபந்தங்களில் முக்கியமானவை திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரனுபூதி. அவைகள் "பாரகதிக்கேணி, அருட்

கடலுக்கு ஏற்றம். மனத்தளர்ச்சிக்கு ஆணி, பிறவிக்கு அரம்.''

மக்கள் தங்கள் குறைகளையும் படும் துன்பங்களையும் எடுத்துக் கூறி, முருகனின் அருளை வேண்டுவதற்காகப் பாடப்பெற்றவை போல அமைந்திருக்கின்றன. இந்தப் பாடல் களைப்பாடி, பரவசமடைந்து பக்தி மேலிட்டு, முருகப்பெருமானின் திருவருள் பெறல் மிக எளிது. ஆகவே அருணகிரிநாதர் பாடிய கந்தரலங்காரத்திலுள்ள சில கருத்துக்களைச் சிந்திப்போம்.

கந்தரலங்காரம் நூறு பாடல்கள் கொண்ட நூல். இதனைப் பாராயணஞ் செய்பவர்கள் துன்பம் நீங்கப்பெற்று, முருகனின் திருவருளைப்பெற்றிருக்கின்றனர். இதிலுள்ள நூறு கவிகளில், ஒரு கவியைக் கற்றறிந்தவர்கள், அரசனுக்கும், யமனுக்கும் அஞ்சார், நரகம் அணுகார், துஷ்டமிருகங்களால் துன்பம் அடையமாட்டார் என்று நூற்பயன் செய்யுள் கூறுகிறது.

அருணகிரிநாதர் முருகனின் பெருமையையும் செல்வ நிலையாமையையும், யாக்கை நிலையாமையையும், அறஞ் செய்தலின் அவசியத்தையும் கந்தரலங்காரத்தில் கூறுகிறார்.

தீவினையை அழித்துப் பிறவிப்பிணியை நீக்குவதற்கு, கிருபாகரனான முருகப்பெருமானின் திருப்புகழைப் பிழையின்றிக் கற்று பாடுங்கள் என்று மக்களுக்கு உபதேசிக்கின்றார்,

''அழித்துப் பிறக்க வொட்டா அயில்
வேல்ன் கவியை அன்பால்
எழுத்துப் பிழையறக் கற்கின்றிலீர்''

உண்மையான அன்புடன் குமரக் கடவுளைப் பையப் பைய நினைத்தால், ஒரு தனி ஒப்பற்ற பரமானந்தம் தோன்றும். அதில் திளைக்கும்போது உலக இன்பமான கரும்பும் தேனும் துவர்த்து புளித்து கசந்துவிடும். ஆனால் ஞானமலையின் உச்சியில் கருணைக் கொம்பிலுள்ள ஆனந்தத்தேன், தெவிட்டாத முக்தி இன்பத்தை நல்கும், பவப்பிணியைக் கெடுக்கும், என்பதை

''பெரும் பைம் புனத்தினுட் சிற்றேனல்
காக்கின்ற பேதை கொங்கை
விரும்பும் குமரனை மெய்யன்பினால்
மெல்ல மெல்ல வுள்ள



அரும்புந் தனி பரமானந்தந்
தித்தித் தறிந்த வன்றே
கரும்புந் துவர்த்துச் செந்தேனும்
புளித்தறக் கைத்ததுவே
என்று கூறுகிறார்.

முருகப் பெருமானை உள்ளன்போடு வணங்கி, அவனுடைய திருநாமத்தைப் புகல்பவர்கள் இம்மையில் எல்லா நலனும், வளமான வாழ்வும், மறுமையில் பிறவாத பேறும் பெறல் எளிது என்று கூறுகிறார்.

''முடியாப் பிறவிக் கடலிற்
புகார் முழுதுங் கெடுக்கும்
மிடியார் படியில் விதனப்
படார் வெற்றிவேற் பெருமாள்
அடியார்க்கு நல்ல பெருமாள்
அவுணர் குலம டங்கப்
பொடி யாக்கிய பெருமாள்திரு
நாமம் புகல் பவரே.

இனி, அறஞ் செய்தலின் அவசியத்தைப் பற்றி அவர் பாடிய எல்லா பிரபந்தங்களிலும் மக்களுக்கு உபதேசிக்கிறார். கந்தரனுபூதியில்,

''கெடுவாய் மனனே கதிகேள் கரவாது
இடுவாய் வடிவேலிறை தாள் நினைவாய்
சுடுவாய் நெடுவேதனை தூள்படவே
விடுவாய் விடுவாய் வினையாவையுமே''
என்றும்,

கந்தரலங்காரத்தில்,

''வையிற் கதிர்வடி வேலோனை
வாழ்த்தி வறிஞர்க் கென்றும்
நொய்யிற் பிளவள வேனும்
பகிர்மின்கள் நுங்கட்கு இங்ஙன்
வெய்யிற் கொதுங்க உதவா
உடம்பின் வெறு நிழல்போல்
கையிற் பொருளும் உதவாது
காணுங் கடை வழிக்கே''

என்றும் கூறுகிறார்.

உலகத்திலுள்ள மக்கள் எல்லோரும் இன்புற வாழவேண்டுமென்பதே இறைவன் கருணை. இறைவன் அருள் எவ்வாறு வெளிப்படும் என்று விளக்குகிறார்.

மனத்தை அதன்போக்கிலே விடாமல் தடுங்கள், கோபத்தை விட்டு விடுங்கள், என்றும் தானமிடுங்கள், அந்த நிலையில் இருந்த

படி இருங்கள், அப்போது முருகப்பெருமானது அருள்தானே வந்து உமக்கு வெளிப்படும் என்பதை,

''தடுங்கோள் மனத்தை விடுங்கோள்
வெகுளியை த்தானம் என்றும்
இடுங்கோள் இருந்தபடி யிருங்
கோள் ஏழுபாரும் உய்யக்
கொடுங் கோபச் சூருடன் குன்றந்
திறக்கத் துளைக்க வைவேல்
விடுங்கோன் அருள் வந்துதானே
உமக்கு வெளிப் படுமே''

என்று கூறுகிறுர்.

ஆகவே நம் வாழ்க்கையை அவர் வகுத்தபடி அமைத்துக்கொண்டால் ஆண்டவனுடைய அருளைப் பெறலாம்.

பழநியாண்டவனுடைய திருவருளைப் பெற அவன் தாளை வணங்குவோமாக.

''அந்திப்போது அழகுறவே நடித்தருளும்
விழித்துணைவர் அருளும் கோவை
வந்திப்போர் நினைத்தபடி மயில்ஏறி
அயிலெடுத்து வரும் செவ்வேளைச்
சிந்திப்போம், புகழ்ந்திடுவோம், மலரணிவோம்
அவர் கமலத்தாளும் தோளும்
சிந்திப்போம் ஆதலினல் நமதுபழ
வினைக ளெல்லாம் சிந்திப்போமே.''

''வசனமிக வேற்றி மறவாதே
மனது துயராற்றி லுழலாதே
இசைபயில் ஷடாக்ஷர மதாலே
இகபர சௌபாக்ய மருள்வாயே
பசுபதி சிவாக்ய முணர்வோனே
பழநிமலை வீற்றருளும் வேலா
அசுரர்கிளை வாட்டி மிகவாழ
அமரர் சிறைமீட்ட பெருமாளே.''

---



பழனியாண்டவர் கீழ்த்திசைக் கலைக்கல்லூரி கால்கோள் விழா

# ✳ குமரன் திருவிளையாடல் ✳

[திரு. P. ஞானசம்பந்தம், M.A., L.T.,
வடமொழிப் பேராசிரியர், மாநிலக்கல்லூரி, சென்னை]

சரவணப் பொய்கையில் தவழ்ந்து விளையாடிக் கொண்டிருக்கிறான் குமரன். கிருத்திகை மாதர்கள் அறுவராலும் அருமையாகப் பாலூட்டித் தாலாட்டி வளர்க்கப்பட்டு வருகிறான். அறுவர் பயந்த ஆரமர் செல்வன். ஒருநாள் சிவபெருமானும் பார்வதி தேவியும் வானவெளியில் விமானத்தில் உலாச் செல்கின்றனர். சிறிது நேரத்தில் ஏதோ ஒன்று தேவியின் உள்ளத்தைப் புல்லரிக்கச் செய்கின்றது. ஆனந்தக் கண்ணீர் ஏனோ பெருக்கெடுக்கின்றது. இவற்றிற்கெல்லாம் காரணம் தன் புதல்வன் விளையாடுகின்ற சரவணப் பொய்கையின் சமீபத்தில் செல்வதுதான் என்பதை நாம் அறிகிறோம். தேவியின் திருநோக்கு தானாகவே கீழே பாய்கிறது. அதனினும் வேகமாக விமானத்தினின்றும் கீழே இறங்குகின்றனர். தன்னைச் சுற்றி வணங்கி நிற்கும் — ஆறுமுகப் பெருமானை இதுகாறும் தாங்கி வளர்த்த கங்கையையும் கிருத்திகை மாதர்களையும்கூட தேவி கவனிக்கவில்லை. சேயைக்கண்ட தாயின் நிலை, அதுவும் முதன்முதல் காணும் நிலை பேறு எதுவாக இருக்க முடியும்? பத்தித் திருமுகம் ஆறுடன் பன்னிரு தோள்களுமாய் தித்தித்திருக்கும் அமுது கண்டேன் என்று அருணகிரிநாதர் குறிப்பிட்ட நிலையில்தான் இருந்தார் பார்வதி தேவியார். இந்நிலையை 'புத்ரோத்ஸவே மாத்யதி தா நஹர்ஷாத்' என்று காட்டுகிறார் கவி காளிதாசர் தாம் இயற்றிய குமாரசம்பவம் என்ற காவியத்தில். மேலும் சொல்கிறார். சேயைக் கண்குளிரக் காணக்கூட முடியவில்லையாம் தேவிக்கு. ஆனந்தக் கண்ணீர் கண்களில் அப்படியே முட்டிக் கொண்டு நிற்கின்றன. ஆயினும் தனது மெல்லிய கரங்களால் வாரி அணைத்துச் சொல்லொணு ஆனந்த மாகடலில் திளைத்தாள். "மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம்" அன்றோ? கண்களைத் துடைத்துக்கொண்டு அகல விரித்துப் பார்க்கிறாள். முருகன் என்ற சொல்லுக்கே அழகன் என்றும் பொருளுண்டன்றோ? அவனது அழகைப் பருகுவதற்கு பெருமாட்டிக்குத் தமது இரண்டு கண்கள் போதவில்லையாம். ஆயிரம் கண்கள் இருக்கக் கூடாதா என்று ஏங்குகின்றாள். அக்கண்களும் இமையாமல் இருக்கவேண்டுமாம்! செங்கோடனைச் சென்று தொழ நாலாயிரம் கண்படைத்திலனே என்று அருணகிரியார் ஏங்குவதைப் பார்க்கின்றோமே பார்வதியோடணைந்த சண்முகனை. பொற்கொடியில்விளைந்த பூங்கனி என்கோ! கங்கையில் அலர்ந்த தாமரை என்கோ! வானில் விரிந்த முழுமதி என்கோ! என்று வியக்கின்றார் கவிகாளிதாசர்.

"ஹைம் பலம் ஹேமகிரேர்லதேவ
விகஸ்வரம் நாகநத்வ பத்மம்
பூர்வேவ திங்நூதனமிந்து மாபாத்தம்
பார்வதி நந்தனமாததாறு"

செல்வனை வாரியணைத்துக்கொண்டு விண்ணின்மிசை மீண்டும் கைலைக்கு எழுந்தருளினார்கள் அம்மையும் அப்பனும்.

குமரன் சிறுகுறும்பைக் கவிஞன் காளிதாசன் வருணிப்பதில் தாம் பெற்ற இன்பத்தை நம்மையும் பெற வைக்கிறார். குழந்தையின் குறும்பு பெற்றோரைக் களிப்பில் ஆழ்த்துவதை நாம் காணவில்லையா? இறைவனும் உமாதேவியும் மட்டும் விலக்கா என்ன? முதே நு ஹருத்யா கிமு பாலகேளி. யாவருக்குத்தான் குழந்தை விளையாட்டு மகிழ்ச்சியூட்டாது? என்று கேட்கிறார். இருவரும் பல்முளையாத பாலகனை உச்சிமோந்து மாறிமாறி முத்தம் சொரிகின்றனர். தத்திக் குதித்து தளர்நடை போடுகிறான், பாலகன். துள்ளித் திரிந்து தூசி படிந்த மேனியனாய் தந்தையின் மடிமீது குதிக்கின்றான். முறுவலிக்கிறான் தண்மதியொத்த முகத்தினன். மழலை மொழிகின்றான். அது யாழினும் குழலினும் இனிக்கின்றது. குடுகுடுவென ஓடுவான். தந்தையின் வாகனமாகிற இடபத்தின் கொம்புகளைப் பிடிப்பான். மறுகணம் தாயின் வாகனமாகிற சிங்கத்தின் பிடரியைத் தடவுவான். பிறிதோர் கணம் சிவகணங்களின்

கையைப் பிடித்திழுப்பான். மற்றுமோர் சமயம் தந்தை அணிந்துள்ள நாகத்தின் வாயைப்பிளந்து அதிலுள்ள பற்களை 1, 9, 2, 10, 5 என்று எண்களைக் குழந்தை இயல்புக்கேற்ப எண்ணுவான். எம்பெருமான் அணிந்துள்ள கபாலமாலையில் உள்ள மண்டை ஓட்டில் பொதிந்திருக்கும் பற்களை முத்துக்கள் என எண்ணிப் பிடுங்கிப் பார்ப்பான். ஒரு முறை பெருமானின் சடையில் உள்ள கங்கையின் அலைகளில் கையைத் துழாவினன். பனி மலையினின்றும் வருகின்ற கங்கை ஆயிற்றே கைசில்லென்று உணர்விழந்து விட்டது. உடனே ஒரு யோசனை பளிச்சிட்டது பாலனுக்கு. சரி என்று பெருமானின் நெற்றிக் கண்ணினின்றும் சுடர் விடுகின்ற தீயின் அருகே கையை நீட்டினன். குளிர்பறந்தோடி விட்டது. நிலா! நிலா! ஓடி வா! என்ற பாட்டு குமரனுக்குத் தேவையில்லை. நிலாதான் இறைவன் திருமுடியிலே குமரன் எட்டிப் பிடிக்கும் அளவிலே என்றும் கட்டுண்டிருக்கிறதே! சும்மா விடுவானா குமரன். நிலாவைத் தொட்டுத் தொட்டுப் பார்த்து மகிழ்வான். இந்த முறையில் குறுகுறு நடந்து இட்டும் தொட்டும் துழாவியும் சிறுகை நீட்டிச் சிறுகுறும்பு செய்த குமரனின் திருவிளையாடலைக் கவிஞன் காளிதாசன் காட்டிய வழி கண்டோம்.

வடநூற்கடலும் தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற குமரகுருபரர் முருகப்பெருமானின் திருவிளையாட்டைக் கண்டு களி கூறுகிறார். காளிதாசன் கண்ட குமரன் சிறுபிராயத்தில் தந்தை மடியிலிருந்துகொண்டே இறைவன் தன்னிடத்தே கொண்டுள்ள விளையாட்டுப் பொருள்களைக்கொண்டு விளையாடினன். குமரகுருபரர் கண்ட குமரனோ கற்று வளர்ந்த குமரன் போலும் அப்பருவத்திலேயே எட்டுத் திக்குகளிலும் ஓடிச்சாடி விளையாடுகிறவனாகக் காணப்படுகிறான். குண்டோடுகுண்டை மோதவிட்டு மகிழ்வெய்தும் சிறுவர்களைப் பார்த்திருக்கிறோம். ஆனல் குமரன் சாமான்ய சிறுவனா? அவனுக்கு விளையாடும் பொருள்கள் எப்பேர்ப்பட்டவையாக இருத்தல் வேண்டும். எட்டுத்திக்குகளிலும் உள்ள பிரம்மாண்டமான யானைகளை லாகவமாகப் பிடித்து ஒன்றோடொன்று முட்ட விடுகின்றான்! அத்தோடு நின்றானா? சூரியனைப் பந்தாடுகிறான். சூரிய வட்டத்தைச் சக்கரவாளகிரி வட்டத்தில் நுழைக்கிறான்! தந்தையின் மாமேருவில்லை கிரிகூடமலையினெடு சாடுகிறான். மேற்கடலின் நீரை இழுத்துக் கீழ்க் கடலிற் பெய்கிறான். இப்படி எட்டுத்திக்குகளிலும் ஓடியாடி விளையாடுகின்றான் குமரன். அந்தப் போராற்றலை நம் கண்முன்னே சொல்லின் ஒலியிலேயே காட்டி விடுகிறார், குமரகுருபரர், முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழில்

கைக்கெட்டு மெட்டுக் களிற்றைப் பிடித்தக்
களிற்றோடு முட்ட விட்டுக்
ககனவட் டத்தினெடு பருதிவட்ட
டத்ததைவளை
திகிரி வட் டத்திலிட்டு
முக்கட் டிருத்தாதை கோதண்ட மெனவைத்த
வேதண்ட மாதண்டமா
மூதண்ட கூடந்திரி கூடத் தொடுஞ்சாடி
மூரிக் குடாசலமவன்
மெய்க்கிட்ட சட்டைக்கு நேரிட் டிடப்பட்ட
மேகபட லத்துமொண்டு
மேல்கட லினைப்பெருங் கீழ்கடல் புகப்பெய்து
விளையாட்டு வீரர்களொடும்
திக்கெட்டும் விளையாடுச்சேனு பதிக்கடவுள்
செங்கீரை யாடியருளே.........

அத்துவைதத்தை நிறுவிய ஆதிசங்கரர் குமரனைக் குழந்தைப் பருவத்தில் இருப்பவராக எண்ணி மகிழ்கிறார். கந்தன் அம்மையின் மடியில் அமர்ந்திருக்கிறான். அப்பா குழந்தாய் இங்கே வா என்று தம் இருகரங்களையும் நீட்டிக் குழைவோடு தந்தை அழைக்கிறார். தாயின் மடியிலிருந்து தந்தையின் மடிக்குத் தாவிக் குதிக்கிறான் குமரன். அந்தக் குமரனைப் போற்றுகிறார், ஆதிசங்கரர் சுப்பிரமணிய புஜங்கம் என்ற துதிப்பாடலில். குகப்பெருமானிடத்தில் ஆதிசங்கரருக்கிருந்த ஈடுபாட்டை, பக்தியை, என்னென்று புகல்வது! இதோ அவரே சொல்கின்றார்! இக்கண்களில் கந்தன் என்றும் கலந்திருத்தல் வேண்டும். இச்செவிகள் என்றும் அவன் புகழையே கேட்க வேண்டும். இந்த நா அவனது புனித வீரச்செயலையே புகலவேண்டும். இக்கைகள் அவனுக்குத் திருத்தொண்டு செய்வதையே தொழிலாகக் கொள்ளவேண்டும். இவ்வுடல் அவனுக்கே ஆட்படல் வேண்டும் சுருங்கச் சொன்னல் செயல்கள் அனைத்தும் குகனிடத்தில் ஒன்றிவிடல் வேண்டும்.

'த்ருசி ஸ்கந்தமூர்த்தி: ச்ருதௌ ஸ்கந்தகீர்த்திர்
முகே மே பவித்ரம் சதா தச்சரித்ரம்
கரே தஸ்ய க்ருத்யம் வபுஸ்தஸ்ய பீருத்யம்
குஹே சந்து லீனு மமாசேஷ பாவா'

# காசியில் மீறிய பழநி

[திரு. P. K. சண்முகநாதன், B.A., B.L., வழக்குரைஞர், திண்டுக்கல்]

தமிழ் நாடு திருவருள் நிரம்பியது. அதில் இறைவனின் அருள் விளக்கம் மிகுதியும் அமையப்பட்ட தலங்கள் பல உள. அவற்றில் ஒன்று பழநி. இத்தலத்தைப் பற்றிய குறிப்புக்கள் அகநானூற்றில் காணப்படுகின்றன. கடைச்சங்க நூலான, நக்கீரர் இயற்றிய, திருமுருகாற்றுப்படையில் இது மூன்ருவது "ஆறுபடை வீடாக"க் காணப்படுவதாலே இத்தலம் தொன்மை வாய்ந்தது என்பது புலப்படும். ஆறுபடை வீடு என்றே பழக்கத்தில் வந்துவிட்டது. ஆறுபடை அல்லது ஆறுபடுத்தும் வீடு அல்லது தலம் என்பதுதான் சரியான முறை. இறைவனிடம் ஆறுபடுத்தும் தலங்களில் இது மூன்ருவது. அருணகிரியார் "சேரர் கொங்குவைகாவூர் நன்னுடதில் ஆவினங்குடி" என்று கூறியிருப்பதால் இத்தலம் சேர நாட்டுத்திருப்பதிகளில் ஒன்ருக இருந்தது என்பது வெளிப்படை. மலைக்கோயிலை ஓர் சேர அரசன் கட்டுவித்தான் என்பதற்கும் சான்றுகள் உள. பண்டைத் தமிழ் நூல்கள் இத்தலத்தை பொதினி என்று அழைக்கின்றன. ஆவினன்குடி என்ற பெயரும் பழையத்தமிழ்ப் பெயரே. இத்தலத்தை அவ்வையார் 'சித்தன் வாழ்வு' என்று பாடியிருக்கிருள். 'பொதினி' என்ற பெயரே 'பழநி' என்று மாறியிருக்கலாம். புராணங்கள் வகுத்த காலத்து இதற்கு 'பழம் நீ' என்று இறைவன் முருகனை அழைத்த கதை புகுந்திருக்கவேண்டும்.

இன்னும் இத்தலத்தில் முருகன் கோயில் கொண்டருளியதற்கு ஓர் விருத்தாந்தமும் கூறப்படுகின்றது. அகத்தியரால் ஏவப்பட்ட இடும்பன் என்பான் சஞ்சீவி மலையில் இரு பகுதிகளைத் தனது 'காவுதடி'யில் இரண்டு முனைகளிலும் கட்டித்தூக்கி வந்ததாயும், இந்த இடத்திற்கு வந்து இளைப்பாறும் பொருட்டு அவற்றைக் கீழே வைத்ததாயும் அவை அங்கேயே வேரூன்றி விட்டதாகவும் இடும்பனல் மறுப்படியும் அவற்றை எடுக்க முடியாதுபோக முருகன் அவனுக்குக் காட்சியருளி ஆட்கொண்டதாயும் தலவரலாறு கூறுகின்றது. இந்த வரலாற்றைக் கொண்டே இன்றும் அடியார்கள் இறைவனுக்குப் படைக்கும் பொருள்களை இருபக்கமும் கட்டி 'காவடி எடுப்பது' வழக்கமாக இருக்கின்றது என்பார்கள். 'காவுதடி' என்ற சொல்லே காவடி என்று மருவிற்று என்பது அவர்கள் கூற்று. கா + அடி அல்லது 'காக்கும் திருவடி' என்றதைக் காவடி என்று சொல்வதே பொருந்தும். அவ்வாறு காக்கும் திருவடிக்கு எடுத்துச் செல்லும் அபிஷேகப் பொருள்களைக் கட்டித் தூக்கிச்செல்லும் சாதனத்தைக் 'காவடி' என்றே அழைத்தனர். இந்தப் பொதுப் பொருள்தான் மற்ற தலங்களிலும் மற்ற தேவதைகளுக்கும் காவடி எடுக்கும் வழக்கத்துக்குப் பொருத்தமாக இருக்கும்.

புராணக் கதைகள் எவ்வாருயினும் இத்தலம் மிகவும் தொன்மை வாய்ந்தது என்பதற்கு ஐயமிலது. நக்கீரர் காட்டும் ஆவினன்குடி முருகன் மூவருக்கும் முதல்வனுய் முழுமுதற் கடவுளாய் அருவமாய், நாமரூபமற்ற பரமசிவமாய், "தாவில் கொள்கை மடந்தையொடு சின்னுள் ஆவினன்குடி அசைதலும் உரியன்" என்ற முறையில் காட்சியளிக்கிருன். நக்கீரர் காலத்தில் மலைக்கோயில் இருந்ததா என்பது நிர்ணயிக்கப்படவில்லை. 'ஆவினன்குடி' என்பது மலையடிவாரத்தில் "வையாபுரிக் குளத்தருகே இருக்கும் கோயிலுக்கே இன்று வழங்கப்படுகின்றது. 'வையாபுரி' என்ற சொல்லும் 'வை + ஆவி + புரி' என்பதின் திரிபு. அப்பெயரே ஆவினன்குடி என்று பொருள்படுவதும் காண்க.

நிற்க, இத்தலம் தொன்மை வாய்ந்தது மட்டுமல்ல மிகுந்த மகிமை வாய்ந்ததாகவும் கருதப்படுகின்றது. மலையில் இருக்கும் திருவுருவம் அதிசயமான சக்தி வாய்ந்ததாயும் இருக்கின்றது. நக்கீரர் முதல் தற்காலப் புலவர்கள் ஈருக உள்ள பல அநுபூதிமான்களால் இத்தலத்தின் பெருமை வெகுவாகப் புகழப்பட்டிருக்கிறது. ஊர்களெல்லாம்

தலங்களுமல்ல என்பதை யாவரும் அறிவர். ஆன்றோர் தலம் என்றதற்கு சில அளவைகள் விதித்துள்ளனர். மூர்த்தி விசேஷம், தல விசேஷம், தீர்த்த விசேஷம் என்ற முப்பான்மைச் சிறப்புகளும் பொருந்தின இடங்களே தலங்களாகக் கருதப்பட்டிருக்கின்றன. அவ்வகையில் பழநித்தலத்தில் இம்முப்பான்மைச் சிறப்பும் ஒருங்கே அமைந்திருக்கின்றது.

முதலாவது மூர்த்தி விசேஷம். மலையில் திருக்கோயில் கொண்டருளும் அர்ச்சா மூர்த்தியை அலங்காரம் ஒன்றும் இல்லாமல் பார்த்தோமானால் அது முருகன் உருவம் என்று சொல்ல யாதொரு அடையாளங்களும் இல்லை. வேலில்லை, மயில் இல்லை, வள்ளி தெய்வயானை இல்லை. ஓர் தடியை ஊன்றி நிற்கும் கோவணாண்டியாய்த்தான் தரிசனம் அளிக்கின்றான். அவன் ஆடைகோவணம் என்பதால் காட்டப்படும் தத்துவப்பொருள் இறைவன் ஆணுமல்லன், பெண்ணுமல்லன், அலியுமல்லன் என்பதுதான். மணிவாசகப் பெருந்தகை தமது "திருச்சாழல்" திருப்பாட்டில்,

மன்னுகலை துன்னுபொருள் மறை
நான் கோவான் சரடா(ய்)த்
தன்னையே கோவணமாச் சாத்தினன்
காண் சாழலோ

என்று கோவணத்தின் தத்துவத்தை விரிக்கின்றார்.

இந்த உருவம் போகர் என்ற சித்தரால் ஸ்தாபிக்கப்பட்டது. அவர் ஒரு பெரிய மருத்ததுவக்கலை நிபுணர் என்பதை யாவரும் அறிவர். அவர் நவபாஷாணங்களைப் பக்குவப்படுத்தி பாதரஸத்தில் முறியாக்கி இவ்வுருவை அமைத்தார். ஆகவே பழநியப்பன் மீது சாத்தப்படும் விபூதி, சந்தனம், பஞ்சாமிருதம் போன்றவைகள் அச்சிலையின் மருந்து சத்தைப் பெற்று நாம் பிரசாதமாக வாங்கும் போது சிறந்த ஒளஷதங்களாகக் கிடைக்கின்றன என்பதை பரிசோதித்து தெரியலாம். வெறும் மருந்துதானா? என்று கேட்டு விடாதீர்கள், இன்னொரு இரகசியம் இருக்கின்றது.

மலைக்கோயிலில் அம்மன் சந்நிதியே இல்லை ஆயினும் 'இராக்காலம்' என்று சொல்லப்பட்ட 'பள்ளியறை' தரிசனம் தினமும் நடைபெறுகின்றது. பள்ளியறையிலாவது அம்மன் உருவம் உண்டா? அதுவும் இல்லை. பின் 'இராக்கால பூஜை' எதற்கு நடக்கின்றது?

இராக்கால அபிஷேகத்தின் போது அப்பன் திருவுருவத்தோடு வெள்ளியினுலாகிய தாமரை இதழ் பீடத்தில்தங்கத்தாலாகிய திருவடிகள் இரண்டு அமைக்கப்பட்ட ஒரு 'மேரு'வுக்கும் அபிஷேகம் ஆகும். இது ஆகமவிதிப்படி பிரதிஷ்டை செய்யப்பட்டதும் மிகச் சிறந்த முறையில் மந்த்ரசக்தியால் உருவேற்றப்பட்டதுமாகும். இதுவே இக்கோயிலின் ஜீவநாடி. இதைத்தான் புஷ்பத்தால் மூடி வெள்ளிச்சிவிகையில் வைத்துப் பிரகாரம் சுற்றிக்கொண்டு வந்து பள்ளியறையில் உள்ள வெள்ளி ஊஞ்சலில் எழுந்தருளச் செய்து தூப தீப நைவேத்தியம் காட்டியபின் கதவு சாத்தப்படும். காலையில் விச்வரூபதரிசனத்தின்போது இதை எடுத்துக்கொண்டு போய் கர்ப்பகிரஹத்தில் ஓர் பேழையில் வைத்துவிடுவார்கள். இரவு மறுபடியும் இராக்காலம்; இந்த இராக்கால பூஜை வெகு விசேஷமானது. ஆகவே மருந்து மயமான உருவத்தாலும், மந்திரமாயமான சிபாதத்தாலும், இக்கோயிலில் இருக்கும் மூர்த்தி உடலைப்பற்றும் நோய்களையும், உயிரைப்பற்றும் மலங்களையும் ஒருங்கே நாசம் செய்து இம்மை மறுமை என்ற இரண்டு பலன்களையும் அளிக்கும் சக்தி வாய்ந்தது.

இரண்டாவதாகத் தலவிசேஷம். இத்தலத்தின் தலபுராணத்தைச் சுருங்கச் சொன்னோம். புராணங்கள் சில தத்துவங்களை விளக்க வந்த உருவகக் கதைகள் என்பதை நாம் மறக்கக்கூடாது. வெறும் தத்துவத்தைச் சொன்னால் கேட்பாரில்லை. தத்துவத்தை விளக்கிவிட்டால் 'இதுதானா?' என்ற ஓர் அலக்ஷியம். இந்த இரண்டுக்குமிடையே பார்ப்போமானால் புராணங்களை வாசிப்போர் நமது முன்னோர்களின் கூர்த்தமதியை வியந்து பாராட்டாமல் இருக்கமுடியாது. முதலில் முருகனும் விநாயகரும் மாதுளங்கனிக்காகப் போட்டியிட்டார்கள் என்ற கதையைப் பார்ப்போம். அது 'மாது + உளம் + கனி' சித்சக்தியின் உயிர்நாடியான சிவமே மாதுளங்கனி. விநாயகர் அம்மை அப்பனைச் சுற்றினார். அதாவது இவைவியோடு சேர்ந்த இறைவனிடம் பிரபஞ்சத்தைப் பார்த்தார். முருகன் மயில் (பிரண

வம்)மீது பிரபஞ்சத்தை வலம் வந்தார். அதாவது நாதத்திலிருந்து விரிந்த பிரபஞ்சத்தில் இறைவன் இறைவியைக் கண்டார். ஆகவே சிவத்தில் பிரபஞ்சத்தையும், பிரபஞ்சத்தில் சிவத்தையும் கண்டதே இப்புராண வரலாற்றின் உட்பொருள். அதுபோன்று இரண்டாவது கதை இடும்பன் சஞ்சீவிபர்வதம் கொண்டுவந்தது. இது கதையல்ல. உண்மையில் பழநிமலையில் சஞ்சீவி மூலிகை இருப்பதாய் நம்பப்படுகின்றது மட்டுமல்ல, அதனால் நன்மை அடைகின்றவர்களும் உளர். இத்தலத்தில் "அக்கினி நட்சத்திரம்" என்ற சித்திரை மாதக் கடைசி வாரமும் வைகாசி மாத முதல் வாரமும் ஏராளமான சேவார்த்திகள் வருகின்றார்கள். வெயில் நன்றாகக்காயும் காலத்தில் இத்தலத்தில் கூடும் கூட்டத்தைக் கண்டவர்கள் ஆச்சரியப்படுவார்கள். இந்த அக்கினி நட்சத்திரக் காலத்தில்தான் சஞ்சீவி மூலிகை புஷ்பிக்குமாம். அதுவும் அதிகாலையில் சூரியன் உதயமாகுமுன்பு புஷ்பித்து சூரிய கிரணங்கள் பட்டவுடனே வாடிவிடுமாம். ஆதலால் சேவார்த்திகள் அதிகாலையில் நீராடி சூரியன் எழுமுன் கிரிவலம் வருவார்கள். காலை 4 மணிமுதல் சாரிசாரியாக அடியார்கள் கிரிசுற்றி வருவதை இன்றும் காணலாம். இவ்வாறு 15 தினங்கள் அதிகாலையில் நீராடி கிரிவலம் வருவதால் தீராத நோயெல்லாம் தீருவது அனுபவபூர்வமாக நடந்து வருகின்றது. வெறும் கதையல்ல உண்மை.

நம்முன்னோர்கள் தலங்களாக அமைத்த இடங்கள் பெரும்பாலும் சுகாதாரத்துக்குப் பொருந்தினவாக இருப்பது சிந்திக்கத் தகுந்தது.

மூன்றாவதாக தீர்த்த விசேஷம்: தண்ணீர் அதன் உற்பத்திஸ்தானத்துக்கு ஏற்ப குணமாறுபாடுடையது என்பது விஞ்ஞானிகளும் கண்ட உண்மை. சில ஊற்றுக்களுக்கும், நதிகளுக்கும் இத்தகைய மருந்து சக்தி இருக்கின்றது என்பதை யாரும் ஒப்புக்கொள்வார்கள். அதனாலேயே நமது தலங்களில் உள்ள நீர் நிலைகளிலோ, ஆற்றங்கரைகளிலோ நீராடுவதால் உடல் நலம் உண்டாகும் என்ற கொள்கை நம்நாட்டில் வெகுகாலமாகவே இருந்து வருகின்றது. இப்பழநிப்பதியில் இருக்கும் நதிக்கு "ஷண்முக நதி" என்று பெயர். அது கொடைக்கானல் மலையில் உற்பத்தி ஆகின்றது. இது ஆறு ஊற்றுக்களிலிருந்து பெருகும் ஆறு சிற்றாறுகள் சேர்ந்து நதியாவதாலேயே "ஷண்முக நதி" எனப்பெயர் பெற்றது. இந்த ஆறு சிற்றாறுகளையும் இன்றும் காணலாம். இறைவன் பெயருக்கு ஏற்ப நதியின் பெயரும் அமைந்திருப்பதே இயற்கையின் விசித்திரம். நல்ல தெள்ளிய தண்ணீர் மலையினின்றும் இழிந்து வருவதில் அந்தந்த இடங்களிலுள்ள பாறைகள், நிலம், மூலிகைகள் இவற்றின் சேர்க்கையால் இத்தண்ணீர் நல்ல சத்து வாய்ந்ததாக இருக்கின்றது. பழநித்தல வரலாற்றில் இந்நதியில் தங்கத்தேர் ஒன்று அழுந்தி மறைந்துவிட்டதாகக் கூறப்படுகின்றது. தற்கால விஞ்ஞானிகள் இத்தண்ணீரை ஆராய்ந்து அதில் ஓரளவு தங்க சத்து இருப்பதாகக் கூறுகிறார்கள். இம்முடிவு பூர்வ புராணச் செய்திக்கு எவ்வளவு நெருங்கியே வருகிறது என்பதை நேயர்கள் சிந்திப்பார்களாக. இத்தகைய காரணங்களால் இந்நதி ஓர் புனித நதியாகக் கருதப்படுகின்றது. கங்கையில் தங்கசத்து இருப்பதாயும் அந்நீரில் கிருமிகள் நசித்துவிடுகின்றன என்றும் கூறப்படுவது யாவரும் அறிந்ததே. அதுபோன்றே ஷண்முக நதியிலும் தங்கச்சத்து இருப்பதால் அதில் நீராடல் உடல் நலனுக்கு உகந்ததாக இருக்கும். இவ்வாறு மூர்த்தி, தலம், தீர்த்தம், என்ற மூன்று தன்மைகளிலும் சிறப்புக் காணப்படுவதாலேயே அருணகிரியார் இத்தலத்தை காசியில் மீறிய பழநி என்று பாடிப்போந்தனர்.

நிற்க, முருகனுடைய ஆறுபடை வீடுகள் ஆறு என்று கூறுவதில் அவை நமது உடலிலேயே உள்ள ஆறு ஆதார க்ஷேத்திரங்களான, மூலாதாரம், ஸ்வதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞைஎன்பவையே. அவற்றுள் ஆவினன்குடி என்பது ஆக்ஞை என்ற புருவமத்தியில் இருக்கும் ஆதாரகமலமாம். முருகனே குண்டலினி. இக்குண்டலினி சக்தி ஆறு ஆதாரகமலங்களையும் பேதித்துக்கொண்டு மேலே செல்லுங்கால் ஆங்காங்கு சாதகனுக்கு ஏற்படும் அனுபவங்களையே நக்கீரர் தமது திருமுருகாற்றுப்படையில் ஆறுபடை வீடுகளாக வெவ்வேறு நிலைகளில் சித்தரித்திருக்கின்றார்.

ஆகவே, பழநி முருகன் மூவர்க்கு முதல்வனை முழுமுதற் கடவுள். அவனே பஞ்சக்ருத்தியங்களையும் செய்தும் அவற்றிற்கப்பாலாயும் நாம ரூபரஹிதனாய் நிற்கின்றான். அவன் இருக்கும் ஆவினன்குடி மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றையும் ஒருங்கே பெற்று இருக்கின்றது.

# பழநி ஆண்டவன் கீர்த்தனைகள்

[திருவாசகமணி திரு. K. M. பாலசுப்பிரமணியம், B A , B.L.]

இராகம் - தோடி] பல்லவி [தாளம் - ஆதி

பார்த்திருப் பேன்பழநிப் பண்டாரக் கோலத்திலே
பாலசுப்ர மணியன் பண்பினையே (பா)

அனுபல்லவி

நேர்த்தியு டன் நிமிர்ந்து நீளுலகம் ஆண்டிடும்
கீர்த்தியுடையான் தன்னைக் கெஞ்சிப்பணிந்திருந்தே (பா)

சரணம்

ஆர்த்தொலிக்கும் கழலைச் சேர்த்துப் பிடித்துநின்றே
ஆசைக்குகந்த மண வாள் எனப்புகன்றே
வார்த்தை குழறி மெய்யே வேர்த்து விதிர் விதிர்க்க
வஞ்சம் ஒழிந்த நெஞ்சால் தஞ்சம் என நினைந்தே (பா) (1)

இர்ாகம் - செஞ்சுருட்டி.] பல்லவி [தாளம் - ஏகம்

கிண்கிணிச் சதங்கைகட்டிப் பண்களிகூரக்கை கொட்டி
என்கணின் முன்னேவந்து நிற்பாய் பழநிவெற் போய் (கிண்)

அனுபல்லவி

மண்களிகூ ரமகிழ்ந்து விண்களிகூ ரப்புகழ்ந்து
கண்களிகூ ரப்பணியும் பண்களும் உன்பதத்தில் (கிண்)

சரணம்

உன்கனிநீ யாயிருக்க ஓர்கனிக்கன் றேயுலகை
எண்கணிக்க வொண்ணுதஇ மைப்பொழுதிற் சுற்றிவந்து
கண்பனிப்ப நின்றஇளம் கன்றனைய காதல்மிகு
தண்பனிச் சந்திரமுகா தென்பழநிச் சேய்முருகா (கிண்) (2)

இராகம் - கல்யாணி] பல்லவி [தாளம் - ஆதி

ஐயா புரிந்த தெனக்கே உன்றன் பெருமை
ஐயா புரிந்த தெனக்கே (ஐயா)

அனுபல்லவி

வையா புரிக் கந்தனே வாழ்த்தும் அடியவர்தம்
கையால் தொழ அவரைக் கண்ணுற் பார்த்தும் காப்போனே (ஐயா)

சரணம்

மெய்யாம் உளத்தினேடும் மேலாம் உனைத்தொழவே
மேவிக் கனிந்து சென்றேன் தாவிக்குனிந்து நின்றேன்
செய்யாயுன் தண்ணருளைச் சீராயெனக் கென்றுன்னைச்
சேயாய்ப் பணிந்தேன் நீ காப் பாயே பழநியப்பா (ஐயா) (3)

இராகம் - சாமா] பல்லவி [தாளம்-ஆதி]

உன்னரு ளாலே பிறந்தேன் — எனக்கும் உன்றன்
இன்னருள் தாநீ சுரந்தே — எழிலுறு பழநியில் குக
(முடுகு) உலகினில் உனைவிட
ஒருகதி பிறிதிலை
எனுமது தெளிவுற
நனிமனம் அறியுமே (உன்)

அனுபல்லவி

மன்னருட் பிறந்திடும் மகிமையில் லேன் எனினும்
மாமயில் மீதமரும் மாமுருகனே கோனே (உன்)

சரணம்

அன்னை வயிற்றுள் அன்று அறுமுகா நின்குன்று
தன்னை யடையும் போது தரிக்கும் அருள் தந்தவா !
பின்னை வயிற்றில் திண்ணம் பேர்த்துப் பிறவா வண்ணம்
நின்னை வணங்கி நின்றேன் நீயே யருள் செய் வாயே ! (உன்) (4)




திருவாவினன்குடி கோயில்




பெரியாவுடையார் கோயில்




தங்க ரதம்



வெள்ளி ரதம்



திரு. C. S. தீனதயாளு, B.Sc., B. L.. இறைபணியாளர்





பல ஆண்டுகளாக பழனியாண்டவர் சந்நிதியிலிருக்கும் வெள்ளை, சிவப்பு உயிர்ச் சேவல்கள்.

# சமயநெறிகளிலும் மாறுதல்

கோவை கிழார் திரு. C. M. இராமச்சந்திரன் செட்டியார், B.A., B.L.,

மக்களில் இரண்டுவிதமான கொள்கைகள் கொண்டவர்கள் உள்ளார்கள். ஒரு கொள்கையினர் பழக்கமாக வந்த செயல்களையே செய்தல் வேண்டும், அவைகளுக்கு சிறிதும் மாறுபட்டு நடக்கப்படாது. எத்தனைக் குறைகள்கொண்ட போதிலும் அவைகளைத் திருத்தி அமைத்தல் சரியல்ல என்பதாகும். மற்றொரு கொள்கையினர் தமது செயல்கள் எத்தனைப் பழமையாக இருந்த போதிலும் அவைகளில் குற்றங் குறைகள் இருந்தால் அவைகளை நீக்கி காலத்திற்கேற்றபடி மாற்றி செயல்முறை நடத்துவதே சரியென்பதாகும். இவ்விரு முறைகளில் முதல் முறை வைதீக முறையென்றும், இரண்டாம் முறை லௌகீக முறையென்றும் கூறுவார்கள். சமயச்சார்பில் வாழ்க்கை நடத்தும் கூட்டத்தார்கள் முதல் முறையைப் போற்றுவார்கள். இரு திறத்தார்களும் தாங்கொண்ட கொள்கைகளே சரியானவை யென்று வற்புறுத்திப் பேசுவார்கள். அவர்களில் பெரும்பான்மையோர் தாங்கொண்ட கொள்கைகளே சரியானவையென்று நம்பியும் இருப்பார்கள். ஆகவே இவர்களை உள்ளொன்று கிடக்கப் புறமொன்று பேசுவார் என்று கூறவும் இயலாது. வைதீகக் கொள்கையினர் தாம் செய்யும் செயல்களும் சடங்குகளும் பண்டைக் காலத்தில் இருந்தே வழங்கி வந்தவைகள் என்று நம்புகின்றார்கள். எப்பொழுதும் மாறுபாடு அடையாத பழக்க வழக்கங்கள் அவையாகுமென்று வற்புறுத்துவார்கள். ஒரு சிறிதாவது மாற்றுதல் செய்யவேண்டுமென்றால் அதையும் ஒத்துக்கொள்ளார்கள். லௌகீகக் கொள்கையினர் அந்தச் சனாதனக் கொள்கையை மறுப்பார்கள். இவ்வித வேறுபாடு உலகம் முழுவதிலுமுண்டு. மேற்குநாடுகளிலுமுண்டு, கீழ்நாடுகளிலுமுண்டு. மேற்கு நாடுகளில் விவிலிய சமயத்தில் கேதலிக் வகுப்பிற்கும் பிராட்டஸ்டண்ட் வகுப்பிற்கும் உள்ளவேறுபாடு இதுதான். கீழ்நாடுகளில் நமது பாரதகண்டத்தில் இந்த வேற்றுமை மிகுதியாக உண்டு. சாதாரணமாக சமய நிலையங்களில் எங்கும் காணலாம், தவிர மனித வாழ்க்கையிலும் சமூகச் செயல்களிலும் இப்பிளவு இருக்கக் காணலாம். இப்பிளவின் உண்மை நிலையை ஒரு சிறிது விளக்கிக் கூறுவோமாக.

நமது நாட்டு சமயநிலையை சனாதனம் என்னும் சொல்லால் குறிப்பிடுவார்கள். சனாதனம் என்றால் எப்பொழுதும் அழியாதது. அதாவது எப்பொழுதும் ஒரே நிலையில் இருப்பது என்பது கருத்து. பண்டைக்காலத்தில் இருந்த நிலையே இப்போதும் இருக்கிறது என்று பொதுமக்கள் கருதுவார்கள். சமயக் கொள்கைகளிலும் சடங்குகளிலும் ஒருவிதமான மாறுதலும் ஏற்படாது என்பது அதன் பொருள். அவ்வாறு மாறுபடாத நிலையில் எப்போதும் இருக்கின்றதா? என்று கேட்கின் இருக்கின்றது என்றே உறுதியாகக் கூறுவார்கள். இதற்கு வரலாற்று ஆராய்ச்சி உடன்படாது என்று அறியவேண்டும். உலகத்தில் எதுவும் மாறிக்கொண்டே இருப்பது தான் இயற்கை. மாறுபாட்டால்தான் வளர்ச்சி பெருகும். மாறுபாடு இல்லாவிட்டால் நின்ற நிலையில் இருக்கவேண்டி வரும். அது இறப்பிற்கு ஒத்தது என்று அறிவியல் கூறும். இவ்வாறு மாறிக்கொண்டே இருக்கும் உலகில் சமயம்மட்டும் மாறாமல் இருக்குமா? என்பது ஒரு வினவாகும். உலகத்தில் உள்ளசமய வரலாற்றை ஊன்றிப் பார்க்கும்போது மனிதனுடைய அறிவிற்கு ஏற்றப்படி சமய நம்பிக்கையும் முன்னேறி வருவதைக் காணலாம். அந்த நிலை பிறநாட்டில் மட்டுமன்றி நமது நாட்டிலுமுண்டு. பிறநாட்டுச் சமயங்களில் எவ்வாறு பலவேறு பிளவுகள் ஏற்பட்டு இருக்கின்றனவோ அவைகளைப் போலவே நமது நாட்டிலும் கணக்கற்ற பிளவுகள் ஏற்பட்டு இருக்கின்றன. கருத்து வேற்றுமை யேற்படும்போதெல்லாம் புதுக்கிளைகள் ஏற்படும்.

அப்போது பிளவுகள் ஏற்படுவது இயல்பு. மற்ற நாடுகளைக் காட்டிலும் நம் நாட்டில் கணக்கற்றப் பிளவுகளும் சமயக் கிளைகளும் ஏற்பட்டு இருக்கின்றன. ஆகவே எக்காலத்திலும் ஒரே நிலையான தன்மை சமயத்திலும் இல்லையென்று கூறலாம் அல்லவா?

நமது நாட்டில் மற்றொரு கருத்துண்டு. இந்து சமயத்தினனாக ஒருவன் பிறக்கலாமே தவிர மாற்றத்தினால் வரக்கூடாது என்பதே. மேல்நாட்டில் யூதன் பிறப்பினால்தான் வர முடியும். ஆனால் கிறிஸ்தவனோ, இசுலாமியனோ மதமாற்றத்தால் வரலாம். இந்துநாட்டில் இந்துவாக ஒருவன் ஆகவேண்டுமென்றால் பிறப்பினால்தான் ஆக முடியும். மதமாற்றத்தினால் பிறனொருவன் இந்துவாக ஆக முடியாது. இதுதான் தற்கால மக்கள் கருத்து. ஆனால் நாட்டு வரலாற்றை ஆராய்ச்சி செய்யும் போது இக்கருத்து சரியல்ல என்று தோன்றும். இரண்டாயிரம் ஆண்டுகளாக நமது நாட்டில் உண்டான சமய வளர்ச்சியைப் பார்க்கும் போது எத்தனையோ பிறநாட்டார்கள் நமது நாட்டில் புகுந்து தனித்தனி வகுப்புகளை ஏற்படுத்திய போதிலும் அவர்களில் பல வகுப்பார்கள் இந்து மதத்தைத் தழுவியும் இருக்கின்றார்கள். மதத்திற்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டு மிருக்கிறார்கள். வடமேற்கு கணவாய்களில் இருந்து இந்தியாவிற்குள் சென்ற இருபத்தைந்து நூற்றாண்டுகளாகப் படையெடுத்துவந்த அன்னியர்கள் என்ன ஆனார்கள். யவனர்கள் என்ற கிரேக்கர்கள் முதன்முதலில் வந்தார்கள். அவர்களில் பல பேர் இந்தியாவிலேயே தங்கி இங்கேயே மணம் செய்துகொண்டு இந்துக்களாகிவிட்டார்கள். இந்த உண்மை மத்திய இந்தியா கோயில் கல்வெட்டு ஒன்றில் உறுதிப்படுத்தப்பட்டு இருக்கிறது. யவனநாட்டு இளவரசன் ஒருவன் இந்தியா நாட்டு இளவரசியை மணந்து வாசுதேவன் என்ற பெயரை வகித்துக்கொண்டு ஒரு வெற்றித்தூண் கோயிலில் நடுவித்தான் என்று கூறப்படுகிறது. அதற்குப் பிறகு சில நூற்றாண்டுகளுக்குப் பின் ஹூணர்கள் என்ற மேல் ஆசியக் கூட்டங்கள் வடமேற்கு இந்தியாவின்மீது படையெடுத்து வந்து பெரும் பகுதியைப் பிடித்துக்கொண்டு அரசாண்டார்கள். அவர்களில் கோமனன், மிகிரகுளன் என்பவர்கள் இந்துக்களாகிவிட்டார்கள். இவை போன்ற எத்துணையோ எடுத்துக்காட்டுகள் நடந்து இருக்கின்றன. காடுகளில் வாழும் மறு இனத்தவர் பண்பாடு பெற்றவர்களாகி இந்து சமயத்தில் சேர்ந்து இருக்கின்றனர். இவையெல்லாவற்றையும் பார்க்கும் போது இந்து மதத்தில் மதமாற்றம் இல்லையென்று கூறுவது சரியா? பிறநாடுகளில் மத மாற்றம் நடந்ததுபோல இந்நாட்டிலும் நடந்து இருக்கின்றது என்பதை அறிய வேண்டும்.

மேலும் புதியதாக ஒரு இயக்கம் தோன்றினால் அவ்வியக்கம் நாளடைவில் வலுத்து பழைய கொள்கைகளை மாற்றி வருவதும் உண்டு. நமது நாட்டில் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் இருந்த கொள்கைகள் வரவர மாறிவந்தன என்று அறியவேண்டும். முன்னாளில் உயிர்க்கொலை மூலமாக வேள்விகள் நடந்தன. சமணரும் பௌத்தரும் தோன்றி அதனை மாற்றி உயிர்க்கொலையை நிறுத்தி விட்டார்கள். மேலும் புதியதாக பல சமரசங்களையும் கொண்டுவந்து புகுத்தினார்கள். அதற்குப்பின் பல சமயாசிரியர்கள் தோன்றி பற்பல கருத்துக்களையும் நுழைந்துவிட்டார்கள். அப்போதும் மாறுதல்கள் ஏற்பட்டன. சமயநிலையங்களிலும் புதுக்கொள்கைகள் வந்துவிட்டன. ஆலய வழிபாட்டிலும் மாறுதல்கள் தோன்றின. நூற்றுக்கணக்கான ஆண்டுகளில் தோன்றக்கூடிய மாறுதல்கள் பெரிய மாறுதலாகத் தோன்றாது. அந்த வகையில் பொதுமக்களுக்கு மாறுதல் ஏற்பட்டதாக நினைவே இருக்காது. ஆகவேதான் எப்பொழுதும் மாறாதசமயம் என்று கூறினார்கள்.

மாறுதல்கள் கொள்கைகளிலும் சடங்குகளிலும் பழக்க வழக்கங்களிலும் ஏற்படுவது மட்டுமேயன்றி பெயர்களிலும் ஏற்பட்டன என்று அறிய வேண்டும். பழனியம்பதியின் பெயரே இதற்கு ஒரு எடுத்துக்காட்டு. தற்கால பழனியில், வட்டவடிவமான குன்று ஒன்றும் அதன் அடியில் திருவாவினன்குடி யென்ற ஒரு இருக்கையும், அதனை யடுத்து பழனி யென்ற ஊரும் இருக்கின்றன. இவைகளின் பெயர்கள் பண்டைக்காலத்தில் உள்ளனபோல் தற்போதும் உள்ளனவா என்பது வினா. மலையின் பழைய பெயர் "பொதினி" என்று கல்வெட்டுக்களாலும் நூல்களாலு அறிகின்றோம். அடிவாரமாகிய "திருவா

னன்குடி'' யென்பது "சித்தன் வாழ்வு" யென்ற பெயரால் முன்னே வழங்கி வந்தது. பழனியென்ற ஊர் பிற்காலத்தில் அப்பெயர் பெற்றது. இப்பெயர்களைப்பற்றி தமிழ் ஆராய்ச்சியாளர்கள் அடியிற்கண்டபடி கூறு கிறார்கள்.

பண்டைக்காலத்தில் தமிழ்நாட்டில், சேர, சோழ, பாண்டிய மன்னர்களேயன்றி வேளிர் என்ற வள்ளல்கள் இடைநாடுகளில் ஆண்டு வந்தார்கள், வேளிர்களின் ஒருவன் "ஆவி" யென்பான். அவனை வையாவிக்கோன் என்று அழைப்பார்கள்; அவனது இருப்பிடம் "ஆவி - நன் - குடி"யென்பது, அஃதாவது ஆவியென்ற தலைவனுடைய நல்ல இருக்கை யென்பது பொருளாகும். அவனுடைய குளம் "வையாவிக்குளம்" என்று இருந்தது. அப்பெயர் "வையாபுரிக்குளம் என்று ஆகி விட்டது. வேளிருடையமலை பொதினிமலை யென்று சங்கநூல்கூறும். பொதினியென்ற பெயர் அங்கு வாழும் மலசர்களுடைய வாயில் நுழையாது, பழனியென்று ஆயிற்று யென் பர். இந்த வகையில் நாளாவட்டத்தில் பொதினியென்பது பழனியாகவும் வையாவிக் கோன் என்பது வையாபுரியென்றும் ஆகி விட்டன. இது ஆராய்ச்சியாளர் கூற்று.

இனி மூன்று, நான்கு நூற்றாண்டு களுக்கு முன் பழனியைப்பற்றி எழுதிய பால சுப்பிரமணியக் கவிராயர் பழனி யென்ற சொற்கு புராணக் கதை தீட்டிவிட்டார். அம்மையப்பர்கள் மூத்தப் பிள்ளையாருக்கும், இளைய பிள்ளையாருக்குமாக, விளையாட்டாக ஒரு பந்தயம் வைத்து யார் முன் எல்லா உல கங்களையும் சுற்றி வருகின்றார்களோ அவர் களுக்கு பழம் கொடுக்கப்படும் என்று சொன்னபோது மூத்த பிள்ளையார் அம்மை யப்பர்களை வலஞ்செய்து வந்து பழத்தைப் பெற்றுக்கொண்டார். இளைய பிள்ளையாரோ உண்மையாகவே எல்லா உலகங்களையும் சுற்றி வந்தார். ஏற்கனவே பரிசு மூத்தப்பிள்ளை யாருக்கு சென்றதை அறிந்த இளைய பிள்ளையார் சினந்து நிற்க அம்மை "நீயே பழமன்றோ" யெனக்கூறி இளைய பிள்ளையா ரைத் தழுவிக்கொண்டார். இந்த வகையில் பழம்—நீ யென்ற சொற்கள் பழநியென்ற ஊர்ப்பெயராயிற்று என்று புராணம் கூறும். ஆகவே ஆராய்ச்சியில் கண்ட வரலாற்றிற்கு மாறாக புராணக்கதை வரைந்துளது இந்த முறையில் தென்னாட்டில் உள்ள மலைகள், நீர் நிலைகள், ஊர்கள் முதலியவற்றின் பெயர்கள் பலவாறாக மாறி யிருக்கின்றன. ஆகவே மொழிமாற்றமும், கருத்துமாற்றமும் நமது நாட்டில் எங்கு நோக்கினும் உண்டாகி இருக் கின்றன என்பதற்கு இது ஒரு எடுத்துக் காட்டு அல்லவா?

பழனியம்பதியில் குறிப்பிடத்தக்க மற் றொரு செய்தி நடந்திருக்கின்றது. அதிலும் மேற்கூறிய கருத்தே அடிப்படையாக உள தால் அதைப்பற்றியும் சிறிது விரிவாகக் கூறுவம்:—

இந்தப் புனித இடத்தில் முருகன் சந் நிதிகள் இரண்டுண்டு. ஒன்று அடிவாரத் திலும், மற்றொன்று மலைமீதும் இருக்கின் றன. அடிவாரத்தில் உள்ள சந்நிதி திருவாவி னன்குடியென்று வழங்கப்படுகிறது. மலையின் மீதுள்ள சந்நிதி "சிவகிரியென்று" திருப் புகழ் கூறுகின்றது. திருவாவினன்குடியென் பது ஆறுபடை வீடுகளில் ஒன்றாக திருமுரு காற்றுப்படை விதந்து கூறுகின்றது. ஆகவே இப்புனித இடம் சங்கத்தார் காலத்திற்கு முன்பிருந்தே புகழ்பெற்று இருந்தது என் பதை அறியவேண்டும். இங்கே முற்றும் துறந்த முனிவர்கள் தவம் செய்து வந்தார்கள் என்று அப்புனித நூல் கூறுகின்றது. மலை மேல் இருக்கும் திரு உருவத்தைப்பற்றி ஒரு வரலாறுண்டு. இவ்வுருவம் சிலையன்று. ஒன் பது பாசாணக் கற்களின் செயற்கை என்பது. இதனை ஆக்கியவர் போகர் என்ற சித்தர். பண்டைக்கால பதினெண் சித்தர்களில் இவ ரும் ஒருவர். இவருடைய திருவுருவம் மலைக்கோயிலின் வடமேற்கு திசையில் இருக்கின்றது. போகர் சீன நாட்டினர். காலம் இன்னதென்று அறியாத பண்டை நாளில் அவர் இம்மலைக்கு எழுந்தருளி அதன் சாரலில் தவம்செய்து வந்தார். சித்தியில் வல்லவர் ஆதல்பற்றி என்றும் அழியக் கூடாதபடி ஒன்பது பாசாணங்களை உருக்கி ஒன்று சேர்த்து முருகப்பிரானுடைய திரு உருவத்தை வார்த்து கோயிலில் நிறுத்தினர். அதுமுதற்கொண்டு அன்னாருடைய வழி பாட்டில் அத்திருவுருவம் இருந்தது. நாடோ றும் நூற்றுக்கணக்கான பஞ்சாமிர்த அபி ஷேகங்களை சென்ற ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக முழுக்கப் பெற்றும் திருவுரு

வம் கரையாத நிலையில் இருக்குமானால் அச்சித்தருடைய அறிவியற் பெருமையைப்பற்றி கூறவும் வேண்டுமோ. அச்சித்தரும் அவருடைய பரம்பரைச் சீடர்களும் இவ்வழிபாட்டை ஏற்று வந்தார்கள். இப்படியிருக்க பாண்டிய நாட்டில் மதுரையம்பதியில் ஆட்சியிலிருந்து வந்த திருமலை நாயக்கர் காலத்தில் (17-ஆம் நூற்றாண்டு) தளகர்த்தனாக இருந்த இராமப்பய்யன் என்ற அந்தணன் பழனிக்கு வழிபாட்டிற்காக வந்தான். அப்போது ஒரு பண்டாரம் வழிபாடுசெய்து வந்ததைக் கண்டுதான் பிரசாதத்தை வாங்க மறுத்து, ஒரு ஆதி சைவ குருக்களை நியமித்துவழிபாடு செய்யச்சொல்லி தான் பிரசாதம் பெற்றுக்கொண்டான். அதுமுதல் கோயில் வழிபாட்டு முறை கைமாறிவிட்டது. ஆகவே கோயிலில் நடக்கும் சடங்குகளும் உரிமைகளும் அவ்வப்போது மாறுகின்றன என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு அல்லவா?

தற்போது பழனியம்பதியில் கணக்கற்ற அன்பர்கள் வழிபாட்டிற்காக வருகின்றார்கள். இத்துணை பேரும் பஞ்சாமிர்த சேவை செய்தால் எப்படிப்பட்ட திருவுருவமும் சிறிது நலிவடையும் அல்லவா? இதற்காக வழிபாட்டு முறைகளை ஒருவாறு மாற்ற வேண்டிவரும். வடக்கே "பூரிசகந்நாதர்" தலத்தில் எத்தனை பேர் யாத்திரிகர் வந்தாலும் எல்லோருமாக சேர்ந்து ஒரே அருச்சனை நடைபெறுகிறது. அதுபோல இங்கேயும் ஒரு பஞ்சாமிர்த சேவை செய்தால் நலமென்று தோன்றவில்லையா. அப்போதுதான் சிறிது சீரணித்து வரும் உருவம் கெடாமல் இருக்கும். இது போன்ற சில மாறுதல்கள் இன்றியமையாதன என்று அறிய வேண்டும்.

சில செயல்கள் புனித இடங்களின் புனிதத்தை குறைத்து வருகின்றன. அவைகளில் மிகுதியாக கேடு விளைவிப்பது வாணிபம் ஆகும். இறைவன் இடத்து அன்பு செலுத்துவதற்கு மாறாக பஞ்சாமிர்தமாகிய புறச்சடங்குகளில் மக்கள் வெகுவாக பணத்தை விரையம் செய்கிறார்கள். திருக்கோயில் மூலமாக ஆயிரக்கணக்கான மக்கள் பிழைப்பதற்கு வழி தேடுகின்றார்கள். இது சோம்பேறித்தனத்தைப் பெருக்குகின்றது. நன்றாக கவனித்து சோம்பேறித்தனத்தை அறவே ஒழிக்க முயலவேண்டும். புனிதத்தை மிகுதியாக்கி அதற்காக சமய ஞானத்தை மக்களுக்குத் தருதலே உயர்ந்த சேவையாகும். அப்படிப்பட்ட சேவை பழனிக்கோயிலில் நிர்வாகத்தார்கள் ஈடுபடுதல் நலமாகும். அங்கு வரும் வருவாயில் இருந்து சமயக் கல்லூரி ஏற்படுத்தல் தேவைப்படும் என்று அறிய வேண்டும். இந்த முயற்சியில் மேலாளர்கள் முயற்சிப்பார்களாக.

ஒருபொழுதும் இருசரணம் நேசத்தேவைத்-துணரேனே
உனது பழநிமலையெனும் ஊரைச் சேவித்—தறியேனே
பெருபுவியில் உயர்வரிய வாழ்வைத்தீரக்—குறியேனே
பிறவியற நினைகுவனென்றுசைப்பாடைத்—தவிரேனே
துரிதமிடு நிருதர்புர சூரைக்காரப்—பெருமாளே
தொழுது வழிபடும் அடியர் காவற்காரப் பெருமாளே
விருதுகவி விதரண விநோதக்காரப்—பெருமாளே
விறல்மறவர் சிறுமிதிரு வேளைக்காரப்—பெருமாளே.

—அருணகிரிநாதர்

# "சிவபெருமான் பெற்ற பெருஞ்செல்வம்"

திரு. ஒண். கி. சந்திரசேகரன், M.A., B.T., B.O.L.
தமிழ்ப்பேராசிரியர், சர். தியாகராயர் கல்லூரி, சென்னை

திருமா லறியாச் சேவடி யாலென்
கருமா லறுக்குங் கணபதி சரணம்.
—திருவருட்பா.

சிவனொ டொக்குந் தெய்வந் தேடினுமில்லை
யவனொ டொப்பா ரிங்கியா வருமில்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னுந்
தவனச் சடைமுடித் தாமரை யானே
—திருமந்திரம்.

ஆறுமுக முந்திணிதோ ளீராறுங்
கருணையடித் துணையும்
வீறுமயிலுந் தனிக்கடவுள் வேலுந்
துணையுண் டெமக்கிங்கே
சீறும்பிணியுங் கொடுங்கோளுந்
தீயவினையுஞ் செறியாவே
நாறும் பகட்டான திகாரம்
நடவாதுலகம் பரவுறுமே
—திருவருட்பா.

படிக்கின் றிலைபழ நித்திருநாமம் படிப்பவர்தாள்
முடிக்கின்றிலை முருகா வென்கிலை முசியாமலிட்டு
மிடிக்கின்றிலை பரமானந்த மேற்கொள விம்மிவிம்மி
நடிக்கின்றிலை நெஞ்சமே தஞ்சமேது நமக்கினியே
—கந்தரலங்காரம்.

காவின்ன் குடிவுறு காமர் பொன்னகர்
மேவினன் குடிவரு விளியச் சூர்முதல்
பூவினன் குடிலையம் பொருட்கு மாலுற
ஆவினன் குடிவரு மமலற் போற்றுவாம்
—கந்தபுராணம்.

நோயேன் தனக்கொரு சஞ்சீவி
யஞ்சநுவன் றெழுந்த
பேயாந்தனக் கொருமந்திரமா
மெனைப் பேணுதற்கோர்
தாயா மினிய தமரா மெனக்
குறுதஞ் சமுமாம்
மாயாக் கருணைதருஞ்
சமராபுரி வானவனே
—திருப்போரூர்ச் சந்நிதி முறை.

## சிவகுமாரர்கள்

### 1. ஐயங்கரத்தையன்

கண்ணுதல் எந்தையார் அகிலம்யாவை யும் தாயென அருளும் தையலாளொடு தாம் பெருவியப்புடன் இயற்றுவித்திடும் தேம்படு தருவனத்துள்ளதோர் ஓவியமன்றினுள் ஏகினார். அப்பொழுது ஆங்கு ஆதியாகி யோங்கிய குடிலையாகிய தனி யெழுத்தானது பரமனது ஆணையால் இரண்டாகிக் களிறும் பிடியும்போலத் தோன்றியது. அங்கிருந்த ஓவியக்கோலம் யாவையும் "எண்டகு பெருநசை யெய்தி. ஐம்புலன் விண்டிடலின்றியே விழியின் பாற்படக் கண்டு" வரும் கவுரி நாயகி அவற்றைக் கண்டாள். அம்மையாரது காட்சியின் மாட்சியால் அவை "அன்பினால் முன்னுறு புணர்ச்சியின் முயற்சி" எய்தின, அக்கணம் அருள்,

முக்கண்நா ல்வாயினன் மும்முதத்து ஆறுபாய்
மைக்கருங் களிறெனும் மாமுகத்தவன் மதிச்
செக்கர்வார் சடைய"னாய் ஒருசிறுவன் வந்து

தோன்றினன். அவன்,

"ஒருமையால் உணருவோர்
உணர்வினுக் குணர்வதாம்
பெருமையான் எங்கணும்
பிறிவரும் பெற்றியான்
அருமையான் ஏவரும்
அடிதொழும் தன்மையான்
இருமையாம் ஈசனே"

என நின்று அருளும் ஐயனாயினன். அம் மதலையை நோக்கி,

"என்னரே யாயினும் யாவதொன் றெண்ணுதல்
முன்னரே யுனதுதாள் முடியுறப் பணிவரேல்
அன்னர்தஞ் சிந்தைபோல் ஆக்குதி அலதுனை
உன்னலார் செய்கையை ஊறுசெய் திடுதி"

என்று அந்தமில் கருணையார் அருளிச்செய்த பின், கயமுகத்தவனெனுந் தானவன் வன்மையைச் சாடித், தண்டுழாய்வானவன் சிறுமையும் மாற்றி வருக என்று பணித்தார். அவ்

ரொடு நண்ண பூதவெஞ் சேனையையும் அருளினர். மேல், மோனமே குறியதாம் முதலெழுத்தருளிய ஞானமா மதலையைத் தங் **கோயிலின் கடைத்தலையில் நாயகம் புரிகெனக்** கூறி அவரை அங்கு அருத்தியோடிருத்தினர்.

## 2. வைரவக் கடவுள்

பொன்னின் மால்வரையினுச்சிப் பொலங் குவடொன்றின்மேல் மாலும் முண்டகத்தயனும் வீற்றிருந்துழி, முனிவர் தேவர் வரம்பிலோர் வந்து அன்னுரை வணங்கி "மூவரின் முதலாஞேரும், முதலிடை முடிவு மில்லாத் தேவரும், எவையும் நல்கும் செல்வரும், பரமேலாகி ஓவரும் புவனத்துள்ள உயிர்க்குயிராய் நின்ருேரும் ஏவர்? எங்களுக்கு வல்லே இருவரும் இசைத்தீர்" என்று கேட்டனர். அப்பொழுது வேதா "யான் அத்தலைமையாம் பிரமமாகும்" என்ருன். நாரணன் தானும் "உன்றனைத் தந்தயானே உயர்தரும் பிரமம்" என்ருன். இருவரும் இனையன பேசி யாவரும் வெருவுரும் நிலையதாக எண்ணிலாவைகல் தருக்கஞ் செய்யப்போய்ப் பின்னர் பூசல் செய்திட்ட காலை வேதமும் குடிலையும் வேறு வேறு உருக்கொண்டெய்தி "மன்னுயிர்க்குயிராய் ஆர்க்குந்தாதையாஞ் சிவனே வாய்மைத் தற்பரன்" என்றுரைத்து விலக்கியும் தெருளாராய், கொடிய வெம்பூசலைச் செய்யவே, அடி முடியிலாத வள்ளல் அமலமாம் ஒளியாய் விண்ணின் நடுவுற வந்துதோன்றினன். அதனைச் சுடரென்றே மருண்டனர். பின், கயிலையில் உமையாளொடு கலந்து வீற்றிருக் குங்கோலச் செயல் கொடுபரமன் நண்ணச், சிவனென சிந்தை தேற்றிப் புயலுறழ்மேனிப் புத்தேள் பொருக்கென எழுந்து தாழ்ந்தான். மலரயன் நேயமொடெழுந்து தாழானுய் நெடியதன் னுச்சிச் சென்னித்தியதோர் வாயால் மேலாஞ் சிவனையும் இகழ்தலுற்ருன். அந்தக் கருணையங்கடலுஞ் சீற்றங்கொண்டிலன். எனினும் அஃது சிறிதே நிகழவும், எகினம துயர்த்த அண்ணல் இரும்பவந்தொலைப்பவும், ஏனைப் பகவர்தம் அகந்தை மாற்றவும், பண்ணவர் மதர்ப்புச்சிந்தவும்,மிகப்பெருங்கருணை தன்ஞல் தன்னுள்ளத்து மகிழ்வோடு வேத நாயகன் விரும்பினன். அப்பொழுது:

"நீலுறு சுடரின் மெய்யும்
ஞெகிழிகள் அகற்றுந்தாளும்
ஆலமது யிர்க்குஞ் செங்கேழ்அரவ
வெற்றரையும் சென்னி
மாலைகள் அனந்தகோடி வயின்
வயின் பெயரும் மார்பும்
சூலமும் பரசும் நாணும் துடியும்
ஏந்திய பொற்ருேளும்

முக்கணும் திங்களேபோல முளைத்தவா
ளெயிறும் வன்னிச்
செக்கரஞ் சடையின்சீரும்
செயிர் கெழுநகையு மாக
உக்கிர வடிவு கொண்டு"

**ஆங்கு வடுகதேவர் வந்து தோன்றினர்.**

அவரை நோக்கி "நஞ்சிறுவனுகுஞ் செங்கமலத்தோன் உச்சிச் சென்னி நம்மை யிகழ்ந்தது; அதனை வல்லே அகழ்ந்து கரத்திலேந்தியவனுயிர் நல்கித், தம்மையே புகழ்ந் திடு முனிவர் தேவர் புரந்தொறும்போய் அனையர் புலவுடற் சோரியை வாய்ந்ததோர் ஐயமாக வாங்குதி, வாங்கும் வேலை வீந்தவர் தமக்கு மீட்டும் வியனுயிர் உதவி யன்னோர் அகந்தையை மாற்றி அண்டமேல் அடைக. முன்புடைத்தாகும் அண்ட முகடுதோய் பதத்தின் மன்னி மன்பதைக் குலங்கள் யாவும் வானவர் தொகையும் யாண்டும் துன்பு அறக் காத்தி"யென்று தூய நல்லருளை நல்கி அன்புடைக்கடலாம் எங்கோன் அகலமாய்த் தோன்றிய சோதியினுட் புகுந்தார்.

## 3. வீரபத்திரனெனுந் திறலுடை முதல்வர்

அம்பிகையானவள் தனது நாயகனது திருவடியை வணங்கி "சிறிய தொல்விதி பெரிதுனை யிகழ்ந்தனன் பெரும! அன்னவன் அரிது செய்வேள்வியை அழித்தி" என்று நவின்ருர். அப்பொழுது எமையாளுடைய அண்ணலார் அகிலம் தந்த மங்கையின் தளருஞ்சிந்தை கொண்ட செயல் முற்றியிடுமாறு சிறிதே புந்தியுள்ளூற நினைந்தனன். அப்பொழுது, "மன்னுதண்சுடர் மதிக்குறை மிலைச்சு மவுலிச் சென்னியாயிரமும் வான் முகடு சென்ருெளிரவும்; கதிருலா மண்டலந் திகழ் முகந்தொறும் வயங்குபணியின் குண்டலங்கள் இணைகொண்ட குழைகொண்டு உலவவும்; மூன்று கண்கள் முகம் ஆயிரமும்

மவி முனிவால்கான்ற அங்கிகளின் அண்ட முழுதும் கரியவும்; துண்டமீதுறும் உயிர்ப்புடன் எழுந்த சுடுதீ அண்டகோளமுடன் அப்புறமாகிக் குலவவும்; விண்ணுற நிமிர்ந்து இராயிரங்கொள் புயம் எண்டிசையெலாஞ் செறியவும்; வேதன் முதலான வலியோர் தம் சிரத்தின் மாலிகை, அவர் என்பு செறிபூண், கேழலின் மருப்பு, ஆமை பிறவும் உரத்தின் மேவுபுரி நூலொடு பெயர்ந்து ஒளிரவும்; குந்தம் குலிசம், எழு, கழுமுள், சூலம், சிலை, கோல், தண்டம், தோமரம் முதலாம் அந்தமில் படைகள் அங்கைகள் தொறும் குலவவும்; வெம்பணிகளான பணியும் மெய்யலா மணியிடந்தொறும் மிடைந்திலகவும்; விஞ்சு சரண்மேல் செஞ்சிலம்பொடு பொலங்கழல் சிலம்பு மிகவும்; நிலவு செய்த பிறைவாள் எயிறு நின்றிலகவும்; கொண்டதோர் வெகுளியாகிய கொடுந்தழலது என் திசாமுகமுமாகி அடவும்; அடல் உற்ற சிவனின் கொண்ட ஆர்ப்பு முழுது எண்டிசை குலாய் நிமிரவும் அதிக வுக்கிரத்தோடு எந்தை தன் நுதல் விழியிடையே அவர் வடிவாய் வீரபத்திரனெனுந் திறலுடை முதல்வர் வந்து தோன்றினர். அப்பொழுது உமையவள் வெகுளியால் அடல்செய் நங்கையாகிய பத்திரகாளியை நல்க, அவள் துங்கவீரபத்திரன் றனைத் துணையாயடைந்தனள்.

அவ்வீரபத்திரர் தன்னை வந்தடைந்த பத்திரையோடு அன்னை தாதையை வணங்கியவர் தமை நோக்கி,

''மாலயன் றனைப்பற்றி முன்தந்திடோ மறவெங்
காலன் ஆவியை முடித்திடோ அசுரரைக்களைகோ
மேலைவானவர் தம்மையுந் தடிந்திடோ வேலை
ஞாலம் யாவையும் விழுங்குகோ உலகெலா
[நடுக்கோ.

மன்னுயிர்த் தொகை துடைத்திடோ
வரம்பில வாகித்
துன்னும் அண்டங்கள் தகர்த்திடோ
நுமது தூமலர்த்தாள்
சென்னியிற் கொடே யாவதொன்
றென்னினுஞ் செய்வன்
என்னை யிங்குநீர் நல்கியது
''எப்பணிக்கு''

என்றார்.

என்ற வீரனைக் கண்ணுதல் நோக்கி ''எம்மையன்றித் தக்கன் வேள்வி செய்கின்றனன்; அவ்விடை நீ சென்று எமது அவியினைக்கேட்டி; அத்தீயோன் தந்தனனேயெனின் நன்று: இவ்விடை நடத்தி; தருதலின்றெனின் அனையவன் தலையினைத் தடிந்து, பரிவினால் அவன் பாலுறுவோரையும்படுத்து, புரியும் எச்சமும் கலக்குதி; அங்கு அது பொழுதின் வருதும்; ஆயிடையேகுதி'' என்றருளினர். வீரபத்திரரும் வேள்வியை அழித்தார். அக்களத்தில் கழலும் கையும் துண்டமும் தலையும் மார்பும் தோள்களும் துணிந்து வீழ அண்டருந் தக்கன் தானும் ஆவிபோய்க்கிடந்த தன்மையைக் கண்ட கவுரி சீற்றம் நீங்கிப் பெருமானை நோக்கி ''முந்தும் இவரை முடித்தியென, வெஃகியதும் தனி வீரனால் தந்து முடித்தாய்; அனையர் உய்ந்து குறைபோய் உயிர்பெற்றெழுவண்ணம் எனக்கருளாய்'' என்று வேண்டினாள். அப்பொழுது உயிர்க்குயிராய் உற்ற பிரான் தன் பாங்கர்நின்ற திறலோனை நேர் நோக்கி ''ஈண்டை மகத்தில் எமை யிகழ்ந்து நின் சினத்தான் மாண்டுசிதைவுற்ற வலியிலோர் தம்முயிரை மீண்டும் அளித்து, மேனாளென உருவும் புரிதி'' என்றருளிச் செய்தார். வீரன் அதற்கிசைந்து ''இறந்தீர் யாரும் மேனாளென எழுதிர்'' எனவுரைத்தார். அப்பொழுது அனைவரும் உயிர்பெற்றெழுந்தனர். பின்னர், அரன் கவுரியோடு கயிலையில் ஏகியோர் வியனகர் மன்றிடை வீற்றிருந்து ழிவயமிகு வீரற்கு வானமேக் குற வியலுமோர் பதமளித்து இருத்தியாங்கென மொழியவும், தந்தை முன்விடுத்ததோர் தடம் பொற்றேர் அயல் வந்தது; அதன்மிசை வயங்கொள் ஆடலான் பைந்தொடியொடும் புக, பானுகம்பன் அதனை உந்திட அரனருள் உலகிற்போயினன்.

## 4. அரிகரபுத்திரர்

தீம்பாற் சலதியைக்கடைந்து பெற்ற அமுதத்தினை மாதவன் மாதுருக்கொண்டு நின்று அவுணரை மாள்வித்து விண்ணவர்க்கு ஆதாரத்தோடு அயிலக்கொடுத்தனன். அம்மாது விண்ணோர் தொழ ஒதவேலையொருபுடையாகவே, நால்வகைப்பட நண்ணிய சத்தியுள் மாலும் ஆதலின் மற்றது காட்டுவான் ஆலகண்டத்தன் அச்சுதன் அச்சுறுங் கோலமெய்தி யவ்விடைக்குறுகினன். தண்டுழாய் முடியான் தனி நாயகனைக் கண்டு வெஃகிப், ''பெரும! நீ என்னைப் பேணி நிற்பது என்! அன்பில் ஆடவர் ஆடவரோடு

சேர்ந்து இன்ப மெய்தியிருந்தனர் இல்லையால், முன்பு கேட்டதுமன்று; முதல்வனீ வன்பொடெனைப் புணர்வது மாட்சியோ'' என்றிசைத்தான். அதற்கு எம்பிரான் "அன்று நீயும் நமக்கொரு சத்திகாண்; அன்று தாருகத்தந்தணர் பாங்குறச்சென்ற போழ்தினுஞ் சேயிழையாயினை; முன்னை வேதன் முடிந்து போதலும் உன்னோடே வந்து உவப்பொடு கூடினோம். பின்னர் இந்தப் பிரமனை அன்னையாகி உந்தியாலளித்தனை; ஆகையால், உன்னணி நலந்துய்த்திட வோகையால் இவண் உற்றனன் செல்க'' என்றார். நாரணன் நாணியோடினன். அவனைப்பற்றியேகிப் படிமிசை நாவலந்தீவிற் பெருங்கடற் சார்பினில் வடதிசை வைப்பில் உற்ற சாலத்தின் ஒண்ணிழல் நண்ணி முயங்கிய வெல்லையில்,

"மைக்கருங் கடலமேனியும் வானுலாஞ்
செக்கர் வேணியும் செண்டுறு கையுமாய்
உக்கிரத்துடன் ஓர்மகன்''

தோன்றினன்.

அத்தகு மைந்தற்கு எந்தையார் அரிகர புத்திரன் எனும் பேர்புனைந்து, உருத்திரர் தம்மொடும் வைத்து, வரம் பல நல்கி, புவனம் ஈந்து, புவனத்து இறையென அளித்து, அமரரும் மாதவர் எவரும் ஏத்திடும் ஏற்றமுங் கொடுத்தார். சிவனது இன்னருள் செப்புதற் பாலதோ! அவர் சங்கையில் பெருஞ் சாரதர் தம்மொடும் எங்குமாகியிருந்து எவ்வுலகையும் கங்குலும் பகல் எல்லையும் காப்பர்.

## 5. சண்முகப்பெருமான்

பூமிசையிருந்த புத்தேளின் புதல்வனான தக்கனுக்குக் குமரியான தீமையை யகற்ற அம்மை சிந்தை செய்து, இமைய மன்னன் மாமகளாகி நோற்று வைகினாள்.

அந்நாளில் சூரன் அவுணர்களோடு அவனிமேற்றோன்றி நோற்றுச் சிவன் வரமளிக்கப்பெற்றுத், தேவர் யாவரையும் வென்று மகேந்திரமா நகரில் வைகினான்.

அனையதோர் காலை வெள்ளி மலையிற் சனகனாதி முனிவரர் தமக்கு அந்தமில் ஆகமத்தின் அரும்பதம் மூன்றும் கூறிப்பின் புந்தியது ஒடுங்கும் ஞானபோதகம் இத்திறமென்றவர்க்கு உணர்த்த உரத்திற் சீர்கொள் கரதலமொன்று சேர்த்திமோன முத்திரையைக் காட்டி யொருகணஞ் செயலொன்றின்றியோகு செய்வார்போலத் தற்பரனிருந்தான். இவ்வொருகணத்தில் முற்படுகமலப் புத்தேள் முதலிய வமரர்க்கெல்லாம் பற்பல யுகங்கள் சென்றன. உலகெலாம் ஒருப்பாடொன்றி யிருடல் முயங்கும் ஆர்வமின்றியிருந்த. தள்ளருமுயிர்கள் பின்னுந் தலைத் தலை மல்காதுற்ற. இம்முறை நிகழ நாதன் ஈரிருதவத்தினோர்க்கும் மெய்மைகொளுணர்ச்சிகாட்டி வீற்றிருந்தருளுமெல்லை, தெம்முயல் சூரன் தீங்கு செய்தலால் மகவான் வானோர் தம்மொடும் துறக்கம்விட்டுத், தமனிய மேருவெற்பில் தன்னுள மொருப்பாடெய்த நிமலனை யுன்னிப்பன்னாள் நெடுந்தவமுழந்தான். அவன்முன் எம்பிரான் தோன்றி "மெய்ம்மையதகன்ற தக்கன் வேள்வியினிருந்தபாவம் நும்மிடையிருந்தது; அற்றால் நோதக வுழந்தீர். மேனாள் நம்மிடையொரு சேய்வந்து நணுகி வெஞ்சூரைக்காதி, யிம்மெனவும்மைக் காப்பன் எனப்புகன்று போனார். எங்கோன் கயிலைக் கண்ணும், எம்மன்னை இமயத்தும் பிரிந்திருப்பின் தமக்கோர் புதல்வனைப் பயக்குமாறெங்ஙனம் என்று எண்ணி மாமறையண்ணலாதியோர் காமன்றன்னைக் கண்ணுதற்பாலுய்த்தனர். தன்னையுற்று வாளி எய்த மாறனைப் பரமன் நுதற்கட்டீயாலிறச் செய்து, பொய்யில் தன்னிலை தவிர்ந்திலனால் தொன்மைபோல் மோனத்துற்றார். அஃதறிந்த விண்ணோர் "ஐயகோ வினிச் செய்வதென்னோ'' என்றயர்ந்தனர். பிறகு மாலயன் முதலோர் கயிலைபுக்கு நாதனைப் பரவினர். அவர் பவம் முடிதற்கு அணித்தாகவே மோனம் நீங்கி அவர்பால் இறைவன் இரக்கமுற்று "உங்கள் தம்பொருட்டில் அவ்வோங்கல் வைகிய மங்கையை மணந்து நும் வருத்தம் நீக்குதும்'' என்று மொழிந்து அவர் தமைப் போக்கினார். பிறகு தீதறு முனிமைந்தரை நோக்கி "நன்னல மைந்தர்காள்! ஞான போதகம் சொன்னடையன்று; அது இங்ஙிலை மோனமோடிருந்து நந்தமை யுன்னுதலே யாம்'' என்றுணர்வோதி யவரை விடுத்தனர். அவர்தாஞ் செல்லலும், அதுபோழ்தின் மாதவ நெறிநிற்கும் மலைமகளது தனியன்பும் காதலும் எனைவோர்க்குங் காட்டுதல் அருளாகிச் சோதனை புரிந்து மணம் முடித்து அம்முதல்வியோடும் வீற்றுடு தொன்மை போல் கயிலைக்கண் வீற்றிருந்தருளினார். அன்பினர்க்கு எளிவந்துள்ள வாதியெம்

பரமன் மாது தன்புடையாகச் சீயத்தவிசில் வீற்றிருக்கவே, இருபாலாகித் துவன்றிய வுயிர்களெல்லாந் துன்பகன்று இன்பொடு போகம் ஆற்றியினி 'தமர்வுற்ற. அந்நாளில் விண்ணுளோர் யாவரும் வேந்தன் மாலய னொடு கற்றைவார் சடைமுடிக் கண்ணுதற் கடவுளை நண்ணிச் செம்மைசேர் தாள்களைச் சென்னியால் தாழ்ந்தெழீஇப், பொய்மைதீர் அன்பினுல் போற்றி, ஆதியும் நடுவும் ஈறும், அருவமும் உருவும், ஒப்பும் ஏதுவும், வரவும் போக்கும், இன்பமுந் துன்பமுமின்றி, வேதமுங் கடந்த விமல! "ஓர் குமரன்றன்னை நீ தரல்வேண்டும் நின்பால் நின்னையே நிக'க்க" என்று இறைஞ்சி நின்றனர். அவருரைத் தமையைக் கேட்டு அந்திக்கு நிகர் மெய் யெண்ணல் அருள் புரிந்து அறிஞராயோர் சிந்திக்குந் தனது தொல்லைத் திருமுகம் ஆறுங்கொண்டு, பொற்புறு நுதற்கண் போலும் புலிங்கம் ஒன்று தந்தான். அங்க வன் விழிபொழியனலம் யாவையும் வள்ள லேந்திய செங்கனல் ஊழியிற் செல்வதா மென வெங்குளவுலகமும் ஈண்டலுற்றன. அதன் வெம்மையைக் கண்டு அமலன் பாங் குறை கன்னியும் வியர்த்து, கலங்கி யெழீ இப், பொன்னடி நூபுரம் புலம்பித் தாக் குறத் தன்னதோர் உறையுளைச்சாரவோடி னுள். முண்டகனுதியா முன்னர் நின்றுள வண்டர்கள் யாரும் அவ்வழல் கண்டஞ்சியே விண்டனர். காரணமில்லவன் கண்ணிற் கான்ற தீப் பேருள் புரிந்திடப் பிறந்தபான்மை யால் ஒருயிர் தன்னையுமொழிவு செய்தில; ஆரையும் எவற்றையுஞ் அச்சமே செய்தன. பிறகு, இறைவர் தன் முகம் ஐந்தையும் கரந்து, நன்முகமொன்ருெடு நண்ணித், தனது தொன்மையியற்கையின் தோன்றி வைகி, வெம்பொறி மூவிரண்டையும் முன் னுறுவித்து, அமரர் தங்களுள் உலவைத் தேவையும், மூதகு தீயையும் நோக்கி "நீங்கள் இச்சுடர்களை நெறியிற்றுங்கியே வீங்குநீர்க் கங்கையில் விடுத்திர். ஒன்ருெரு நொடியினின் உலக முற்றுமாய்த் துன்றிய இச்சுடர் சுமந்து கங்கையிற் சென்றிட நுங்கள்பால் திண்மையெய்துக" என்றருளி னுர்.

அதனைக் கேட்ட முன்னுறுமாருதன் முதல்வன் தாள்களை வன்னியந்தேவொடு வணங்கியே யெழீஇ, அன்னவன் அருளினுல் சுடர்கள் ஆறையும் சென்னியின் மேற்கொடு சென்று, ஆர்த்திடு கங்கையின் அகத்து உய்த்தான். அச்சுடர்த் தொகுதி வந்தடை யவே கங்கைநீர் வறந்தன. அப்பொழுது, அரனருள் முறையினையறிந்து கங்கைதன் சிரமிசை யவற்றையேந்திச் சென்று ஓர் நாழிகையிற் சரவணம் எனுந்தடந்தன்னிற் சேர்த்தனள். கங்கையும் ஒல்கபுக்க கடுங் கனற்கடவுட்சோதியிரு மூன்றும் முன்னர் அம்மைவாழ் இமையச் சாரலில் தங்கிய சரவணத்துட் புகுதலும், எம் முக்கண் புங்க வன் அருளாலஃது வறத்தலின்றி தொன்மை போன்றிருந்தது. அமரர்கள் யாவரும் சிரணி சரவணஞ் சேர்ந்து, அஃது ஈசனது கட்டழலைத்தன் மிசைக்கொண்டிருந்த வற்பு தத்தைப் போற்றினர். அப்பொழுது,

"அருவமும் உருவுமாகி
அநாதியாய்ப் பலவாயொன்ருய்ப்
பிரமமாய் நின்றசோதிப்
பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்களாறுங்
கரங்கள் பன்னிரண்டுங்கொண்டே
ஒருதிரு முருகன் வந்து ஆங்கு
உதித்தனன் உலகம் உய்ய"

தங்களையுய்விக்குந் தோன்றல் வந்திட லும், விண்பால் துந்துபி கறங்கலுற்ற; ஆன்றதொல் மறைகளெல்லாம் ஆர்த்தன; அயனும் மாலும் வான்றிகழ் மகத்தின் தேவும் முனிவரும் மலர்கள் தூவி "என்று எமை அருள்க" என்று ஏத்து இசையெடுத்துச் சூழ்ந்தார். மல்லலம் புவனத்துள்ள மன்னு யிர் கணங்கட்கெல்லாம் ஒல்லையின் மகிழ்ச்சி யெய்தி உவகையின் குறிப்புண்டான. அந் நாள், தொல்லையில் அவுணருக்குஞ் சூரனை முதலாயுள்ள எல்லவர் தமக்கும் மாயும் இருங்குறிப்புற்ற. அரிமுல் அமரர் யாரும் கார்த்திகைத் தெரிவைமாரை விளித்து, "சாற்றருஞ் சரவணத்தில் சண்முகத்தொரு வனுகி வீற்றிருந்தருளுகின்ற விமலன் ஓர் குழவிபோலத் தோற்றினன்; அவனுக்கு உங்கள் துணைமுலையமுதம் ஊட்டி நாளும் போற்றுதிர்" என்றனர். அவரும் விரும்பி வந்தார். அம்மாதர் மூவிருவர்தாமும் சர வணத்தின் நிமலனை யடைந்து போற்ற "உறுநர்கள் தமக்கு வேண்டிற்று உதவுவோன் ஆதலாலே, அறுமுகவொருவன் வேருய் அறு

சிறுர் உருவங் கொண்டான். ஆறுருவாத லோடும், அறுவரும் மகிழ்ந்து வேறு வேறு தாம் எடுத்துத் தத்தம் வியத்தகு துணைமென் கொங்கையூறு பாலமுதம் அன்னூர்க்குதவி னர். இத்திறம் இருமூன்றுன யாக்கையும் கணமதொன்றில் பத்து நூருப்பேதம் படும் இவ்வகை வித்தக விளையாட்டினைச் சிவன் மகன்மாயையால் விரைந்து செய்தான். கைப் பயில் குழவிபோலக் காட்டிய கடவுள் செய்யும் ஆடல் முழுவதும் நோக்கி நோக்கி முதிரும் அற்புதமெய்திக் குழவிகளென்றே உள்ளங்கொள்ளுதல் விட்டு, அகலாது, அஞ்சி மனங்கொளன்பால் வழிபடு கடவு ளரைப் போலப் போற்றினர்.

பின், தாவில் சீர்வெள்ளிப் பொருப்பி லுற்றிடு பரம்பொருள் கருணையால் அம்பி கையை நோக்கி, "முந்துநம் விழியிடைத் தோன்றிச் செம்மலர்ப் பெருஞ் சரவணத் திருந்த சேயை யிம்மலைக்கணேயுய்க்குதும் வருக" என்றிசைத்தார். அம்மையும் உவகை யோடு அன்புகொண்டு எழீஇ "நம்பெரு மதலையை நாங்கொண்டேகுதும் எம்பெரு முதல்வ நீ எழுதியால்" என்ருள். என்னை யாளுடை நாயகன் இறைவியோடு அன்ன மாடுறுஞ் சரவணப் பொய்கையைச் சார் தலும், முண்டகச் சரவணந்தன்னில் மூவிரு வடிவங்கொண்டு உலாவி வீற்றிருந்திடும் ஒரு பெருங்குமரன் அண்டர் நாயகன்றன் னுடன் அகிலமீன்ருளைக் கண்டு மாமுகம் மலர்ந்துத் தன்னுளங்களித்தான். அந்த வேலையில், எம்மையன் கவுரியை நோக்கி "இந்த நின்மகன்றனைக் கொண்டு வருக" என்றியம்பினுன் இயம்பலும், உலகமீன் றுடையாள் சுந்தரங்கெழுவிடையினின்று துண்ணென இழிந்து, சிந்தைகொண்ட பேராதரந்தன்னெடுஞ் சென்று, சரவணந் தனில் தனது சேய் ஆறுருத்தனையும் இரு கரங்களால் அன்புடன் எடுத்துப் புல்லித் திருமுகங்களோராறு பன்னிரு புயஞ்சேர்ந்த வுருவம் ஒன்றெனச் செய்தனர். முன்பு புல்லிய குமரவேள் முடிதொரு முயிர்த்து, மின்பிறங்கிய புறத்தனை நீவலும், விமலை தன் பெருந்தனஞ் சுரந்து பால் சொரிந்தன. ஆதிநாயகன் கருணையாய், அமலமாய்ப், பரம போதநீரதாய் இருந்தன் கொங்கையிற் பொழிபாலை, ஏதிலாதோர் குருமணி வள்ள மீது ஏற்றுக் காதல் மாமகற்குக் கவுரி அன் பினுல் அருத்தினுள். 'அவ்வாறு அருத்தியே குமரனைக் கொண்டு சென்று எங்கள் நாயகன் முன்னரே இறைஞ்சுவித்திடலும், அவன்றனை அங்கையால் எடுத்து, அகலமே லணைத்துப், பொங்குபேரருள் நீர்மையால் புடையிலிருத்தினன். அருத்தி தந்திடு குமர வேள் ஒரு புடையமரப், பெருத்த மன்னுயிர் யாவையும் முன்னரே பெற்ற வொருத்தி தன்னையும் கையினுலொய்யென வாங்கி யெம்மையாளிறைவன் தனதிடத்தினிலிருத் தினுன். பின்னர், அடையார் புரமெரி செய் திடும் அமலன் கயிலையிற்போய், விடை யூர்தியினின்றிழிந்து, தனிவிறற் சேயொடும் வெற்பின் மடவாளொடும் நடந்து, பொலன் மாமந்திரத்தவையினிடையோர் அரியணை மிசை அருள் புரிந்திருந்தான்.

முன்னர், நஞ்சயின்றவன் நெற்றி நாட்டத்தினுல் நல்கும் வெஞ்சுடர்ப் பொறி யின் வெம்மையை ஆற்றலளாய் விமலை யோடிய பொழுது, அவளது மெல்லடியி லணிந்த பரிபுரத்தின் நவமணிகள் சிந்தின. அம்மணிகளில் உமையுருவினை யிறைவன் தன் கண்ணிறுற் றெரிந்தருளவும், மணிக் கொரு சத்தியாக நவசத்திகள் நண்ணினர். இறைவனது நெற்றி நாட்டத்தாலாயவன் சுடர் மதலையாயமர்வான் சரவணத்து ஏயினு னெனத் தெரிந்து இறைவி மீண்டுவந்து அமலனைச் சார்ந்தனள். அந்நவசத்திகள் பரமனது திருப்பதத்திடை வணங்கி யவனிடைச் சிந்தை விருப்பம் வைத்தலும் கருப்பமுற்றனர். இவையாவதும் உமையவள் கண்டுச் சினம் புரிந்து "இவண் எமக்கு மாருகிய திறத்தால் கனம் புரிந்த விக்கருப்ப மொடு பலகாலம் நீர் யாவரும் இருத்திர்" என்று சூளிசைத்தாள். அதுகேட்டு நடுக்க முற்று அஞ்சிய மாதர் மெய்வியர்த்தனர். அவ்வியர்ப்பதனில் தேவ தேவனருளினுல் தினகரத்திரள்போல் ஒவிலாவிறல் வீரர்கள் இலக்கர் வந்துதித்தார். அவர்களை இறைவ ஞேக்கி "நீவிர்கள் யாவரும் இந்திராதியர் பகைவரை யடுதற்கு எமது கந்தவேள் படையாகுதிர்" என்று கழறிப் பேரருள் புரிந்தனன். அம்மாமணி மகளிர் தங்கருவி னுள் இறைவனைப் புகழும் நந்தியங்கணத் தவர் குழவியாய்ப்போந்து ஈசனைக்கருதியோ குடனிருந்தனர். அதனுல் பொறையாற்று தற்கரிதாகவே இருவர் தம்மையும் பணிந்து

'இன்று காறுஇனைய கருவின் நொந்தனம்; இன்னினியாம் பரிக்கல்லேம்; அருள் புரிந்திடும்'' என்றனர். ஆதியங்கடவுள் கவுரியின் திருமுகம் நோக்கி ''நின்செய்ய தாளிடையிற் சாலும் நூபுரத்துதித்தவர் உனது சாபத்தால் சூலினுல் மிக நொந்தனர்; பற்கபல் சுமந்தார்; பாலரைப் பெற இனியருள்புரிக'' எனப்பணித்தார். இறைவியும் நன்றெனவிசைந்து முறுவல்செய்து மாதரை நோக்கி ''இனி மொய்ம்பினரைப் பெறுதிர்'' என்றனள். அம்மங்கையர் கவற்சியகன்று யாவரும் ஒருசாராக மைந்தரை யளித்தனர். வீரவாகு முதலாகவுதி தருமத்திறல் வீரர் அம்மையுடனிருந்த நாதனது பதமலர் பணிந்தெழலும் ஆதியம்பகவன் அவரைக் கண்டு பார்ப்பதியைப் பரிவால் நோக்கி ''மதியுடையர், மானவருங்கலத்தினர், நமமைந்தர், இன்னோர் புதியரலர், நந்திதனிக்கணத்தவர்'' என்ருன். தேவியும் அதுகேட்டு அருள் புரிந்தாள். பிறகு, சிவபெருமான் அவர்களை நோக்கி, ''வியர்ப்பில்வரும் ஓரிலக்கந்தனயரொடு நீவிர்களும் ஒன்றி நுங்கட்கு இறைவனுகிய சேயை நீங்கலின்றி, யவன் பணித்தன ஏவல்செய் தொழுகுதிர்'' என்ருன். அவரும் இசைந்து, தாழ்ந்து, தொழுது, மலர்தூவிப் பணிந்தேத்திச் சேயோன் எனும் முன்னேன்றனைத் தமது ஆருயிரெனக் குறித்து அணைந்தார்.

இத் திருக்குமாரர்கள் தம்முள், ஆதியாகிய குடிலையந்தனி யெழுத்தைத் தனது ஆணையால் இருண்டதாய்க்களிறும் பிடியும் போலத் தோற்றியவற்றை யெமையாளுடையம்மையின் காட்சியால் புணர்ச்சி யெய்துவித்து, மூத்தபிள்ளையாரை முன்னுறச் செய்ததின் திருவருட் குறிப்பை யவரது திருவருள் துணைநின்று விளக்கியவாறுணர்த்துதும்.

## (அ) சிற்சக்தியின் காரிய வேறுபாடு

ஆன்மாவின் அறிவு ஒன்றினழுந்துங்கால் மற்ரென்றினை யறியுமாறின்று. தனக்கேற்ற சோபான முறையே சிறிது சிறிதாக ஏகதேசமாய் விளங்கி விளங்கி மேம்பட்டு வந்தே வியாபகமாய் விளங்குவதோரியல் பிற்று. முதல்வன் வியாபகமாய் நின்றவாறே விளக்கினும் தனது தூலத்தன்மையான் முழுவதும் ஒருங்கேயறியும் தரம்பற்ருது. அத்தன்மை நோக்கி அதற்கேற்பச் சோபான முறையாய்த் தானே முதல்வனது சிற்சத்தியும் முற்பக்கத்தில் திங்கள்போலத் திரோதானசத்திரூபமாய் நின்றறிவிக்கும். அவ்வாறறிவிக்குங்கால் ஆன்மாவினது அறியாமையாகிய மலமும் அதற்கேற்ற பலபல சத்திகளுடைத்தாய் அம்முறையே சிறிது சிறிதாக முற்பக்கத்து இருள்போலக் கீழ்ப்பட்டுத் தேய்ந்து தேய்ந்து முடிவின் பற்றறக்கழியும். அது தேயத்தேய வதற்கேற்பத் திரோதான சத்தியும் அம்முறையே சிறிதுசிறிதாகத் தன்றன்மை நீங்கிச் சிற்சத்தி ரூபமாய்ப் பதிந்து பதிந்து முடிவின்கண் அதிதீவிர சத்தியாய்ப் பதியும் (இதனுல் பந்தம் நீங்கி வீடடைதற்கு ஏதுவுண்டாம்). இங்ஙனம் ஆன்மாவுக்கு உபகாரப்பட்டு நிற்கும் சிவசத்தியொன்றே, ஆன்மாக்களைப் பந்தத்தினின்றும் நிவர்த்தி செய்தல், நிவர்த்திபெற்ற வான்மாக்கள் மீள நோக்காத வண்ணம் பிரதிட்டை செய்தல், அங்ஙனம் நிலைபெற்ற வான்மாக்கட்கு அநுமான ஞானம் ஆகமஞானமன்றி யநுபவ ஞானத்தைப் பயப்பித்தல், அங்ஙனம் அநுபவ ஞானம்பெற்ற வான்மாக்கட்கு விருப்பு வெறுப்புச் சங்கற்ப முதலிய வெல்லாத் துன்பங்களுஞ் சாந்தமாகச் செய்தல், அங்ஙனஞ் சாந்தமாய் நின்றதும் ஒழியச்செய்தல் ஆகிய காரிய வேறுபாட்டான் நிவர்த்தி முதலிய பெயர்பெற்று பஞ்சகலைகளாய் நிற்கும். இப்பஞ்ச கலைகளும் நிலம் முதல் சிவம் ஈருகிய தத்துவங்களையும், காலாக்கினியுருத்திர புவன முதல் அநாசிருத புவன மீருகவுள்ள புவனங்களையும், னகரத்தினயனின்ற வெழுத்து முதல் அகர மீருகவுள்ள வன்னங்களையும் ஓம் நமோநம வென்பது முதல் வியோம வியோபியோம் ஈருகவுள்ள பதங்களையும், பிரமம் ஈசானமுதல் சத்தியோசாதம் ஈருகவுள்ள மந்திரங்களையும், இதய முதல் அத்திர மீருக வைத்துக் கூறும் அங்கங்களையும் தம்முள் அடக்கிக்கொண்டு நிற்கும். எனவே, தத்துவ முதல் ஐந்தினையும் தம்முளடக்கி நிற்கும் பஞ்ச கலைகள் திரோதாயி ரூபமாய் நின்ற சிவசத்தியிலடங்கும். சிவசத்தி சிவன்கணடங்குமென்றும் உணருதும்.

### மாயையின் உபகாரம்

ஆன்மாக்கள் தத்தம் போகநுகர்ச்சிக்குச் சிறப்பு வகையான் நிலைக்களமாதற்குத் தூல ரூபத்தில் பிருதிவியாதி யைம்பூதங்க

ளுள. இப்பூதங்கள் தம்மை நோக்கச் சூக்கும ரூபத்தவாகிய சத்தமாதிதன் மாத்திரைகளி லிருந்து ஓர் அடைவே தோன்றும். இத்தன் மாத்திரைகள் இருவகை யிந்திரியங்களும் செறிதலுஞ் செறிதலுமாகிய தத்தந் தொழிற் பாட்டினைச் செய்தற்கண் மதுகை விளைத்து நிற்கும் மாத்திரைக்கே கருவிகளாம். ஞானேந் திரியங்களைந்தும் ஆன்மாவின் ஞானசத்தி யானதிட்டிக்கப்பட்டு பொருள்களை விசே டண விசேடிய வியல்புபற்றியறியுமாறின்றி நிர்விகற்பமாயறிதற்குக் கருவிகளாம். கன் மேந்திரியங்கள் ஆன்மாவின் கிரியாச் சத்தி யாலதிட்டிக்கப்பட்டு புத்தியானிச்சயிக்கப் பட்ட பொருளைக் காரியப்படுத்தற்குக் கருவி களாம். நிர்விகற்ப காட்சி நிகழ்ந்தவிடத்து, இஃது யாதாகற்பாற்று என வொன்றினைத் தூக்கிச் சிந்தித்தும், ஒன்றைச் சங்கற்பத் தும், அஃதாமோவன்றோவென ஐயுற்றும் நிச்சயித்தற் கேதுவாகிய வேட்கையை மனம் விளக்கும். அவ்வாறு நிச்சயித்தற்கண் முய லும் ஊக்கத்தை யுண்டாக்கியதற் கேதுவா கிய பிராணவாயும் ஆங்காரம் இயக்கா நிற் கும். பின், இவ்வூக்கத்தான் அவ்வப்பொரு ளைப் பெயர்சாதி முதலியனபற்றிச் சிறப்பு வகையான் நிகழும் சவிகற்ப வுணர்ச்சியைப் புத்தி துணிவிக்கும். இவ்வாறு துணிதற்கண் சாத்துவிக குணம்மிக்கு ஏனைய விரண்டும் குறைந்து விளங்குதலின், அம் மூன்று குணங்களுஞ் சமமாய்நின்று விளங்குதற் குரிய வவத்தை யுளதாகவேண்டுமன்றே, அஃதே குணமாகும். இனி யிம்மூன்று குணங்களும் விளங்குதலின்றித் தம்முள் மயி லண்டசலத்தில் பஞ்சவன்னம்போல சூக்கும மாய் நிற்கும் அவத்தை மூலப்பகுதியாகும். இஃது குணமுதல் நிலம் ஈறாகிய போக்கி யங்கள் முறையே யுளவாதற்கு ஏதுவாய் பும்ஸ்துவமலம் உடையதாகும்.

மேல், இப்பிரகிருதி மாயைப் போக நுகர்ச்சியின் உன்முகத்திற்கு ஏதுவாகிய அவிச்சை முதலிய பஞ்சக்கிலேசமென்னும் பும்ஸ்துவமலமுடையனுதற்கு ஆன்மா புருட தத்துவமென நிற்கும்.

ஆன்மாவுக்கு இச்சை நிகழ்ந்தன்றி நுகர்ச்சி செல்லாமையின், அதனிடத்து அச் சத்தியை அராகம் விளக்கும். ஞானசத்தியை வித்தையும், கிரியாசத்தியை கலையும் விளக் கும். இவ்வாறு அராகம் முதலிய மூன்றும் ஆன்மாவின் இச்சாஞானக் கிரியாசத்திகளை விளக்கிப் போகம் நுகர்தற்பொருட்டுப் புத்தி தத்துவத்தில் செலுத்தும். மேலும், இத னையே நுகர்கவெனப் போகத்துக்கண்ணே ஆன்மாவை நியதி தத்துவம் நியமித்து நிறுத் தும். பின், இதனை யித்துணைப்பொழுது மாத்திரையே நுகர்கவெனப் போகத்தின் வரையறுத்துக் காலதத்துவமானது செலுத் தும். இவ்வாறு, கலை முதலாகிய வைந்தும் ஆன்மாவுக்குபகாரமாய் ஏனைக் கருவிகளைப் போல அவத்தைப்படுதற்கு ஏதுவாய், இடை யிடையே கூடுதலும் நீங்குதலுமின்றி, எக் காலத்தும் ஆன்மாவுடன் கஞ்சுகம்போலப் பந்தித்துநிற்கும். இனி, கலைமுதல் நிலம் ஈறுகக் கூறிய முப்பத்தொரு தத்துவங்களுக் கும் காரணமாய், வினைக்குப் பற்றுக் கோடாய், வினையிற் கட்டுண்ட வான்மாக் களைப் பொதுவகையான் மயக்குவதாய் அசுத்தமாயை யுள்ளது. கலை முதலியன அசுத்தமாயையில் தோன்றினும், இவற் றைத் தொழிற்படுத்த சுத்தகலை முதல் சுத்த நிலம் இறுதியாகிய சுத்த தத்துவங்களுள. இச்சுத்த தத்துவங்களுக்கெல்லாம் இடமாய் சுத்தமாயை யுள்ளது.

பசுத்துவம் நீங்கி வாசனுமல மாத்திர முடையவராய் இலயிகள், போகிகள், அதி காரிகளென நிற்கும் ஆன்மாக்கள் விசித்திர மாய், சுத்தமாய் இன்பமயமாகிய போகங் களைத் தாந்தாம் இச்சித்தவாறே அநுபவித் தற்பொருட்டுச் சுத்தமாயையின் விருத்தியாய் நாதம், விந்து, சதாசிவம், ஈசுரம், சுத்த வித்தையென்னுந் தத்துவங்கள் முறையே யுளவாம்.

சுத்ததத்துவங் கலாதியைச் செலுத்து முகத்தான் உபகரித்து நிற்பனவன்றிச் சகலர்க்குத் தேகமாய் எய்துதல் கூடா.

ஏனைய தத்துவங்களுள், ஐம்பெருந் தூல பூதங்களும் தூலதேகமாயும், தன்மாத்திரை யைந்தும், அந்தக்கரண மூன்றுமாகிய எட் டும் சூக்கும தேகமாயும்; பூதமொன்றும், தன் மாத்திரையொன்றும், ஞானேந்திரியமொன் றும், கன்மேந்திரியமொன்றும், அந்தக்கரண மொன்றும், குணதத்துவமொன்றும், மூலப் பகுதியொன்றும், கலாதியொன்றுமென்னும் எண்வகைப்பட்ட முப்பத்தொரு தத்துவங்

களும் பரதேகமாயும் விளங்கும். போகநுகர் தற்கட் கருவியாய் நிற்கும் கலைமுதல் நில மீறுகிய தத்துவங்கள் ஆன்மாவுக்குக் கரண மேயாயினும், ஆன்மாக்கடோறும் வெவ்வே ருய் நீக்கமின்றி யுடனுய்நிற்றல் பற்றிப் பர தேகமென்று உபசரித்துக் கூறப்படுமதுவே யன்றித் தூலதேகம் சூக்குமதேகம் போலத் தேகமல்லவென் றுணரற்பாற்று.

தூலவுடம்பிற்கு முதற்காரணம் சூக்கும வுடம்பு. அதற்கு முதற்காரணம் மூலப்பகுதி. அதற்கு முதற்காரணம் மோகினி. அதுவே பரம முதற்காரணம் எனப்படும். ஏனைவிந்து என்னும் குண்டலினி சத்தியோவெனின்: அது சுத்தமாய் இவையனைத்திற்கும் வியாபக மாய் நிற்கும். இவ்விருவகைப் பிரபஞ்சமும் ஆன்மாவானது சிவத்தினைச் சார்தற்கு ஏது வாகிய பக்குவகாலம் சாலுதற்பொருட்டு இப் பெத்தகாலத்து உளவாவனவாம்.

## (ஆ) பிரணவத்தின் இலக்ஷணம் :

உய்யவென்னுள்ளத்துள் ஓங்காரமாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா! வேதங்கள்
ஐயா வெனவோங்கியாழ்ந்தகன்ற
நுண்ணியனே''

இத்தமிழ் மறையால் இறைவன் பிர ணவ வடிவினனென்பதும், சமஸ்த வேதங் களும் பிரணவத்திலிருந்து தோன்றிய கார ணத்தால் அப்பிரணவ தேவதையாகிய பர சிவத்துக்கே சொந்தமாகி யந்நாயகனையே தோத்திர ரூபங்களாயிருந்து துதியாநிற்கவும், அவை தமக்கும் எட்டாத மந்தணவான் பொருளாய் அச்சிவம் நிற்கும் என்பதும் விளங்கும். ''ஸர்வதேவவேதயோநி:'' என் னுப் பிரமாணத்தால் சர்வதேவர்களுக்கும் சர்வவேதங்களுக்கும் இதுவே காரணஸ்தான மென்பது புலப்படும். ஒருமுறை யுச்சரித்த மாத்திரத்தில் உயர்ந்த கதியிற் கொண்டு போய் விடுதலால் பிரணவமானது ஓங்கார மென்று சொல்லப்பட்டது. ''அகாரவுகாரோ மகார இதிதானேகதா ஸம்பவத் தடேததோ மிதி'' (நாராயணுேபநிடதம்) என்றதனுல், அகரவுகரமகரங்களை யொன்று சேர்த்தலால் பிரணவமாகின்றது. ''அகரமு முகரமு மகர முமாகித் திகழுறு பிரணவம்'' என்னும் ஆன் ேறார்வாக்கும் இதனை வலியுறுத்துகின்றது. இவ்வோங்காரம் உச்சரிக்கப்படும்பொழுது நாதமாயும், எழுதும்பொழுது விந்துவாயு மிருப்பதால், இஃது அகாராதி மூன்றுடன் விந்து நாதங்களாகிய இருவகை வடிவங்கூடி ஐந்தெழுத்தாயிற்று. ''ப்ரதமம் தாரகாகாரம் த்விதியம் தண்டமுச்யதே—த்ரிதியம் குண்ட லாகாரம் சதுர்த்தம் அர்த்த சந்த்ரகம்—பஞ் சமம் பிந்துஸம்யுக்தம் ப்ரணவம் பஞ்சலக்ஷ ணம்'' என்று கூறிய பிரமாணத்தால் முதல் நட்சத்திராகாரமும், இரண்டாவது தண்டா காரமும், மூன்ருவது வட்டவடிவும், நான்கா வது அர்த்தசந்திரவடிவும், ஐந்தாவது பிந்து வோடுகூடிய வடிவுமாகிய ஐந்திலக்கணங் களையுடையதாதலால் பிரணவமும் ஐங்கலை களை யுடையது இவ்வட்சரமாகிய ஓங்காரம் பரப்பிரஹ்ம சொரூபமாகும். இஃது ''ஏத தக்ஷரம் பரம்ப்ரஹ்ம'' என்னும் அதர்வசி கோப நிடதமகா வாக்கியத்தாலும் வலியுறு கின்றது.

''பெரும்பொருட் கிடனும் பிரணவவடிவு''
(பெரும்பொருள் = சிவம்)

''பிரணவத்தினடி முடியினடு வினுநின்
ேறாங்கும் பெருங்கருணைத் திருவடிகள்''

''ஓங்காரத் துள்ளொளியா யவ்வொளிக்
குளொளியா யுபயவடிவாகிய நின்னபயபதம்''

என்னும் அருண்மொழியால் பிரணவத்துள் இறைவன் நிறைந்துவிளங்கும் உண்மை புலனுகின்றது. மேலும்,

''தானே பரஞ்சுடர் தத்துவமாய் நிற்கும்,
தானே அகாரவுகாரமதாய் நிற்கும்''

''ஓரெழுத்தாலே வுலகெங்குந் தானுகி''

''ஒகாரமுடனே யொருகாலுரைக்க
மகரா முதல்வன் மதித்து நின்ருனே''

என்னுந் திருமந்திரப் பகுதியால் இறைவ னுக்குப் பிரணவமே வாகாரமாமென்பதும், இப்பிரணவம் சப்த பிரபஞ்சத்திற்கெல்லாம் மூலகாரணமாகுமென்பதும் தேற்றம்.

இப்பிரணவத்தினின்றும் பஞ்சமியென் னும் வாக்கு தோன்றும். அதினின்று சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி யென் னும் நால்வகை வாக்குகள் தோன்றும். பைசந்தியாதி மூன்றனைச் சூக்குமையின் விருத்தியாகக் கொள்வர். விந்துவினிடத்தி னின்று நாதாதி தத்துவங்கள் உதிப்பதற்கு முன்னே வைகரிக்காதி காரண சூக்குமை பைசந்திமத்திமை யுண்டாமென்று சிவாக்கிர யோகியர் கூறுவர். இவ்வாக்குகளைச் சுத்தப்

பிரமவாதிகள் பிரமமென்பர்; சைவ சித்தாந்திகள் பிரம மாதலின்றிப் பிரமத்திற்குநேரே பரிக்கிரக சத்தி யெனப்படும் சுத்தமாயா ரூபமென்று கூறுவர். இவற்றுள்,

வைகரியாவது தன்செவிக்கும் பிறர் செவிக்கும் கேட்கப்பட்டு நினைந்த பொருளைச் சொல்லுஞ் சொல்லாய், அச்சொல்வானுக்குங் கேட்பானுக்குஞ் சவிகற்ப வுணர்வுண்டாதற்கு ஏதுவாதலும், உதானனென்னுங் காற்றுன் உந்தப்பட்டு மத்திமை தானத்துச் சூக்கும ரூபமாய் பிரிந்துதோன்றிய அக்கரங்கள் அகங்காரத்தால் செலுத்தப்படும் பிராணனென்னுங் காற்றுன் உந்தப்பட்டெழுந்து புறத்தே யடைதலுடைத்தாதலுமாகிய இரண்டும் இலக்கணமாக வுடைத்து.

செவியிற் கேட்கப்படாததாயும் மெல்லோசையாய்க் கண்டத்திலே விளங்குதலுண்மையாற் சொல்லுவான் றன்னுள்ளே யுணருஞ் சவிகற்ப வுணர்வுக்கு ஏதுவாய் உள்ளே யுணரப்படு மோசையாதலும், பிராணவாயுவின் தொழிற்பாடின்றி யுதான வாயுவின் தொழிற்பாடு மாத்திரையே ஆண்டுண்மையிற் சூக்கும ரூபமாய் அக்கரங்கள் பிரிந்து தோன்றினும் பல்விதழ்நா வண்ணங்களிற்பட்டுச் சிதறிப் போதலின்மையுமாகிய அவ்விரண்டிலக்கணமுமுடையது மத்திமை வாக்காம்.

பைசந்தி வாக்காவது, மேல்விளங்கித் தோன்றுவனவாகிய பஞ்சவன்னங்களையுஞ் சூக்கும ரூபமாய் அடைவுபட வொடுக்கி நிற்கும் மயில் முட்டையின் நீர்போலப் பல வகைப்பட்ட வெழுத்துக்கள் மத்திமைத் தானத்துப் பிரிவுபட விளங்கித் தோன்று முறையினை யடக்கி, மிகவுஞ் சூக்கும ரூபமாய்க்கொண்டு சிந்தையின் கணிற்றலும் நிருவிகற்ப வுணர்விற்கு ஏதுவாதலுமாகிய இரண்டிலக்கண முடைத்தாம்.

பரசரீரத்தினுள்ளாக நாதமாத்திரையாய் விளங்குதலும் ஞானமாத்திரைக்கு ஏதுவாதலுமாகிய இலக்கணமுடையது சூக்கும வாக்காம். தவவிசேடத்தால் இதனை யுள்ளபடி காணப்பெறுவார்க்கு அபரமுத்திப் பெரும்போக முண்டாம்.

இவை, நிவர்த்தி முதலிய பஞ்சகலைகள் பற்றுக்கோடாகச் சார்ந்து ஐவகைப்பட்டுச் சிவதத்துவ முதலிய பஞ்ச தத்துவங்களினிற்கும். இவ்வாக்குகள் மாயா காரியங்களைப் போல உபாதியில்லனவாம். இவற்றையும் சுத்தமாயாப் பிரபஞ்சம்போலத் தனக்கு வேறாகக் கண்டு நீங்கின் பரமுத்தியுண்டாம்.

**பிரணவோபகாரம் :**

ஞானக் கிரியாசத்திகளினதிட்டானத்தால் சுத்தமாயையிலிருந்து நாதமுதல் சுத்த நிலமிறுதியாகிய தத்துவங்களுளவாம். இவற்றுள் சுத்த கலையானது பிரேரகக் கருவியாய் அசுத்த மாயையினின்றுந் தோன்றிய அசுத்த கலையைத் தொழிற்படுக்கும். தொழிற்பாடுற்ற அசுத்த கலையாகிய காரகக் கருவியினுல் உயிர்க்கண் மலசத்திகள் தடையுற்று நிற்கும். அதனுல் ஆன்மாவின் கிரியாசத்தி விளங்கும். இக்கிரியா சத்தியானது கன்மேந்திரியங்களை யதிட்டிக்கும். கிரியாசத்தி விளங்குதலுற்ற ஆன்மாவானது வினைமுதலாந்தன்மை யெய்திப் புத்தி தத்துவத்தை அதிட்டிக்கும். இதனுல் பொருள்களைப் பெயர்சாதி முதலியனபற்றிச் சிறப்பு வகையான் துணிதலாகிய சவிகற்பக் காட்சி புத்தி தத்துவத்தின் கண்ணிகழும். மேலும், ஆன்மாவின் கிரியாசத்தியானதிட்டிக்கப்பட்ட கன்மேந்திரியங்களான முன்னர் நிச்சயித்த பொருள் மீளவும் முறையானே போக்கியமாதற்குப் புத்தி தத்துவத்திற்குவரும். இப்புத்தி தத்துவம் புனருற்பவ காலத்தில் வினைக்குப் பற்றிடமாகையினுலும், புருடனுற் செய்யப்படும் இருவினைப் பயனுகிய புண்ணிய பாவங்கட்கெல்லாம் சிறப்பு வகையான் பற்றுக் கோடாதலோடு, முன்னநுபவித்த பொருளைப்பின் நினைதற்கு ஏதுவாகிய வாசனைக்கும் பற்றுக்கோடாதலு முடைமையான் வினைக்கீடாகப் போக நுகர்ச்சியுண்டாம். இப்புத்தி தத்துவத்தின்கண் நிகழும் சவிகற்பவுணர்வுக்குச் சூக்குமை வைகரியே ஏதுவாம். ஆன்மா எய்தும் போகாதிகாரத்துக்கு நாசம்பண்ணி அதற்கு மோக்ஷாதிகாரங் கொடுத்தல் மூலாதாரத்துக்கண் நாத ரூபமாய் அந்தரங்கப் பிரகாசமாய் விளங்கும் சூக்குமை வாக்காலேயே யுண்டாம். எல்லாச் சத்திகளு மொழிந்ததும் சித்தொன்றனையே இச் சூக்குமை புகலாகவுடையது. எனவே, சதசித்தாகிய ஆன்மாவைச் சித்தோடு சேர்த்தற்கு இச்சூக்குமையே உறுதுணையாக நிற்பதாம். **ஆதலின், புத்தி**

தத்துவத்துக்கண் சவிகற்பவுணர்ச்சி நிகழ் தற்கு ஏதுவாய வைகரிவாக்காக நின்றும், வினைக்கீடாகப் போக நுகர்ச்சி யெய்திய வான்மாவுக்குச் சித்தொடு சார்புண்டாக்கி மோக்ஷங் கைகூடற்கு வேண்டிய ஞானப் பிரகாசத்தைக் கொடுத்தற்குச் சூக்குமை வாக்காகவும் விருத்திப்பட்டு நிற்பது பிரண வமேயாதலின் பெத்த நிலைக்கண் பிரணவம் உபகாரப்பட்டு நிற்கும் அற்புதம் தெற்றென விளங்கும். பிறவும் இவ்வாறே வுணரப் படும்.

## எல்லாம் பிரணவத்துள்

நிறைசிவத் தடக்கஞ் சத்தி
நிருமலிக் கடக்கமான்மா
மறைமல மவற்றடக்க
மன்னிய வற்றின்சத்தி
யறையுயிர்ச் சத்திதன்பா
லடக்கமே மாயைமாயை
பொறையுயிர்க் காரியங்க
ளதனிடை யடக்கம் பூணும்

வியாபக வியாத்தியான்மா
வினின்விளங் கமலன்சத்தி
வியாப்பிய வியாத்தியான்மா
சத்தியின் விரவுமாயை
வியாபக வியாப்பியங்க
ளின்றியே சமத்தின்மேவும்
வியாத்தியே யுயிருமொன்ருய்
விரவிருண் மலமுமாதோ.

(தணிகைப்புராணம்—அகத்தியனருள்பெறு படலம் 364-5)

எனவரும் செய்யுட்களான் மாயா காரி யங்கள் மாயையிடத்தும், மாயையான்ம சத்தியிடத்தும், மலசத்தி மலத்தினிடத்தும். ஆன்மா சத்தியான்மாவினிடத்தும், ஆன்மா வும் மலமும் சத்தியினிடத்தும், சத்திச் சிவ னிடத்தும் அடங்குமென்றும், மலம் ஆன் மாவை சகசமாய் மறைத்து நிற்குமென்றும் உணரக்கிடக்கின்றன.

மேலும், ஆன்மாவினிடத்து அமலன் சத்தி வியாபக வியாத்தியாய் விளங்குமென வும், ஆன்மா சத்தியினிடத்து மாயையானது வியாப்பிய வியாத்தியாய் விரவுமெனவும், உயிரினிடத்து விரவுகின்ற இருள்மலமானது வியாபக வியாப்பியமின்றி வியாத்தியாய் சமத்தின் மேவுமெனவும் அறிய நிற்கின்றன. இவற்ருன், "எவற்றெவனு மங்கணவை யவனன் றில்லை" (சிவஞான போதம் 2 சூ 4 அதி) என்றபடி எவ்விடங்களினுள்ள எத்திறப் பொருளுமாகிய அவ்விடத்துப் பொருள்கள் அம்முதல்வனையின்றியமையா வென்று பெறப்படும்.

வியாபகனுகிய முதல்வன் தன்னின் வேறின்றியும் வேருகிய தாதான்மிய சத்தி யுடையனுதல்போலவே அம்முதல்வன்போல வியாபகமாகிய ஆன்மா மலம் மாயை கன்மங் களும் தத்தமக்குரிய தாதான்மிய சத்திகளை யுடையனவாம். அங்ஙனமாயினும், தூல சூக்கும முறையின் வியாபக வியாப்பியங் களாய் நிற்றலின் அவ்வவ்வியாப்பியப் பொருள்களின் சத்திகள் அவ்வவ்வியாபகப் பொருட்சத்திகளின் அடங்கு மியல்பின வன்றி, யொத்தவியல்பினவல்ல வென்பது பெறப்படு மாகலின், முதல்வன்ருனே "ஏகாநேக மிரண்டுமின்றிச் சருவ வியாபி யாய் நிற்றல்" போதரும்.

இனி, கன்மமானது சங்கார காலத்தில் மோகினி மாயையையும், புனருற்பவ காலத் தில் மாயா காரியமாகிய புத்திதத்துவத்தை யும் பற்றி நிற்குமாறும், மாயா காரியங்கள் ஞானக் கிரியா சத்திகளாதியால் உண்டாகு மாறும், சிற்சத்தி மல நீக்க ஏதுவாகிய பஞ்ச கலைகளாய் விரிந்து திரோதான சத்தியாய் விளங்குமாறும், இப்பஞ்ச கலைகளையும்பிரண வத்தின் பஞ்ச கலைகள் ரூபமாய் அதனினின் றும் தோன்றிய வாக்குகள் பற்றி நின்று புருடனையும் கலையாதி தத்துவங்களையும் செலுத்துமாறும், இப்பிரணவம் இறைவனுக் குச் சொரூபமாய் விளங்குமாறும், விளங்கி நிற்றலின் எல்லாம் பிரணவத்துள்ளாகும் என்பது தேற்றமாம். எல்லாம் ஓங்காரத்து ளுளவாம் என்பதனை,

"இறைசத்திபாசம் எழின்மாயை ஆவி
உறநிற்கும் ஓங்காரத்துள்"

என்னும் உமாபதி சிவத்தின் அருண் மொழி வலியுறுத்தா நிற்கக் காண்டும்.

## பிரணவாதிக்கம்

இப்பிரணவத்தின் ஆதிக்கம் பின் வரும் திருமந்திரச் செய்யுட்களான் நன்கு புலனுகும்:

ஆரும் அறியார் அகாரம் அவனென்று
பாரும் உகாரம் பரந்திட்ட நாயகி
தாரம் இரண்டுந் தரணி முழுதுமாய்
மாறி எழுந்திடும் ஓசையதாமே

இலிங்கநற்பீடம் இசையும் ஓங்காரம்
இலிங்கநற்கண்ட நிறையும் அகாரம்
இலிங்கத்துள்வட்ட நிறையும் உகாரம்
இலிங்க மகாரம் நிறைவிந்து நாதமே

அகாரமுதலா யனைத்துமாய் நிற்கும்
உகாரமுதலாய் உயிர்ப்பு எய்துநிற்கும்
அகார உகாரம் இரண்டும் அறியில்
அகார உகாரம் இலிங்கமதாமே.

மேலும், இப் பிரணவத்தின் ரூப, சொரூப, சுபாவ, வியாத்தி வியாபக, குண, விசேட, வான, பாவ, பரத்துவ, அபரத்துவ நிமித்த, நிமித்தவிசேட, உற்பவாதிகரண, உற்பவகரண, உற்பவ பருவ, உற்பவகன்ம, உற்பவோபகார, உற்பவ பிரேரக, அதிகா ராதிகரண, அதிகாரகரண, அதிகார பருவ, அதிகார கன்ம, அதிகாரோபகார, அதிகார பிரேரக, லயாதிகரண, லயகரண, லயபருவ, லயகன்ம, லயோபகார, லயப் பிரேரகாதிலக்ஷணங்களையுரைப்பான் புகின் அளவின்றிப் பெருகுமாதலின் விரிவஞ்சி விடுத்தனம்.

**கணேசோற்பவ வைபவம்**

பெரும்பொருட்கிடனும் பிரணவவடிவில் பிறங்கிய வொருதனிப் பேருய், அரும்பொருளாகி மறைமுடிக்கண்ணே யமர்ந்த பேரானந்த நிறைவாய், அருளுரு மொளியாய் அவ்வொளிக்குள்ளேயமர்ந்த சிற்பர வொளிநிறைவாய், சுத்த சற்குணத் தெள்ளமுதெழுகடலாய், சுகபரிபூரணப் பொருளாய், பரம சிற்சுக பரம்பரமாய், ஊமொன்றில்லா வுத்தமருளத்தே வோங்குசீர்ப் பிரணவ வொளியாய், விரும்பினுர்க்கு பரபோக சித்தியும் சுத்த தருமமும் முத்தியுமளிக்கும் வள்ளன்மையுடையதாய் விளங்கும் பெருங்கருணை மூர்த்தமே தன்னேரில் கணேச மூர்த்தமாம்.

ஒருவ ஞெருத்தி விளையாட லுற்றுர்
இருவர் விளையாட்டும் எல்லாம் விளைக்கும்.
—திருமந்திரம்

என்றும்,

சிவஞ்சத்தி தன்னையீன்றுஞ் சத்திதான்
சிவத்தை யீன்றும்
உவந்து இருவரும் புணர்ந்து
இங்குலகுயி ரெல்லாமீன்றும்
—சிவஞானசித்தியார்

கூறும் உண்மைகளை யொருவாறுளங்கொள்ளுதுமல்லது அவ்விருவர் தம் புணர்ச்சி நிலையெத்திறத்ததோ வென்றும் அறிகிலம் அதனை மெய்ஞ்ஞானிகளுக்குணர்த்தக் கருதியே களிறும் பிடியுமாக நின்று கணேச மூர்த்தியை யருளியபடியாகும். அவர் தம் புணர்ச்சியானந்தமே உயிர்கள் வேட்கும் சிவானந்த செல்வமாதலின், அச்சிவானந்த வெள்ளத்தின் பூரணமே இம்மூர்த்தியாமென்பது தேற்றம்.

இச்சிவசத்திகள் ஒருபாலும், முன்னுறு புணர்ச்சியின் முயன்று நின்ற களிறும் பிடியும் மற்றொரு பாலுமாக இடைக்கண் இவ்வேழமுக வள்ளலார் நிற்கும் தோற்றமாவது ஆனந்த முத்தியைந்தெழுத்தின் உண்மையைப் புலப்படுத்துவதாகும்.

திருவாசக ஹ்ருதய மந்த்ர சுலோகமாக விளங்கும்.

''உடையாளுன்றனடுவிருக்கு முடையாணடுவுணீயிருத்தி'' என்னும் செய்யுள் இதனை யுய்த்துணர வைக்கின்றது.
மேலும், திருச்சிற்றம்பல நாடிகளார்

''வரோதயமான வாசியை நிறுவி
வளம்பொலி சிவாயவாசி யென்றுளத்தில்
விளம்புக நின்னை விளக்கும் ஆனந்த
முத்தியஞ் செழுத்து மொழிந்தன மிதனைச்
சித்த சாந்தியிற் செப்பென மொழிந்தான்''

என்றுச் சுப்பிரமணியர் தனக்குக் குருவாய் வந்து உபதேசித்ததாகக் கூறுகின்றுர். குருமுகமாக அறியவேண்டிய விவ்விருதலை மாணிக்கமென்னும் பஞ்சாட்சரத்தின் இரகசியத்தைக் கஜமுகர் உற்பவ மூலமாகக் கருணைக்கடலாகிய கண்ணுதலெந்தையார் உலகறியவைத்தார்.

அன்றியும், விபுதையென்னும் மாது செய் தவத்தினுலும், வரன்முறை வழாத ஊழின் ஏதுவினுலும், அங்கண் இருங்களிற்றொருத்தல் ஒன்று காதலம்பிடியினேடு கலந்துடன் புணரக்காணூஉ, ஆதரம் பெருகப் பல்கால் மாகதனுகிய வருந்தவத்தோன் நோக்கினன். பின்னரவனை மெய்யுறு புணர்ச்சியக்னெய்திக்கசமுகனைப் பயந்தான். அக்கசமுகன் சிவபெருமானை நோக்கி யருந்தவமுஞற்றி ''மாலயன் இந்திரன் முதல் வரம்பிலோர் மேலுறுதகையினர் வெய்யபோரிடை ஏலுவரென்னினும் தனக்கு வென்னிடவும்;

எற்றுவ வெறிகுவ ஈர்வ, எய்குவ, குற்றுவ முதலிய குழுக்கொள்வான் படை முற்றுற வரினும் முடிவுறு வகையெய்தவும்; மிக்க தோர் அமரரால் வியப்பின் மானுட மக்க ளால் அவுணரால் மற்றையோர்களால், தொக்குறு விலங்கினுல் துஞ்சிடா வகையுண் டாகவும்; தன்னிகராகி வந்தொருவன் தன்னெடு முன்னுற வெஞ்சமர் முயலும் என்னினும் அன் னவன் படையினும் அழிவுரு வகைபுணர்க்கவும்; ஒருகால் சூழ்ச்சியால் பொன்றினும் பிறவி யுட்புகாமை பெறவும்'' வரம்வேண்டிப் பெற் றுக்கொண்டான். இவற்றை நல்கிய இறை வன் எப்பொருட்கும் வைப்பிடமாகிய பிரண வத்திலிருந்து சத்தியும் சிவமுமாகிய சித்துக் களைக் களிறும் பிடியுமாகப் பிரித்து முன் னுறுவித்து பிரணவ நாயகியாகிய உமா (உ+ம்+அ) தேவியார் அப்பிரணவத்தி னின்றும் தோன்றும் வாக்குகளுக்கெல்லாம் ஈஸ்வரியாதலின் அவளது காட்சியின் மகிமை யால் கணேசனைத் தோற்றுவித்தார். எப் பொருளுமாகிய இக்கணேச மூர்த்தியானே மற்றையெவராலும் வெல்லப்படாத விறலு டையவக்கசமுகன் வெல்லப்பட்டான். இனி, "முன்னே வருவாய் முதல்வா'' என்றுஇவரை முருகக் கடவுள் நினைந்தவொன்றே இவரது முழுமுதற்றன்மைக்கோர் சான்ருகும். இவர் முக்கணும், பவளச் சடிலமும், திங்களங் கொழுந்துவேய்ந்த சேகரமும் உடைமையா னும், பிரணவ சொரூபியாதலானும் "ஓங்கார ஸ்வரூபிணம் மஹாதேவ முமார்த்த க்ருத சேகரம்! ஸோமஸூர் யாக்னி நயனம்'' என்று பஸ்மஜாலோபநிடதம் கூறுகின்ற பர சிவத்தோடு அபேதமுடையவராவா ரென்ற யப்படுர்.

உய்ய வல்லார் கட்குயிர் சிவஞானமே
உய்ய வல்லார் கட்குயிர் சிவதெய்வமே
உய்ய வல்லார்கட்கு ஒடுக்கம் பிரணவம்
உய்ய வல்லார் அறிவுள் அறிவாமே.

—திருமந்திரம்

இம்மூர்த்திக்குரிய "ஓம்'' எனும் மகா மந்திரமே வேதங்களுக்கெல்லாம் மூலம் என் றறியப்படும். ஆறத்துவாக்களுள் மந்தி ராத்துவாவே சிறந்ததாகலாலும், பரசிவத் திற்கு மந்திர மூர்த்தமே சிறந்ததாகலாலும், மந்திரங்களுக்கெல்லாம் பிரணவமே மூல காரணமாதலானும், இம்மந்திர மூர்த்தி மானு கிய ஐங்கரக் கடவுளே மகாதேவ ரென் றறிந்து வழிபடத் தக்கவராவார்.

ஓமெனுமந்தப் பதந்தனை யுரைத்தோர்
வேதமாதிகளெலா முரைத்தோர்
தோமறுமந்தப் பதப்பொரு ளுணர்ந்தோர்
தொக்கநூற் பொருளெலா முணர்ந்தோர்
ஏமுறுமந்தப் பதப்பொரு ளின்றேல்
இரவியில் வழிவிழி யென்னக்
காமரு பொறிமற்றிருப் பினுஞ்சற்றுங்
கதிப்பரி தாகும் மாதவனே''

—(தணிகைப் புராணம்: அகத்தியனருள் பெறுபடலம்)

உணர்ந்தெழு மந்திரம் ஓமெனுமுள்ளே
மணந்தெழுமாங் கதியதாகும்.

—திருமந்திரம்

இம்மூர்த்தியை யாம் முற்பட வழிபட் டுய்வோமாக.

முன்னவனே யானை முகத்தவனே முத்திநலஞ்
சொன்னவனேதூய்மெய்ச்சுகத்தவனே-மன்னவனே
சிற்பரனே ஐங்கரனே செஞ்சடையஞ் சேகரனே
தற்பரனே நின்றுள் சரண்.

---

பண்டு விண்ணோர்குலம் வாழப்புரந்து பழனியிலோர்
தண்டுடனின்று விளையாடும் மாண்புடைச் சற்குரவர்
கண்டுதொழுது துதிபாடி நெஞ்சிற்கருதும் உண்மைத்
தொண்டு செய்வார்க்கவன் வேலும் மயிலும் துணைச்செய்யுமே

—பழனித்திருவாயிரம்

---

# பழனித்தேவர்

திரு. குகஸ்ரீ ரசபதி

## வைகாபுரி வாவி

அன்பர்க்குத் தென்பழநி அருள்புரியும் தலம். வாழும் அதன் அடிவாரத்தில் வாவி ஒன்று உளது. தலத்தின் முதலில் தரிசனம் தரும் அத்தீர்த்தம், அடிதொழ வருபவர் தூய்மைபெற நீராடும் துறையும் உடையது. கனிந்த மன அடியவர்கள் பலர், பால் காவடிகள் எடுப்பர். வந்த பணி முற்றிய பின் ஆவி தூயரான அவர்களை, கடலெனப் பரவிய அந்த வாவிக் கரையில் காணலாம். இது என்றுமுள செய்தி.

நீர் நிறைந்த அந்தக் குளம், வற்றும் காலமும் வரும், அவ்வமயம் பார்த்து, வலை வீசி மீன் பிடித்து வாழ்பவர்கள் பலர் உளர். துடிக்கும் மீன்களை நடுக்கமின்றி, மலைபோல் குவிப்பர். பங்கிடுவர், பலர்க்கு விற்பர். நிலை யிது பல சமயம் நிகழ்ந்துளது.

சேறும் நீருமான ஒருசமயம், இச்செயல் செய்யப் பெற்றது. பொழுது போயது. இருள் மிகுந்தது. காலையில்தான் பங்கிட முடியும். அதற்காக, நேர்ந்த குவியலைக் காக்க ஒருவரை நியமித்தனர். அவரைப்பற்றி நாம் சிறிது அறிந்து கொள்வது நலம்.

## காவலர் செய்தி :

கருத்த மேனி. வீரத் தோற்றம். கம்பீரமான மீசை. இரும்பு போன்று இறுகிய தோள்கள். தடித்து நுனி கூர்மையான ஒரு தடிபிடித்த கை. நெற்றியில் நீறு. இக்கோலம், இடும்பன் தோற்றம் போல இருக்கிறது. எனினும் இதயம் மிகவும் இளகியது. பழநித் தேவா! பழநித் தேவா! என்று இடையிடையே மொழியும் அவர் திருவாய்.

இதனால் அவரைப்பழநித்தேவர் என்றே பெயரிட்டு அழைத்தனர். பழநியில் வாழ்பவர் எவரேனும், பழநித் தேவா என்று அழைத்தால் ஏன் பழநித்தேவா என்றே பதில் வரும். பழநிப் பரமன் நாமம், அவர் நாவில் அவ்வளவு பயிற்சியில் இருந்தது. உருவப் பொலிவாலும், உள்ளத் தூய்மையாலும் அவர் உயர்ந்தார் என்பதை உணர்ந்து, அந்நாளில் காவல் தொழிலுக்கு அவரை யழைப்பது எவர்க்கும் வழக்கமாகி யிருந்தது.

இன்று வாவியின் கரையில் காவல் செய்யும் பழநித்தேவர், இரவு முழுதும் கண்ணுறங்கிலர். மேலும், அவரது கைத் தடியைக் கண்டாலே, எவர் மனமும் களவு செய்யத் துணியாதே.

## தோகையின் துயரம்

பழநியின் ஒருபுறம் பரதவர் சேரி. அங்கு நிசப்தமா யிருக்கிறது. இரவு மணி பத்து. எல்லோரும் கண்ணுறங்குகின்றனர். அந்நேரத்தில், ஒருத்தி மட்டும் நித்திரையின்றி நெட்டுயிர்த்து நிற்கிறாள். அவள் ஆளனை இழந்து ஆறு மாதம் ஆயிற்று.

வறுமை வாழ்க்கை. உலர்ந்து வாடிய உடல். இந்நிலையில், அத்தர் பழநி யாண்டவர் நாமந்தான் அவளுக்கு ஆறுதல்.

பர்த்தா இருந்தால், மீன்களில் அவளுக்கும் ஒரு பங்கு வரும். இன்று அவன் இல்லையே என்றுஎண்ணும் போதெல்லாம் அவள் நெஞ்சம் வெடித்துவிடும் போல் இருக்கிறது.

சேரிவாசிகள் மீன் பிடிக்க ஆரம்பித்த நேரம் தொடங்கி, விம்மி விம்மி அழலானாள்.

பழநியப்பா! என்னை இக் கதியாக்கினையே! தாயும் நீ! தந்தை நீ! ஆன்ம நாயகா! என் குறையை எவரிடத்து முறையிடுவேன்? ஒவ்வொரு வீடும் கூடை மீன் கொண்டுவரும். என் வீடு மட்டும் வெறிச்சென்றிருக்கும்.

அடியாள் உன் அடிமை யல்லவா? என்னைப் பிறர் எதிரில் எளிமைப் படுத்தலாமா? அது உனது அருட்கு குன்றவல்லவா? என்று, மாலைமாலையாய்க் கண்ணீர் சோர மலையை நோக்கி வணங்கினள்.

கூடைமீன் கிடைக்கவில்லை எனில், குடி முழுகிப் போகுமோ? என்று, பின் முகத்தில் பேசுவது சுலபம். குலத்தளவு ஆகும் குணம்? இதைக் குறிக்கொளவும் வேண்டாவோ; குல ஒழுக்க உணவிற்கும், அமலன் மேல் கொள்ளும் அன்பிற்கும் தொடர்பில்லை. அது வேறு நிலை. இது வேறு செய்தி.

நெற்றியில் நீறு. இனிய அவள் இதயத்தில் தண்டபாணி என்று மூளன். இவள் நிலேகண்ட இறைவன் திருவுளம் இரங்கியது வேண்டுவார் வேண்டுவதே அருளும் விமலன், அவள் நினைவு நிறைவேற வெளியானுன்.

## அருளுதயம்

பயங்கரமான நள்ளிரவு. எனினும், அந்தப்பயம் காவல் செய்யும் பழநித் தேவருக்குக் கடுகளவும் இல்லே. நம்பன் நாமத்தை நாநவிற்ற, இதயம் பரமனே எண்ணி இருக்கிறது. விழித்த கண்ணர், விறுவிறுப்பு நிலேயர், அஞ்சா நெஞ்சர், கடுமையாகப் பழநித் தேவர் காவல் செய்கிருர். பரமன் அருளால் சிறு துயில் சிறிது நேரம் பழநித் தேவரைப் பற்றியது.

அதோ வருகிறது, உருண்டு திரண்ட ஒரு உருவம். தோற்றத்தில் வயது பதினறு என்றே தோன்றுகிறது.

ஆரல் மீன், வரால் மீன், வாளே மீன் முதலியவை, கூடிஅம்பாரமாகக் குவிந்துளது.

காலம் பார்த்து வந்த உருவம், கையிலிருந்த கூடையில், மீன்களேப் பரபரப்பொடு வாரி நிரப்பி, ஓட்டம் பெருநடை கொண்டு ஓட ஆரம்பித்தது.

திடுக்கென்று கண்விழித்தார் தேவர். கூடை மீன் கொள்ளே போவதை நோக்கினுர்.

அடே நில்! நில்! என்று ஆக்கிரமித்து நடந்தார். அவர் தொடர்ந்த வேகத்தில், நிலம் அதிர்ந்தது. அவர் சொல்லளவிற்கு அடங்காது ஓடுகிறது அவ்வுருவம். ஆத்திரம் பழநித் தேவருக்கு அதிகரித்தது.

அப்படியா செய்தி! எங்குச் சென்ருலும் விடுவதில்லே உன்னே என்று உறுத்து குதித்து ஓடுவானேப் பிடிக்க, தொடர்ந்து ஓடுகிருர்.

எட்டிப் பிடிக்கும் அளவு அண்மையில். திடீரென்று எட்டா நிலேயனுச் சேய்மையில். இங்ஙனம் கூடை மீனேடு ஓடுகிறவன், கிட்டுவான் போலவும் கிளர்ச்சி செய்கிருன். இதனுல் படபடத்த பழநித் தேவர், தட்டுப்படாத மேனிமேல், தடி அடி படத் தாவித் தாக்கினுர் அடிவாங்கிய அதன் பின், இத்துணே ஆடல் நிகழ்த்திய அவ்வுருவம் திடீரென்று அருவமாயது.

நாள்தோறும் நீ எண்ணும் நம்பனடா! பழநி-அப்பனடா யாம்......ம்...ம்...என்று அடுத்து எழுந்தது அசரீரி.

அச்சமும் வியப்பும் அதிகரித்தது; உடல் சுருங்கியது. உள்ளம் அதிர்ந்தது வெப்பமாக சுவாசம் வெளிப்பட்டது.

ஐயோ நீயா அத்தா! பழநியப்பா! என்று வேதனே மிகுந்து வீரிட்டுக் கூவி வீழ்ந்து, மூர்ச்சையானுர் பழநித் தேவர்.

* * *

## ஏழை பங்காளன்

பங்கு பெற இயலாத பாவை குடில் எதிரில், ஒருகாளே, கொண்டு வந்த கூடையை இறக்கினுன்.

யாரம்மா வீட்டில்? கதவைத் திற! இதோ உன் பங்கு என்று கூவிக் கூறினன் அந்தக் குமரன். பரதவர் பாவை, விமலன் குரல் கேட்டு வெளி வந்தாள். கூடைமீன் கண்டு குதுகலித்தது அவள் மனம்.

யார் அப்பா நீ?

நன்ருய் இருக்கிறது உன் நாடகம். அலறி என்னே அழைக்கிருய்! எண்ணத்தை நிறைவேற்று என்கிருய்! இரக்கம் கொண்டு வந்த என்னே, யாரப்பா நீஎன்று கேட்கிருய்! என்னே இன்னம் அறிந்திலேயோ என்று அருளியபடி, விண்ணில் பாய்ந்து அருவமானுன் விமலன்.

## அன்பின் பண்பு

திக்பிரமை அடைந்தது மனம். என்னப்பனே! பழநியாண்டீ! ஏழைபங்கில் இருந்தாயோ! உயர்ந்த ஞானிகள் ஏத்தும் உன்னே, பாவி நான் சிறு மீன் நினேவால் சிந்தித்தேன். வைதீக இதய வள்ளலே! கூடை மீனே, என் பொருட்டு சுமந்துகொண்டா வந்தாய்?

இவ்வுலக வாழ்வு. இனி வேண்டேன் காமிய மனம் உன்னேக் கருதுமாயின், உய்திக்கு இடம் இவ்வுலகில் உளதோ? தெய்வமே! வேண்டல் சிந்தனே, உன்னிடத்தில் வேலே வாங்குகிறது. நலிவிற்கு உரிய அந்த மனம், நாசம் அடைவதாக.

இதோ புறப்படுகிறேன். இயன்ற அளவு பணி செய்தே என் ஆன்மா

கடைத்தேறும்! வருகிறேன் பழநி ஐயா! வருகிறேன் என்று உரத்துக் கூவி உலகை மறந்தாள்.

ஆவேசம் கொண்டவள்போல், ஓடினாள். விரைந்து மலையேறினாள்.

வைகறை நேரமாதலின், அளவிலாத அன்பர்கள் விசுவரூப தரிசனத்தில் மெய் மறந்து நிற்கிறார்கள்.

தண்டாயுதபாணிக்கு அரோகரா! என்று வீரிட்டுக் கூவினாள், மலைஏறி வந்த பக்தை. பலதரம் அவள் அழைத்த அழைப்பொலி, அன்பர்கள் செய்யும் துதி ஒலியை அடக்கியது. அங்ஙிலை, எவரையும் மயிர் சிலிர்க்கச் செய்தது.

வந்த பக்தை, சந்நிதிக்கு நேரே அடியற்ற மரம்போல் வீழ்ந்தாள்.

தண்மையிலாத பாவி, வெகுதவறுதல்கள் செய்த பாவி, உள்ளத்தில் நேர்மை யில்லாத பாவி ஐயா நான். உய்வேனோ யான் உய்வேனோ? உமையாள் மகனாய் ஆள்வானே! என்று கண்ணீர் பெருக்கிக் கதறினள்.

ஹூம்; ஹூம். என்ன இது? அர்ச்சகர் மேல் பழநி அப்பன் ஆவேசித்துளன். ஆவேசம், அச்சத்தையும் அன்பையும் எவர்க்கும் அளிக்கின்றன.

அறிவு தோன்றிய நாள்முதல், பரிசுத்தமான உள்ளத்தால் எம்மை ஆராதித்த பாக்கியவதீ! யாது வேண்டும்? என்றான் ஆண்டவன்.

அப்பனே, பாவியான என்னையும், உன் வாக்கால் பாக்கியவதி யாக்கினையோ? இரஸவாதிகள் போல், குற்றக் களிம்புடைய என்னைக் குணமாக்கிய உன் மலைமேல், என்றும் பணி செய்திருக்க அருள்! பணிக்கு இடையூறு நேராதபடி, கடைக்கண் பார்! மற்றொன்றும் வேண்டா மலை மாணிக்கமே! என்று வீழ்ந்து எழுந்து வேண்டினள்.

அங்ஙனமே ஆக என்று, மலையேறியது ஆவேசம்.

* * *

மூர்ச்சையி லிருந்து தெளிந்து எழுந்தார் பழநித் தேவர். ஆ! கனவா நனவா நான் கண்ட காட்சி? கூடைமீன் கொள்ளை போகிறதே என்ற அளவில் குறித்தேன். துரத்தியபோது என்ன ஜாலம்? அகப்படுவது போல ஒரு அதிசயம்! இமையளவு நேரத்தில் வெகுதூரம்! இந்த விசித்திரத்தை உணர நேரமின்றி, என் அப்பனை தடியால் ஓங்கி யல்லவா அடித்தேன்!

என்னை அடிக்கிறாயே! நான் உனது அப்பனடா! தெரிவில்லையேடா உனக்கு என்று கூறாது கூறிய பெருமான் திருவுளம், யாது யாது கருதியதோ?

பாழும் தடியால், பழநியப்பனை அடிக்குமளவு, பாவக் கோட்டை யாயினேன்! என்னுடலைச் சுட்டெரிக்க வேண்டாவோ? நரகம்தான் என்னை விழுங்கும்!

கும்பிடக் கொடுத்த கையால் கோல் கொண்டு அடித்தேன். வலம்வர வளர்ந்த கால்களை, துரத்தப் பயன் படுத்தினேன். காண அளித்த கண்கள், உறுத்து நோக்க உதவின. குளிர்ந்து நினைக்க உதவிய இதயம், கொதித்துக் கதித்து இருண்டது. கொடுமை! கொடுமை!!

அறுக்க வேண்டும் இக்கைகளை! நுங்குபோல் தோண்ட வேண்டும் என் கண்களை! இத்தண்டத்தை, எம்பிரான் சந்நிதியில் நடத்த வேண்டும் நான்!

பொழுது விடியும் நேரம். அதோ சேவைக்குப் போகிறார்கள் பக்தர்கள். இப்பொழுது எதையும் செய்வது சரியல்ல.

கதிரவன் உதயமாகி, மாலையாகி மறைந்து, நள்ளிரவு வழிபாடு நடந்தபின், அன்பர்கள் மலையி லிருந்து அடிவாரம் வருவார்கள், நிர்ச்சந்தடியான மகத்தான அந்த நேரத்தில், மலை யேறுவேன்! பலிபீடத்தில், உறுப்புகளை ஒவ்வொன்றாய் அறுத்திடுவேன்! அப்போது என்னைத் தடுப்பவர் எவரும் இரார். ஆம். அதுதான் சரியான யோசனை யென்று, பழநித்தேவர் சிந்தித்தார்.

இப்போது காவல் செய்கிறோம் என் பதையே மறந்தார். உடனே புறப்பட்டார் வீட்டை யடைந்தார். உறையி லிருந்த வாளை உருவினார். சாணை பிடித்தார். அவர் சிந்தனையை, அவர் குடும்பம் அறிந்திலது.

பழனியை அன்று ஆண்டவர் ஒரு பார்த்திபர். அவர் ஒரு பரம பக்த சிகாமணி. பழநித் தேவரிடத்தும், பரதவர் பாவையிடத்தும், அன்று இரவு சிறந்த ஆடல்

காட்டி உருக்கரந்த சிவகுமரன், அதே நேரத்தில் காவலர் கனவிலும் காட்சியாயினன்.

பக்தர் பக்தை இருவரது உணர்வின் ஒழுகலாற்றலையும், நடந்த சம்பவங்களையும், அருளொழுகும் மொழிகளால் விரிவாக அருளினன். அவைகளைக் கேட்டு, கண்ணீர் சிந்தினர் அரசர்பிரான்.

அப்பனே கேள்! பழநித் தேவன் பரம பக்திக்கு ஈடு இல்லை காண்! ஏழைக்கு உதவுவது என்கடன். கம்பால் அடித்தது காப்பாளன் கடன். கல்லடிபட்டு, வில்லடி தாங்கி, தன் அன்பர்களை உலகிற்குக் காட்டித் தந்தார் கண்ணுதலார்.

தடியடி தந்த என் அன்பன் பழநித் தேவனை, நாம் தரணி யறியச் செய்ய வேண்டும். இதற்கு நீ தளர்ந்து வருந்துவது தவறு. அன்பன் அவன், இன்றிரவு தன் உறுப்புகளைச் சேதிக்கும் சிந்தனையில் இருக்கின்ருன், தரணிபா! அதைத் தடுப்பது உன் கடன்.

அடித்த கைகட்குக் கடகம் அணிவது தான் அறிவுடைமை. இது என் கட்டளை ! விரைந்து அது செய் என்று அருளினன் விமலன்.

காவலர் உடனே கண்விழித்தார். மகிழ்ந்தது அவர் மனம். எழுந்தார். உடனே மெய்க்காப்பாளனை ஏவினுர். காவலர் கட்டளை யறிந்து, அந்த நள்ளிரவு நேரத்தில், பொற்கொல்லர்கள் வந்தனர். செய்த ஏற்பாட்டின்படி, பொழுது விடிவதற்குள் இரு பொன்கடகங்கள் சித்தம் ஆயின.

பரிதி உதித்துப் பத்து நாழிகை ஆயது. எண்ணுதும் எண்ணி, தலை குனிந்து, கண்ணீர் பெருக்கி, கந்தப் பெருமானைப் பழநித் தேவர் கருதியபடியே இருக்கிருர்.

உம்மை அழைத்து வர, மன்னர் உத்தரவு! என்ற குரல் கேட்டு நிமிர்ந்தார்.

அரசரது ஏவலர் இருவர், எதிரில் உளர். திடுக்கிட்டது மனம். என்ன? அரசரா? எதற்கு என்னை அழைக்கிருர்? என்னுடைய பெரும்பிழை மன்னர்க்கும் எட்டியதா? ஆ! அப்படியானல் அது நல்லதுதான். எனினும், யான் முடிவு கட்டிய அளவு, அரசர் தண்டம் அளிப்பாரா? பார்ப்பம் என்று எண்ணினுர். எழுந்தார். உடலாடக் குடர் குழம்பப் புறப்பட்டார். சேவகர்கள் தொடர்ந்து சென்றனர்.

அமைச்சர்கள், சேனைபதியர்கள், புலவர் பெருமக்கள் முதலிய பலரும் நிறைந்திருக்கின்றனர். என்றும் இல்லாத பொலிவு, அன்று இராஜ சபையில் நிறைந்துளது.

காவலர் விநயத்தைப் பழநித்தேவர், நிமிர்ந்து கண்டிலர். அவர் மனம், படக் படக்கென்று அடித்துக் கொள்கிறது. அரச சபையை இதுவரை அவர் அறிந்தவர் அல்லர்.

வருக ஐயா! வருக!! தங்கள் வரவு நல் வரவாகுக என்றபடி, அரியணையி விருந்து அரசர் எழுந்தார். எதிர்கொண்டார். பழநித் தேவருடைய இரு கைகளையும் பற்றினுர். அழைத்துச் சென்ருர். அரிய ஒரு பீடத்தில் அமர வைத்தார்.

ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு, நாடக உபசாரம் நடத்துகிருரா அரசர்? என்று, பழநித்தேவர் எண்ணுகிருர்.

அரசே! செய்யும் தண்டத்தை விரைவில் செய்துவிடும்! இதோ சித்தமாயிருக்கிறேன் அடியேன்!

இதோ அடியேனும் சித்தமாகத்தான் இருக்கிறேன்! இன்னுமா தாமதம்? கொண்டு வாருங்கள் என்று, பணியாட்களை நோக்கினுர் பார்த்திபர்.

என்ன இது? சபையில் இருக்கும் எவர்க்கும் ஒன்றுமே விளங்கவில்லை. என்னமோ நிகழப் போகிறது என்பது மட்டும் தெரிகிறது. பரபரப்புடன், மன்னரையும் தேவரையும் யாவரும் மாறி மாறிப் பார்க்கிருர்கள்.

உடனே ஒரு பொன் வட்டில் வந்தது. காவலர் அதிலிருந்து எடுத்த பொற்கடகம் இரண்டை, இருகரங்களிலும் தரித்தார். பீதாம்பரம் போர்த்தினுர். கட்டி கட்டியான பொன்களையும், நவரத்தினங்களையும், காணிக்கையாக வைத்துக் கைகுவித்தார்.

அரசே! என்னது இது? கையை வெட்டுங்கள்! கால்களைத் துண்டியுங்கள்! அது தான் அரச நீதி. ஒறுக்கப்பட வேண்டிய உறுப்புகட்கு அணிபுல அணிவது, பொன்

னுடை போர்ப்பது அறமாகுமோ? என்று, பதைத்துக் கதறுகிறார் பழநித்தேவர்.

சபையி லிருப்பவர்கள், விவரம் அறிய முடியாமல், ஒருவரை ஒருவர் நோக்கி மிரளு கிறார்கள்.

கைகுவித்தார் காவலர். புரிந்து கொண் டேன் தங்களை அன்பரே நன்றாகப் புரிந்து கொண்டேன். பாவியேனையும் பொருளாக்கிக் கனவில் வந்த பழனி யாண்டவர் அடியேற்கு எல்லாம்அறிவித்தார். அறிவியாரேல், அன்பு மிக்க தங்களை அறிய இயலாது எங்களால்: உத்தமரானஉம்மை,இதுவரைஉணராதிருந்த எம்பிழை பொறுக்க வேண்டும் என்று, யாமன்றே வேண்ட வேண்டும் என்று, விநய மொடு விளம்பினர் வேந்தர் பிரான்.

அதன் பின், வாவி மீன் வரலாறு; பழநித்தேவர் காவல்; பரதவர் பாவை வேண்டுகை; பரமன் செய்த உதவி; காவல் தேவர் தடியடி; அமலன் கனவில் அருளிய செய்தி முதலிய அனைத்தையும், அன்புக் கண் ணீர் பெருக ஆர்வமொடு சபைக்கு அறிவித் தார் அரசர். கேட்ட சபையின் மனம் கிளு கிளுத்தது. மெய்ம்மறந்துசபை கைகுவித்தது.

அரோஹர என்ற ஒரு பெருங்குரல். சபையிலிருந்த சண்முக பக்தர் ஒருவர், ஆவேசம் கொண்டு ஆடுகிறார். அவர்தானா? அவரைக் கண்ட எவர் மனமும் கிடுகிடென ஆடுகிறதே!

அன்பனே பழநித்தேவா! உன்னை என்றும் உணர்வம். பிண்டத்தில் உன் உள்ளம், யாமிருக்கும் பெருங்கோயில். தெரி கிறதா! அண்டத்தில், வளரும் எம் சந்நிதிக்கு வா!

இங்ஙனம் அதிர வுரைத்தபின் மாபெரும் ஆவேசம், மலையேறியது. ஆவேசகர் அறி விப்பை அறிந்ததும், ஓட்டம் பெரு நடையாய்ப் பழநித்தேவர், மலை நோக்கி ஓடுகிறார். படியேறுகிறார். என்ன வேகம்! சந்நிதியை அடைகிறார்.

பிரபோ! தண்மை அருளால், கூடையை முடிமேல் தாங்கினை! தடித்த ப‍த்தியுள்ள என்தடியடியும் தாங்கினை! ஒரு குறையும் நேராதபடி,அடியவர் நிறைவுபெற அருளுகின்றாய். அருளுடைய உம்மை இனி அரைக்கணமும் பிரிந்திரேன்! வேதாகமங் களால் விளம்ப முடியாதது; யோக விவேகிகள் அறிவில் ஒளிர்வது உமது திரு வடி. அதன் நிழலில் யான் இருக்க அருள் என்று வீரிட்டு கூவி வீழ்ந்தார்.

அவரது திருமேனியிலிருந்து வெளிப் பட்ட ஆன்மா, நட்சத்திர ஒளிபரப்பிப் பரமன் சந்நிதியிற் படர்ந்தது.

சபையிலிருந்து தொடர்ந்து வந்த அரசர் முதலிய அனைவரும், அது கண்டு,மெய்ம்மயிர் சிலிர்த்துக் கை குவித்து நின்றனர்.

அடிமுதல் உச்சி வரை பழநிமலைப் படிகளைச் சுத்தம் செய்தாள் பரதர் குலப் பாவை. மாக்கோலம் இட்டாள். காலை முதல் மாலைவரை அத்தொண்டு. அர்த்த யாம வழிபாட்டின் பின், பக்தர்கள் திருவடி பட்ட இடம் என்ற எண்ணத்தால், பிரகாரத் தில் உருண்டு புரண்டு வலம் வந்தாள்.

அதிகாரிகள் கனவில் பழநியாண்டவர் அருளியபடி, இருவேளைக்கும் கோயிலார் அவட்குப் பிரசாதம் கொடுக்கிறார்கள்.

பலகாலம் இங்ஙனம் பணிசெய்த பக்தைக்கு, தொல்லை யிரும் பிறவிச் சூழும் தளைநீக்கி, அல்லல் அறுத்து ஆநந்தம் உத வினர் பழநி யாண்டவர்.

ஆளாயெனை அருளாயெனும் அரிவைக்கொரு
நீளார்சல சரம்ஈதர நிசியார்கர வினனாத் [கூடை
தாளானுறு பழநிப்பெயர் தடியாலடி கொடுமே
வாளாளனை உயர்வாக்கிய மணியேயெனை மறவேல்

[சலசரம்—மீன். ஈதர—கொடுக்க. நிசி—இரவில். கரவினனா—கள்வனாக. தாளான்—காவல் முயற்சி யன். வாளாளனை—வீர வாள் உடைய பழநித்தேவனை.]

இவ்வரலாற்றை, இப்படி பாடித் தமிழகம் இன்றும் பயனடைகின்றது. பழநியில் தொண்டு செய்து பேறு பெற்ற பக்தர் வரலாறுகள், இலைமறை காய்போல் இப்படி ஏராளமாக இருக்கின்றன.

# தமிழ் இலக்கியத்தில் முருகன்

[ திரு. G கலியாணம், M A., ஆசிரியர், திருக்கோயில், அறநிலையத்துறை, சென்னை ]

மூவிரு முகங்கள் போற்றி
முகம்பொழிகருணை போற்றி
ஏவருந்துதிக்க நின்ற ஈராறுதோள்
போற்றி காஞ்சி
மாவடிவைகும் செவ்வேள் மலரடி
போற்றி அன்னன்
சேவலும் மயிலும் போற்றி
திருக்கைவேல் போற்றி போற்றி

தமிழில் மிகப்பழைய நூல் தொல்காப்பியம். அதன் ஆசிரியர் நால்வகை நிலங்களுக்குத் தெய்வம் கூறவந்தவிடத்து "சேயோன் மேய மைவரை யுலகமும்" என்கிறார். மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சி நிலம். அதற்குக் கடவுள் சேயோனாகிய முருகன் என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார். உரை கூறவந்த நச்சினார்க்கினியர் "செங்கேழ் முருகன் காதலித்தவான் தங்கிய வரை சூழ் உலகம்" என்று விளக்குகிறார்.

சங்க இலக்கியங்களை ஆன்றோர் பத்துப் பாட்டு, எட்டுத்தொகை என்ற இரண்டு பெரும் பிரிவுகளாக வகுத்திருக்கின்றனர். எட்டுத் தொகையுள் ஐந்தாவதாக உள்ளது "ஓங்குபரிபாடல்" என்று பாராட்டப்பெற்றிருக்கிறது. பரிபாடல் சங்க இலக்கியத்திலேயே மிகப் பழமையானதென்று ஆராய்ச்சியறிஞர் கருதுகின்றனர். அந்த தொகை நூலில் எழுபது பாடல்கள் இருந்தன. முருகப்பெருமானைக் குறித்தவை 31 பாடல்கள் என்பதை "திருமாற்கிருநான்கு செவ்வேட்கு முப்பத்தொருபாட்டு" என்ற செய்யுட் பகுதியால் அறிகிறோம். நம்முடைய தவக்குறைவால் அந்த எழுபது பாடல்களும் கிடைக்கவில்லை. இருபத்திரண்டு பாடல்களே இப்போதுள்ளன. அவற்றில் எட்டுப் பாடல்கள் முருகப்பெருமானைப் பற்றியவை. ஆசிரியர் நல்லந்துவனார், கடுவன் இளவெயினனார், குன்றம்பூதனார், நப்பண்ணனார், கேசவனார், நல்லச்சுதனார், நல்லழிசியார் என்ற ஏழு புலவர்களும் அந்த எட்டுப்பாடல்களையும் பாடியிருக்கின்றனர். குன்றம்பூதனார் இரண்டு பாடல்களும் மற்ற அறுவரும் ஒவ்வொரு பாடலும் பாடியுள்ளனர். திருக்குறளுக்குச் சிறந்த உரைவரைந்த பரிமேலழகர் பரிபாடலுக்கும் உரையியற்றியிருக்கின்றார். பாடல்களுக்கு இசையும் அமைக்கப்பெற்றிருக்கிறது. கடுவன் இளஎயினனார் என்பவர் வேடர் குலத்தினர். திருமாலுக்கு இரண்டு பாடல்களும், முருகனுக்கு ஒரு பாடலும் கூறியிருக்கின்றமையின் அவருடைய சமய சமரசப்பண்பு புலனாகிறது. முருகன் திரு அவதாரம், தேவர்களைவென்று கோழி, மயில், ஆட்டுக்கடா இவைகளைப் பெற்றது, வேலால் கிரௌஞ்சத்தை துளைத்தது, கடலில் சூர்மாவைத்தடிந்தது இவைகளைக் கூறுகிறார். "தீய நெஞ்சத்துச் சினமுடைய வரும், அறத்தின் கண் சேராத புகழில்லாதவரும், கூடாவொழுக்கத்தால் தவநெறி பிறழ்ந்தவரும், இப் பிறப்பினுகர்ச்சியேயுள்ளது மறுபிறப்பில்லையென்ற மடமையோரும் நின் (முருகன்) திருவடிநிழல் எய்தார்; மற்றையோர் சேர்வர் ஆகையால்,

யா அமி ரப்பவை
பொருளும் பொன்னும் போகமு மல்ல நின்பால்
அருளும் அன்பும் அறனு மூன்றும்
உருளிணர் கடம்பினொலி தாரோயே

என்று பாடலை முடிக்கின்றார். "கடம்பமலர் மாலை யணிந்த கந்தனே! உன்னிடம் நாங்கள் கேட்பது பொருள் அன்று; பொன் அன்று; இவ்விரண்டாலும் அடையும் இன்பமுமன்று. நின்னுடைய அருள் வேண்டும்; ஆருயிர்களிடத்து அன்புசெய்யவேண்டும். அவ்விரண்டாலும் அறநெறி வழாதிருக்கவேண்டும். இம் மூன்றையும் வழங்குவாயாக" என்பது பாட்டின் பொருள். அருளாகிய பொருள், அன்பாகிய பொன், அறமாகிய போகம் இவைவேண்டும் என்கிறார். இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன், வேடர்குலத்தினரான இப்புலவர் பெருமான் இந்த சிறந்த வேண்டுகோளை முருகப் பெருமானிடம் செய்தார் என்பதை நோக்க நமக்கு உள்ளம் பூரிக்கிறது.

ஆசிரியர் நல்லந்துவனார் பாடலில் திரிமூர்த்திகளும் தேவர்களும் முருகனைத் தரிசிப்

பதற்காக வந்திருந்ததால் திருப்பரங்குன்றமும் சுனையும், இமயமலையையும் அதிலுள்ள சரவணப்பொய்கையும் ஒக்கும் என்றும், மக்கள் வந்து வழிபாடுகள் செய்வதும், அக்குன்றின் வாழ்வையே தம் வாழ்வாகக் கருதுவதும், மழைவறந்த காலத்தும் அருவி நீர்வளமிக்கிருக்கும் என்பதும் முதலியனவும் காணலாம்.

**குன்றம்பூதனுர்** இரண்டு பரிபாடல்களைப் பாடியுள்ளார். முதற் பாடலில் "நான்மறை விரித்து நல்லிசை விளக்கும் வாய்மொழிப் புலவீர்! கேண்மின் சிறந்தது" என்று அழகாகக் கூறி, "அன்புடைய நாங்கள் உன் திருவடிக்கண் உறையும் செயல் வளர்ச்சியுற்றுப் பயன்தந்து சிறக்கவென்று நின்னைத் தலை வணங்கி வாழ்த்தி வேண்டுகின்றேம்; அருள் புரிவாயாக!" என்று முடிக்கிருர். மற்ற பாடலில் திருப்பரங்குன்றத்தில் சித்திர அம்பலம் இருந்ததென்றும், திருப்பரங்குன்றம் இமயமலையையும், முருகன் ஊர்தியாகிய யானையையும் ஒக்கும் என்றும் கூறியிருக்கின்ருர். குன்றத்தை அழகாகப் பாடினமையின் குன்றம்பூதனுர் என்ற பெயர் பெற்ருர்போலும். "வேல்முருகா! யாழோசை, இயற்கைப்பாட்டு, வேதவொலியுடன், மலர், தீபம், சந்தனம், அகிற்புகை முதலியவற்றை ஏற்றருளும் நின்திருவடியின் கண் யாமும் எம்சுற்றமொடு பிரியாதிருக்க அருள் புரிவாயாக!" என்று வேண்டுகிருர்.

**கேசவனுர்** என்பவர் வைணவப் பெயருடன் திகழ்கிருர். முருகனைப் புகழ்கிருர், திருப்பரங்குன்றத்தின் சுனை முதலியவற்றின் இயற்கை எழிலைக் கூறுவதுடன் முருகப் பெருமானை முன்னிலையாக்கித் துதிக்கிருர். அவரை அடுத்தடுத்து வழிபடுவதன் பயன் மேன்மேலும் அவரை வழிபடுதல் ஆகவேண்டும் என்ற அவருடைய வேண்டுகோளிலிருந்து முருகப்பெருமானிடம் அவர் கொண்டுள்ள ஒப்புயர்வற்ற பேரன்பைப் புலப்படுத்துகிறது.

**நல்லழிசியார்** பாடலில் திருப்பரங்குன்றில் முருகன் எழுந்தருளியுள்ள கடம்ப மரத்தை அன்பர் வழிபடுதல், குன்றத்தினடியில் இருப்போர் விண்ணுலகையும் விரும்பாமை, மதுரைவளம் முதலியற்றைக் கூறியிருக்கிருர். "பிறவித்துன்பம் நீங்கிய இன்பம் மலிந்த நாட்கள் பெறுகவென்று வேண்டி யாமும் எம் சுற்றமும் மக்களைப் பணியாமல் நின் புகழையே பாடித்தொழுகின்ரேம்" என்று பாட்டை முடிக்கின்ருர்.

**சிலப்பதிகாரத்தில்** இளங்கோவடிகள் குன்றக்குரவையில் வேடர்கள் விழாக் கொண்டாடுவதைக் கூறியிருக்கின்ருர். "சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும் ஏரகமும் நீங்கா இறைவன் கைவேல்" என்று புகழ்ந்திருக்கிருர். இவ்விழாவை வேலன் வெறியிட்டயர்தல் என்பர்.

**ஜீவகசிந்தாமணி** என்னும் நூலில் சமண முனிவராகிய திருத்தக்க தேவர் ஜீவனகதுவீரத்தை முருகப்பெருமான் கிரவுஞ்சமலையைத் துளைத்தமைக்கு உவமிக்கிருர். மேலும் "கொழுங்கயற்கண் வள்ளி நலன்நுகர்ந்தானென்றே நறுந்தார் முருகன்" என்று குலம் பற்றி எண்ணவேண்டாம் என்று அவரே மற்ருேரிடத்தில் கூறியிருக்கிருர்.

நக்சினுர்க்கினியர் உரைகளில் பல இடங்களில் முருகனை, **பிள்ளையார்** என்றே கூறியிருக்கிருர். அதனுல்தான் விநாயகருக்கு மூத்த பிள்ளையார் என்ற பெயர் ஏற்பட்டது போலும்.

**சம்பந்தர், அப்பர்** இவர்களுடைய தேவாரங்களில் பல இடங்களில் முருகனைப்பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. சம்பந்தர்-அறுமுக இறை, கந்தன், குமரன், குமரவேள் சாமி, சேந்தன், சேய், மயிலூர்தி, முருகன், என்ற பெயர்களால் குறிக்கிருர். சூரர் வதம், வள்ளி மணம், இமையோர் பொன்னுலகடைதல் இவைகளையும் கூறுகிருர். அப்பர் பெருமானுடைய பாடலான "நம் கடம்பனைப் பெற்றவள் பங்கினன்" என்று தொடங்கும் பாசுரத்தைத் தமிழ் நாட்டில் அறியாதார் யாரே?

**மணிவாசகப் பெருமான்** "நல்வேலன் தாதை" என்று சிவபெருமானை அழைக்கிருர்.

**சேந்தனுர்** அருளிய திருவிசைப்பா ஒன்பதாம் திருமுறையில் இடம்பெற்றிருக்கிறது. அதில் திருவிடைக்கழி என்னும் தலத்திலுள்ள முருகனைப்பாடியிருக்கிருர். "மலைமகள் மதலை மேலுலாந் தேவர்குல முழுதாளும் குமரவேள் வள்ளி தன் மணுளன்" என்றும், "மானமர் தடக்கை வள்ளல் தன்

பிள்ளை'' என்றும், ''வளையிளம்பிறைச் செஞ் சடை அரன்மதலைகார் நிறமால் திருமருகன்'' என்றும் அவர் முருகனைப் பலவாறு பரவு கின்றார்.

நப்பண்ணனார் தமது பாடலில் திருப்பரங் குன்றத்தில் நிகழும் வள்ளியம்மைத் திரு மணவிழாவையும், முருகனை வணங்க மது ரையிலிருந்து பலவகை ஊர்திகளில் மக்கள் பரங்குன்றிற்குத் திரளாக வரும் பான்மை யையும் இன்னும் பல அரிய செய்திகளைக் கூறியுள்ளார்.

நல்லச்சுதனார் பாடலில் திருமுருகன் சிறப்பு, பரங்குன்றத்தை வழிபடும் மக்கள் செயல்கள், ஆடும் மயிலின் காட்சி, நீர்விளை யாட்டு, மகளிராட்டம், இவைகளைக் கவின் பெறப்புனைந்து காட்டுகிறார். முருகப்பெரு மான் திருவடிக்கீழும், திருப்பரங்குன்றத் தின் கீழும் உறைதல் தமக்கு இயைய வேண் டும் என்கிறார். இவர் இப்படி முருகனை வேண்டுவது அவனிடத்துள்ள அன்பின் மிகு தியைக் காட்டுகிறது.

எட்டுத் தொகையில் ஒன்றான குறுந் தொகை என்னும் நூலுக்குக் கடவுள் வாழ்த் துப்பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார் என்பர். அந்தப் பாடல்,

தாமரை புரையும் காமர் சேவடிப்
பவளத் தன்ன மேனித் திகழொளிக்
குன்றி யேய்க்கும் உடுக்கைக் குன்றின்
நெஞ்சுபக எறிந்த அஞ்சுடர் நெடுவேல்
சேவலங் கொடியோன் காப்ப
ஏம வைகல் எய்தின்றால் உலகே

என்பது. முருகன் திருவடி, திருமேனி, ஆடை எல்லாம் சிவந்தது. அத்தகைய முரு கன் காக்க உலகம் இன்பம் அடைய வேண்டும் என்பது புலவர் விண்ணப்பம். உலகம் வாழவேண்டும் என்று விரும்பும் புல வரின் பரந்த நோக்கம் போற்றி மகிழ்வதற் குரியது. இந்த நூலில் அடுத்த பாட்டு திப் புத்தோளார் என்ற புலவர் பாடியது. ''இரத் தத்தால் போர்க்களம் சிவக்க அவுணர்களைக் கொன்ற சிவந்த அம்பையும், சிவந்த கொம் புடைய யானையையும், கழலுகின்ற தோள் வளையையும் உடைய முருகன் விரும்பி உறை யும் இந்தமலை'' என்று அவர் கூறுகிறார்.

புறநானூற்றிலும் ''மணிமயிலுயரிய மாறா வென்றிப் பிணிமுகவூர்தி யொண்செய்யோ னும்'' என்று கூறப்பட்டிருக்கிறது.

பத்துப்பாட்டில் கடவுள் வாழ்த்து போன்று முதலில் அமைந்திருப்பது திருமுரு காற்றுப்படை. இதையியற்றிய புலவர் பெருந் தகை மதுரை கணக்காயனார் மகனார் நக்கீரனார் என்பவர். தமிழ்ச் சங்கத்தில் புலவர் தலைவ ராக வீற்றிருந்ததோடு, நெற்றிக்கண் காட்டி னும் குற்றம் குற்றமே என்று அஞ்சா நெஞ் சத்தோடு இறைவனோடு வாதிட்டவீரர். அவ ருடைய காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண் டின் இடைப்பகுதி யென்பர். அவர் முருக னுக்கெனத்தனியே அமைத்த முதல் இலக்கிய நூல். அப்பெருமானுக்குரியதாக ஆறு திருப் பதிகளைச் சொல்கிறார். ஆறுபடை வீடு எனப் பிற்காலத்தில் அவை வழங்குவதாயிற்று. திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய் (திருச் செந்தூர்), திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோராடல், பழமுதிர்சோலை என்ற ஆறு தலங்களிலும் ஆறுமுகன் எழுந்தருளி யிருப்பதைப் பாராட்டிக் கூறுகிறார். இப் பாடல் 317 அடிகளையுடையது. வீடு பெறு வதற்குச் சமைந்த ஒருவனை வீடுபெற்றா னொருவன் முருகக்கடவுளிடத்தே ஆற்றுப் படுத்துவது திருமுருகாற்றுப்படை. ''உலகம் உவப்ப'' என்று தொடங்கும் இந்த பாட்டு பழந்தமிழனின் பரந்த உள்ளத்தைக் காட்டு கின்றது. இயற்கையில் இறைவனைக் காணும் தன்மையையும் விளக்குகிறது. முதற்பகுதி யில் திருப்பரங்குன்றத்தில் முருகன் அழகு, சூரரமகளிர், பேய் மகளிர் இவர்களைப்பற்றி யும், இரண்டாவது திருச்சீரலைவாய்ப் பகுதியில் முருகன் வாகனம், அவனுடைய ஆறு திரு முகங்கள், பன்னிரண்டு திருக்கரங்கள் இவை களின் செயல்கள் முதலியவற்றையும், மூன் றாவது திருவாவினன்குடிப் பகுதியில் முனி வர்கள் இயல்பு, திரிமூர்த்திகள் தேவர்கள் இவர்கள் வருகை, கந்தர்வக்காட்சி முதலிய வற்றையும், நான்காவது திருவேரகப் பகுதியில் ஆறெழுத்து ஓதும் அந்தணர் இயல்பு, ஈரம் புலராத ஆடை உலரும்படி அணிந்து கொண்டு வழிபடுதல் முதலியனவும், குன்று தோருடலான ஐந்தாம் பகுதியில் குன்றக் குறவர் குரவைக்கூத்து, முருகன் தேவமகளி ரோடு ஆடல் முதலியவற்றையும், பழமுதிர் சோலை என்ற ஆறும்பகுதியில் முருகன் எழுந்

திருளும் பல இடங்களையும், வழிபடுமுறைகளையும், அவன் அருள் செய்யும் விதத்தையும் விதந்தோதியுள்ளார். முருகனுடைய அழியாத அழகு, மாருத இளமை, நீங்காத நறுமணம், தெவிட்டாத இனிமை, பரிபூரண கடவுள் தன்மை இவைகளைக்குறிப்பிடுகிருர். முருகப்பெருமான், அவன் திருத்தலங்கள் இவைகளைப்பற்றித் தனி நூலே ஆக்கிய நக்கீரரை முருகனின் முதல் திருத்தொண்டர் என்று கூறலாம். திருமுருகாற்றுப்படையை பக்தர்கள் பாராயண நூலாகக் கொண்டிருப்பது யாவரும் அறிந்ததே.

மேற்சொன்ன சங்க இலக்கிய நூல்களினின்றும் நாம் தெரிந்துகொள்வதைச் சுருக்கமாகக் கூறலாம். ஆல்கெழு கடவுள் செல்வன், ஆல்கெழு செல்வக் குமரன், மால் மருகன், கொற்றவை சிறுவன், பழயோள் குமரன், மலைமகள் மகன் என்றெல்லாம் முருகன் அழைக்கப்படுகின்ருன். அவன் திருமேனி சிவந்ததென்பதை 'சேயோன்' என்று தொல்காப்பியத்திலும், 'காஅய்கடவுள்சேய்' என்று கலித்தொகையிலும்' 'செவ்வேள்', 'உடையும் ஒலியலும் செய்யை','ஞாயிற்றேர் நிறத்தகை நளினத்துப் பிறவியை' என்று பரிபாடலிலும், 'தாமரைபுரையும் காமர் சேவடிப் பவளத்தன்னமேனி' என்று குறுந்தொகையிலும், 'செய்யன், சிவந்த ஆடையன்', 'இளஞாயிறு' என்று திருமுருகாற்றுப் படையிலும் கூறப்பட்டிருக்கின்றது.

முருகப்பெருமானுக்கு ஆறு திருமுகங்களும் பன்னிரண்டு திருக்கரங்களும் உண்டென்பதை "மூவிருகயந்தலை முந்நான்கு முழவுத்தோள்", "அறுமுகத் தாறிருதோள்" என்று கூறுமாற்ருல் உணரலாம்.

செவ்வேளின் கொடி, ஊர்தி, படை முதலியவைகளான சேவல், மயில், ஆட்டுக் கடா, வேல் முதலியவற்றைப்பற்றியும் பல இடங்களில் கூறப்பெற்றிருக்கிறது. சேவலங் கொடியோன் என்று குறுந்தொகையிலும், 'மனிநிறமஞ்ஞையோங்கிய புட்கொடிப்பிணி முகமூர்ந்த வெல்போரிறைவ", "மாதபுத்த வேலோய்", "குன்றமுடைத்த வொளிர்வேலோய்" என்று பரிபாடலிலும், "மணிமயிலுயரிய மாருவென்றிப் பிணிமுகவூர்தி யொண்செய்யோன்" என்று புறநானூற்றிலும் கூறப்பட்டிருக்கிறது.

திருமூலர் திருமந்திரத்தில்,

உண்டோர் அதோமுகம் உத்தமம் ஆனது
கண்ட விச்சத்தி சதாசிவ நாயகி
கொண்டமுகம் ஐந்து கூறும் கரங்களும்
ஒன்றிரண்டாகவே மூன்று நாலானதே

என்றும்,

எந்தை பிரானுக்கு இருமூன்று வட்டமாய்
தந்தைதன் முன்னே சண்முகம் தோன்றலால்
கந்தன் சுவாமி கலந்தங் கிருத்தலால்
மைந்தன் இவன் என மாட்டிக்கொளீரே

என்றும் திருவாய் மலர்ந்திருக்கிருர். சிவபெருமானிடம் அருவமாய் இருந்த அதோமுகம் வெளிபட்டுநிற்கும் மூர்த்தமே முருகன் என்று விளக்குகிருர் இன்னும் முருகனே எல்லாச் சமயங்களுக்கும் குரு என்பதைக் கீழ்க்கண்ட திருமந்திரப் பாடலால் குறிக்கிருர்:—

ஆறுமுகத்தில் அதிபதி நான் என்றும்
கூறு சமயக் குருபரன் நான் என்றும்
தேறினர் தெற்கு திருவம் பலத்துளே
வேறின்றி அண்ணல் விளங்கி நின்ருனே.

இப்பாடல், "முருகன் குமரன் முனி நம் குரு என்று அருள் கொண்டறியார் அறியுந் தரமோ" என்ற கந்தர் அனுபூதிப் பாடற் பகுதியை நினைவூட்டுகிறது.

சேக்கிழார் பெரிய புராணத்தில் கண்ணப்ப நாயனுர் வரலாற்றில் வேடர்கள் வேலனுக்கு விழாக் கொண்டாடுவதைக் கூறியிருக்கிருர். "முருகமர் அலங்கல் செவ்வேள் முருகவேள் முன்றிற் சென்று பரவுதல் செய்து நாளும் பராய்க்கடன் நெறியில் நிற்பார்; வாரணச் சேவலோடும் வரிமயில் குலங்கள் விட்டார்" என்றும் சொல்லியிருக்கிருர். சிறுத்தொண்டருக்கு அருள்புரியவந்த சிவபெருமான் "மலை பயந்ததையலோடும் சரவணத்துத் தனயரோடும் தாம் அணைவார்" என்று முருகப்பெருமானுடன் தோன்றினுர் என்று கூறியுள்ளார், மற்ற நாயன்மார்களுக்கு அருள்புரிய வரும்போது உமாதேவியுடன் காட்சியளித்தார் என்றே காண்கிருேம். சிறுத்தொண்டர் மகனுர் சீராள தேவர்க்கும் அருள்புரியவே குமரவேலுடன் சிவனுர் தோன்றினுர் என்று கூறியிருக்கும் சேக்கிழார் தெய்வப்புலமைநயம் கண்டு இன்புறற்பாலது.

கச்சியப்ப சிவாச்சாரியார் காஞ்சிபுரத்தி லுள்ள குமரகோட்டத்தின் அருச்சகர். பத்தாயிரம் பாடல்களுக்குமேலுள்ள கந்தபுராணம் என்னும் நூலை எழுதினர். "மூவிரு முகங்கள் போற்றி", "ஆறிருதடந்தோள் வாழ்க" என்று தொடங்கும் பாடல்கள் நாம் எங்கும் கேட்கின்றவை. மெய்யன்பர்கள் காதில் அவை என்றும் ஒலித்துக்கொண்டிருக்கும். "அருவமும் உருவமாகி" என்று தொடங்கும் முருகன் திருவவதாரப்பாடலின் தத்துவம் நாம் அறிந்ததொன்றே. அவர்,

ஆயிரம் கோடி காமர் அழகெலாம்
திரண்டொன்ருகி
மேயின எனினும் செவ்வேள்
விமலமாம் சரணந்தன்னில்
தூய நல் எழிலுக்காற்ருது என்றிடின்
இணையதொல்லோன்
மாயிரு வடிவுக்கெல்லாம் உவமையார்
வகுக்கவல்லார்

என்று மூருகக் கடவுளின் பேரழகைக் கூறுகிருர். முருகன் திருவிளையாடல்களை விளக்க எழுந்த பெரிய நூல் கந்தபுராணம்.

அருணகிரிநாதர் திருவண்ணுமலையில் பிறந்து இளமையில் சிற்றின்பத்தில் எளியராய் அதனுல் உடற்பிணி, மனவேதனை முதலியவையடைந்து பின்னர் முருகப்பெருமான் அருளைப்பெற்ருர். அவர் பாடியருளியவை திருப்புகழ், கந்தரந்தாதி, கந்தரலங்காரம், கந்தரனுபூதி, திருவகுப்பு முதலியன. தமிழ் நாட்டிலுள்ள பல முருகன் திருத்தலங்களுக்குச்சென்று பல ஆயிரக்கணக்கான திருப்புகழ்ப் பாடல்களைப் பாடினர். நமக்கு இப்போது கிடைத்திருப்பவை சுமார் 1360 பாடல்களே. 'வாக்கிற்கு அருணகிரி" என்று கூறப்படும். கந்தர் அனுபூதியை மக்கள் பாராயண நூலாகக் கொண்டிருக்கின்றனர். முருகன் புகழைப்பாடிய பழைய அரிய நூல்கள் அவர் அருளியனவே. "ஐயா அருணகிரியப்பா உனைப்போல மெய்யாக ஓர் சொல் விளம்பினரார்" என்றும், "கந்தர் அனுபூதி பெற்றுக் கந்தரனுபூதி சொற்ற எந்தை அருள் நாடி யிருக்கு நாள் எந்நாளோ" என்றும் தாயுமான அடிகளார் போற்றிப் புகழ்ந்திருக்கிருர்.

சிற்றம்பல நாடிகள் என்பவர் சீகாழியிலே ஏறக்குறைய நானூறு ஆண்டுகட்கு முன்னே தோன்றியவர். 'சாத்திரக்கொத்து' என்ற சைவசித்தாந்த நூலையருளியவர். திருச்செந்தூர் முருகனிடம் பக்தி பூண்டவர். திருச்செந்தூர் அகவல் என்ற அரிய நூலைப் பாடியிருக்கின்றனர்.

குமரகுருபரர் ஸ்ரீவைகுண்டத்திலே முந்நூறு ஆண்டுகட்கு முன் அவதரித்தவர். ஐந்து வயதுவரை ஊமையாக இருந்தார். பெற்ருேர் திருச்செந்தூர் முருகனை வழிபட ஊமை நீங்கியது. கந்தர்கலிவெண்பா என்ற புகழ்மாலையை அப்பெருமான் மீது பாடியணிவித்தனர். வைத்தீசுவரன் கோயிலில் எழுந்தருளியிருக்கும் முருகன் பேரில் முத்துக்குமார சுவாமிபிள்ளைத்தமிழ் என்ற சிறந்த நூலைச் செய்திருக்கின்றனர்.

சம்பந்தசரணலயர் என்பார் தருமபுர ஆதீன அடியவர்களில் ஒருவர். மைசூருக்குச் சென்று அங்கிருந்த கர்த்தர் என்ற அரசனுடைய வேண்டுகோளுக்கிணங்கி, கந்தபுராணக் கடலைச் சுருக்கி, சுமார் ஆயிரம் பாடல்கள் கொண்ட கந்தபுராணச்சுருக்கம் என்ற அரிய நூலை இயற்றினர். "தங்கள் குருஸ்தானத்தில் பக்தகோடிகள் நாள்தோறும் என்ன செய்கிருர்கள்" என்று அம்மன்னன் ஒரு சமயம் கேட்டான். சம்பந்த சரணலயர்,

ஆய்வார் பதிபசு பாசத்தினுண்மையை
ஆய்ந்தறிந்து
காய்வார் பிரபஞ்ச வாழ்க்கையெல்லாம்
கல்விகேள்வி அல்லல்
ஓய்வார் சிவானந்தவாரியுள்ளே
ஒன்றிரண்டு மறத்
தோய்வார் கமலையுள் ஞானப்ரகாசன்
மெய்த்தொண்டர்களே

என்ற சிறந்த கருத்துக்கள் பொதிந்த பாடலைச் சொன்னுர். அதனுல் அவருடைய பெரும்புலமை தெரிகிறது. கந்தசஷ்டியின் போது கச்சியப்பசிவாசாரியரின் கந்தபுராணத்தைப் படித்து முடிக்க இயலாத முருகன் தொண்டர்கள் கந்த புராணச் சுருக்கத்தைப் பாடி விரதம் அனுஷ்டிப்பது நாம் எல்லாம் அறிந்ததே.

சிவப்பிரகாச சுவாமிகள் தம் குருவாகிய வெள்ளியம்பலத்தம்பிரானுக்கு அவர் விருப்பத்திற்கிணங்க திருச்செந்தூர்ப் புலவன் அகந்தையை யடக்க "திருச்செந்தில் நிரோட்

டகயமக அந்தாதி'' பாடி வெற்றி பெற்று தமது குருகாணிக்கையைச் செலுத்தினர். நிரோட்டகம் பாடும்போது உதடுகள் சேரா மல் இருக்கும்படி பாடப்பெறுவது.

**சிதம்பரசுவாமிகள்** பாண்டி நாட்டினர். மீனுட்சியம்மைபேரில் பேரன்பு பூண்ட பெரும்புலவர். பேரூர் சாந்தலிங்க அடிகளா ரின் நூல்களுக்கு உரைவகுத்தவர். குமார தேவர் என்ற பெருந்துறவியின் உபதேசம் பெற்றவர். திருப்போரூர் முருகன் ஆல யத்தை முதலில் எடுப்பித்த பெரியார். அந்த முருகன்பேரில் பலவகையான பாடல்களை அருளியுள்ளார். ''திருப்போரூர்ச் சந்நிதி முறை'' என்ற அந்த நூலிலுள்ள பாடல்கள் பலவற்றைப் பக்தர்கள் பாராயணம் செய்து வருகின்றனர்.

**பகழிக்கூத்தர்** என்பவர் இராமநாதபுரத் திற்கு அருகிலுள்ள சன்னுசிக் கிராமத்தைச் சேர்ந்த வைணவ அந்தணர். பொறுக்கமுடி யாத வயிற்று வலியால் பெருந்துயர் உழந் தார். முருகப்பெருமான் அவர் கனவில் தோன்றித் தம்மைப் பாடும்படி பணித்தார். அவ்வாறே **திருச்செந்தூர் முருகன் பிள்ளைத் தமிழ்** என்ற சிறந்த நூலைப்பாடி முருகன் திருமுன் படைத்தார். பிள்ளைக் கவிகளில் சிறந்ததாக எல்லோராலும் போற்றப்படுவது அவருடைய நூல். பாடல்கள் மனத்தை உருக்குவன. ''பேராதரிக்கும் அடியவர்'' என்று தொடங்கும் பாடலை அறியாதவர் இருந்தால் அவர் அறியாதாரே. முத்தப் பரு வத்தில் ''கத்துந்தரங்மெடுத்தெறிய'' என்ற பாடலில் ''எல்லாமுத்துக்களுக்கும் விலை யுண்டு; உன்கனிவாய் முத்தந்தனக்கு விலை யில்லை முருகா முத்தம் தருகவே; முத்தம் சொரியும் கடல் அலைவாய் முதல்வா முத்தந் தருகவே'' என்ற திருவாக்கு நம்முடைய உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் தன்மை யது.

**கச்சியப்பமுனிவர்** திருத்தணிகை பிள்ளைத்தமிழ், திருத்தணிகைப்புராணம், திருத்தணிகை ஆற்றுப்படை என்ற நூல் களை யியற்றினர்.

**சுவாமிநாததேசிகர்** என்பார் **திருச்செந்திற் கலம்பகம்** என்ற நூலைப்பாடினர்.

**தண்டபாணிசுவாமிகள்** திருநெல்வேலியில் தோன்றியவர். முருகன் அருள் கிடைக்க வில்லை யென்று முருகன் எழுந்தருளிய திருமலை என்ற குன்றின்மேல் ஏறி உடலை உருட்டிச் சாகத்துணிந்தார். ஆனுல் முருகன் அவரை எவ்விதமான இடையூறுமின்றிக் காத்தார். திருப்புகழ்ச் சுவாமிகள், முருக தாசசுவாமிகள், வண்ணச்சரபம் என்ற பெயர்களால் அவரை மக்கள் அழைத்தனர். **பழநித் திரு ஆயிரம்** என்ற நூல் அவர் குமரக் கடவுளின்பேரில் பாடிய நூல்தொகை.

**இராமலிங்கஅடிகள்**—வடலூர் அருட்பிர காச வள்ளலார் என்றும் அழைக்கப்படும் இந்தமகான் இளமையிலே முருக பக்தியில் திளைத்தவர். திருத்தணிகை முருகன் பேரி லும், சென்னை கந்தகோட்டக்குமரன் மேலும் இவர் சூட்டிய பாமாலைகள் நாடறிந்தது. ''ஒருமையுடன் நினது திருமலரடி நினைக் கின்ற உத்தமர் தம் உறவு வேண்டும்'' என்று தொடங்கும் கந்தகோட்டத் திருப்புகழ் மக்கள் காதில் நீங்காமல் ஒலித்துக்கொண்டே யிருக்கிறது.

**பாம்பன் சுவாமிகள்**-குமர குருதாசசுவாமி கள் என்றழைக்கப்படும் இந்த ஞானி இரா மேசுவரம் தீவிலுள்ள பாம்பனில் அவதரித் தவர். முருகப்பெருமானைத் தம் வழிபடு கடவுளாகக் கொண்டவர். இவர் அருளிய சாத்திர தோத்திரங்களின் மொத்தப் பாடல்கள் 6666. ஆறு என்ற எண்ணில் அவர் கொண்ட மோகமே முருகப்பெருமா னிடம் அவர் அளவிறந்த பக்தியுடையவர் என்பதைப் புலப்படுத்துகிறது. சண்முக கவசம், குமரவேள் பதிற்றுப்பத்தந்தாதி, பஞ்சாமிர்தவண்ணம், குமாரசுவாமியம், சேந்தன் செந்தமிழ் முதலியன இவர் பாடி யருளிய நூல்கள்.

திருக்கோவலூர் ஆதீனத்தில் அருளாட்சி செய்திருந்த ஞானியார்சுவாமிகளில் ஒருவர் 'முருகர் அந்தாதி' என்ற நூலைப் பாடியிருக் கின்றார். அதில் ஒருபாடல் பின்வருமாறு:-

வேலா சரணம்
சரணமென்மேல் வெகுளாமலினி
மேலா யினும் கடைக்கண்
பார் பருப்பதவேந்தன்மகன்
பாலா குறுமுனியார்க்கும்
திருப்புகழ்ப்பண் ணவர்க்கும்
ஆலால முண்டவர்க்கும்
உபதேசித்த ஆண்டவனே.

அருந்தமிழ் மூதாட்டியான ஒளவைப் பிராட்டியை முருகப்பெருமான் ஆட்கொண்ட கதையை நாம் அறிவோம். மாடு மேய்க்கும் சிறுவனுக மரத்தின்மேல் இருந்து 'சுட்டபழம் வேண்டுமா சுடாதபழம் வேண்டுமா' என்று கேட்டு ஒளவையைத் திகைக்க வைத்துப் பின்னர் பொருள்தெரிய வைத்தான் குமரக்கடவுள். அவ்வம்மையாரைக் கொண்டே அரியது, நெடியது, கொடியது, இனியது எவை என்பதைப் பாடக்கேட்டு மறைந்தான் என்றும் நாம் அறிவோம்.

பொய்யா மொழிப்புலவர் என்பவர் சிவ பெருமானையன்றி மற்றத் தெய்வங்களைப் பாடாத உறுதிபூண்டவர். அறுமுகன் அவர் கனவில் தோன்றித் தன்னைப் பாடும்படி கேட்டார். "கோழியையும் பாடி குஞ்சையும் பாடுவதில்லை", "பெட்டையைப்பாடி முட்டையையும் பாடமாட்டேன்" என்று புலவர் கூறிவிட்டார். புலவர் காட்டுவழியாகப் போகும்போது முருகன் வேடனுய்த் தோன்றினுர். புலவர் அவரைக்கண்டு அஞ்சி "நான் ஒரு புலவன்" என்ருர். "அப்படியானல் என்மேல் கவிபாடு" என்ருர் வேடப் பெருமான். "நும்பெயர் யாதோ" என்று வினவினுர் புலவர். "என்பெயர் முட்டை" என்று பதில் வந்தது. 'மின்போலும் மான வேல் முட்டைக்கு மாருய தெவ்வர்போம் கானவேல் முட்டைக்கு (முள்தைக்கு)ம் காடு' என்று பாடினுர். பாட்டில் உள்ள பொருள் குற்றம் ஒன்றை எடுத்துக்காட்டி தாமும் ஒரு பாடலைப்பாடிமறைந்துசென்ருர் குமரர்.

மார்க்கசகாயதேவர் என்பாரின் திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழ், அந்தகக் கவி வீரராகவ முதலியார் இயற்றிய சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ், மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்களின் திருவிடைக்கழி முருகன் பிள்ளைத்தமிழ், கவிராஜ பண்டாரத்தையா இயற்றிய திருமலை முருகன் பிள்ளைத்தமிழ், இலஞ்சி முருகன் பிள்ளைத் தமிழ், விஜயகிரிசின்னுவையன் பாடிய பழநிப் பிள்ளைத்தமிழ், மாம்பழக்கனிச்சிங்கநாவலர் யாத்த பழனுபுரிப் பாடல்கள், தேவராய சுவாமிகள் அருளிய கந்தர் சஷ்டி கவசம் முதலிய பல நூல்கள் முருகப்பெருமானைப்பற்றி எழுந்தவை.

மறைமலையடிகளார் திருவொற்றியூர் முருகர் மும்மணிக்கோவை என்ற நூலைப் பாடியிருக்கின்றனர். திரு. வி. கலியாண சுந்தர முதலியார் "முருகன் அல்லது அழகு" என்ற ஆராய்ச்சி நூலையும், "முருகன் அருள் வேட்டல்" என்ற தோத்திரப் பாடல்களையும் இயற்றியுள்ளார். பாரதியார் வேலன் பேரில் பல பாடல்களைப் பாடியிருக்கின்றனர். இன்னும் அநேக தனிப்பாடல்களும், கீர்த்தனைகளும், நூல்களும் உள்ளன. விரிவஞ்சிவிடுக்கின்றனம். நகைச்சுவையும் தத்துவ உண்மையுமுள்ள ஒரு பாடலைக் காண்போம்.

வெங்காயம் சுக்கானுல் வெந்தயத்தால் ஆவ தென்ன
இங்கார் சுமந்திருப்பார் இச்சரக்கை—மங்காத
சீரகத்தைத் தந்தீரேல் வேண்டேன் பெருங்காயம்
ஏரகத்துச் செட்டியாரே.

சுவாமிமலையில் எழுந்தருளியுள்ள முருகனை ஒரு வணிகராகப் பாவித்துப் பாடும் இப் பாட்டை நினைந்து மகிழ்ந்து இன்புறற் பாலது.

தலைச்சங்கத்தில் 'குன்றெறிந்த குமரவேள்' இருந்தார் என இறையனுர் அகப் பொருளுரை கூறுகிறது. மிகத்தொன்மை யான அக்காலத்திருந்து இக்காலம் வரையில் வழிபடப்பட்டுவரும் தெய்வம் முருகப்பெருமான். அவனே கலியுகவரதன். என்றும் மாரு இளமைக்கோலப்பிரான். முன்னைப் பழமைக்கும் பழயவன்; பின்னைப்புதுமைக் கும் புதியவன். சங்கரனே சண்முகம். ஐம் முகச்சிவனுக்கும் அறுமுகப்பெருமானுக்கும் பேதமில்லை. அவன் திருவடிகளை வாழ்த்தி வணங்கி, வழிபடுவோமாக.

ஆறிரு தடந்தோள் வாழ்க
அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க
குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறியமஞ்ஞை வாழ்க யானைதன்
அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க
வாழ்க சீர்அடியார் எல்லாம்.

# — சங்க நூல் கூறும் பழனி —

திருப்புகழைப் பாராயணம் செய்கிறவர்கள் யாவருக்கும் "நாதவிந்து கலாதீ நமோநம" என்ற திருப்புகழ் தெரியாமல் இருக்க நியாயம் இல்லை. திருப்புகழ்ப் பஜனை செய்யும் இடங்களில் தீபாராதனை நடைபெறுவதற்கு முன் இந்தப் பாட்டைப் பாடத் தொடங்கி, கற்பூர தீபம் காட்டும் சமயத்தில்,

"தீப மங்கள சோதீ நமோநம
தூய அம்பல லீலா நமோநம
தேவ குஞ்சரி பாகா நமோநம
—அருள்தாராய்"

என்று பாடுவது வழக்கமாக இருக்கிறது.

அந்தத் திருப்புகழ் திருவாவினன்குடியைப்பற்றியது.

"ஆதியந்த உலா ஆசு பாடிய
சேரர் கொங்குவை காவூர்ந னுடதில்
ஆவினன்குடி வாழ்வான தேவர்கள்
—பெருமாளே"

என்று அந்தப் பாடல் முடிகிறது. அப்பகுதியில் ஆவினன்குடி என்பது சேர அரசர் ஆட்சிக்கு உட்பட்ட கொங்கு மண்டலத்தில் வைகாவூர் நாட்டில் இருப்பது என்ற செய்தி தெரிய வருகிறது.

திரு. கி. வா. ஜகந்நாதன், M A.
ஆசிரியர் 'கலைமகள்' சென்னை

வைகாவூர் நாட்டின் தலைநகரமே ஆவினன்குடிதான். இப்போது ஊரும் மலையும் பழனி யென்னும் பெயரால் வழங்கப் பெறுகிறது. அடிவாரத்தில் உள்ள கோயிலை மாத்திரம் திருவாவினன்குடி என்று வழங்குகிறார்கள். சிலர் அடிவாரத்தில் உள்ள கோயிலே பழையதென்றும் மலையின்மேல் உள்ளது அத்தனை பழையதன்றென்றும் கூறுவதுண்டு.

மலையின்மேல் திருத்தலம் உள்ள பல இடங்களில் அடிவாரத்திலும் திருக்கோயில் இருப்பது மரபுதான். இரண்டு கோயில்களையும் ஒன்றாகவே பாவித்து வழிபடுவார்கள். திருக்கழுக்குன்றத்தில் மலைமேலும் கோயில் உண்டு; கீழும் ஆலயம் உண்டு, திருச்செங்கோட்டிலும் இந்த அமைப்பைக் காணலாம். அப்படியே மலையின்மேல் ஏறி வழிபட முடியாதவர்களுக்கு எளிதில் வணங்குவதற்குரிய வகையில் பழனியில் அடிவாரக்கோயிலாகிய திருவாவினன்குடி விளங்குகிறது.

பழைய சங்க இலக்கியங்களில் ஆவினன்குடி என்ற பெயர் வருகிறது. நக்கீரர் பாடிய திருமுருகாற்றுப்படையில் முருகன் எழுந்தருளியிருக்கும் படைவீடுகள் ஆறைச் சொல்கிறார். படைகள் தங்கும் இடத்திற்குப் படைவீடு என்று பெயர், முருகன் தன் பரிவாரங்களுடன் தங்கிய இடங்களாதலின் படைவீடு என்ற பெயர் வந்திருக்கவேண்டும். இந்த ஆறு தலங்களையும் படை வீடுகள் என்று நக்கீரர்குறிக்கவில்லை. பிற்காலத்தில் அப் பெயர் வழக்கத்திற்கு வந்திருக்கவேண்டும். ஆறு என்ற வரையறை திருமுருகாற்றுப் படையிலிருந்துதான் தொடங்கியதென்று தெரிகிறது.

நக்கீரர் கூறுவன திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை மலை என்பன. இந்த வரிசையில் ஆவினன்குடி மூன்றாவதாக வருகிறது. ஆவினன்குடியில் எழுந்தருளியிருக்கும் முருகனை இந்திரன் முதலிய தேவர்கள் வந்து தரிசிப்பதை அப்பகுதி சொல்கிறது.

ஆவினன்குடி என்னும் பெயருக்குரிய காரணத்தைப் பிற்காலத்துப் புராணம் ஒரு வகையில் சொல்கிறது. திருஆவினன்குடி என்பது முழுப்பெயர். திருமாலின் மனைவியாகிய திருவும், காமதேனுவாகிய ஆவும், கதிரவனாகிய இனனும் வழிபட்டுப் பேறு பெற்றமையின் இப்பெயர் வந்ததாகப் பழனித் தலபுராணம் கூறுகிறது. சங்ககால நூல்களில் புகுந்து ஆராய்ந்தால் அப்பெயருக்குரிய பழைய காரணம் ஒன்று புலனாகும்.

ஆவிநன்குடி என்பதே இதன் பழம் பெயர். ஆவியர் குலம் என்பது ஒரு சிற்றரசர்

மரபுக்குப் பெயர். அவர்கள் தம் தலைநகராகக் கொண்டு குடியிருந்தமையின் ஆவினன்குடி என்ற பெயர் வந்தது. அந்தக்குலத்தில் உதித்தவன் பேகன் என்னும் குறுநில மன்னன். அவன் எழுபெரு வள்ளல்களில் ஒருவன். மயிலுக்குப் போர்வை வழங்கினன் என்று அவனுடைய சிறப்பை இலக்கியங்கள் கூறும். அவனை வையாவிக்கோப்பெரும் பேகன் என்று குலப்பெயரோடு சார்த்திச் சொல்வதும் உண்டு.

ஆவிவைகும் இடம் ஆதலின் வைகாவியூர் என்ற பெயரும் இதற்கு உண்டாயிற்று. அதுவே நாளடைவில் வைகாவூர் என்றும், வையாவிபுரி என்றும், வையாபுரி என்றும், வையாவி என்றும் மாறி வழங்கியது. வையாவிக்குத் தலைவன் பேகன் ஆதலின் வையாவிக் கோப் பெரும் பேகன் என்று அவனைப் புலவர் விளித்தனர்.

''அதுமனெம் பரிசில் ஆவியர் கோவே'' என்று அவனை ஆவியர் கோ என்றும் வழங்கினர். ஆவியர்குலத்தில் தோன்றிய தலைவன் என்பது அத்தொடரின் பொருள்.

ஆவினன்குடியாகிய வையாபுரியைத் தலைநகராக உடைய நாட்டுக்கு வையாபுரி நாடு, வைகாவூர் நாடு என்று பெயர் வழங்கியது. கொங்குநாட்டைச் சேர்ந்த பல சிறு நாடுகளில் வையாபுரிநாடும் ஒன்று. அதனை ஆவினன்குடிநாடு என்றும் சொல்வதுண்டு. ''வல்லமை செறிந்த திருவாவினன்குடி நாடு'' என்பது கொங்குமண்டல ஊர்த்தொகை என்னும் நூலில் வரும் பகுதி. கொங்குமண்டல சதகம், பேகன் இருந்து அரசாண்ட இடம் வையாபுரி என்று சொல்லும்.

" கையாரக் கான மயிலுக்
கிரங்கிக் கலிங்கம்அருள்
செய்ஆண் டகைகரு ணைக்குவைப்
பாகத் திகழ்தருமவ்
வையாவிக் கோப்பெரும்
பேகனெனும்பெரு வள்ளல்தங்கு
வையா புரியெனும் கோநக
ரும்கொங்கு மண்டலமே."

ஆவினன்குடியாகிய இவ்வூரில் உள்ள மலையின் பழம் பெயர் பொதினி என்பது. அதுவே மாறிப் பழனியாகி யிருக்கலாம். இறைவன் முருகனைக் கண்டு ''பழம் நீ'' என்று சொன்னமையால் இத்திருநாமம்வந்த தென்பது புராண வரலாறு. புலவர்கள் மன்னர்களைப் பாராட்டும்போது அவர்களுடைய ஊர், ஆறு, மலை என்பவற்றையும் சிறப்பித்துச் சொல்வார்கள். ஆவியர்குடியைப்பாடுகையில் அவர்களுக்குரிய பொதினி என்னும் மலையையும் பாடி யிருக்கிறார்கள்.

மாமூலனார் என்னும் புலவர் பொதினியைப் பாடியுள்ளார். அவர் பாடிய இரண்டிடங்கள் அகநானூறு என்னும் சங்க நூலில் உள்ளன.

" நெடு வேள் ஆவி
அறுகோட் டியானைப் பொதினி"

என்பது ஓரிடம். 'உயர்ந்தவேளாகிய ஆவியினது அற்ற கோட்டையுடைய யானைகளையுடைய பொதினியென்னும் மலை' என்பது இதன் பொருள்.

''முழவுறழ் திணிதோள் நெடுவேள் ஆவி
பொன்னுடை நெடுநகர்ப் பொதினி''

என்பது மற்றொன்று. இதிலும் பொதினியை ஆவிக்கு உரியதாகப் பாடுகிறார் புலவர்.

" பெருங்கல் நாடன் பேகன் "

என்ற தொடர் சங்க நூல்களில் வரும். ஆதலின் பேகனுக்கு உரியதாகப் பெரிய குன்றம் ஒன்று உண்டு என்பது தெரிய வருகிறது.

ஆவினன்குடியில் முருகன் திருக்கோயில் பழங்கால முதல் இருந்ததற்குத் திருமுருகாற்றுப்படை ஆதாரம். ஆனால் பொதினிமலையாகிய பழனியின்மேல் முருகன் திருக்கோயில் இருந்ததற்கு ஏதேனும் ஆதாரம் உண்டா? உண்டு.

பெருஞ்சித்திரனார் என்ற புலவர் பாடிய செய்யுட்கள் பல புறநானூற்றில் உள்ளன. அவற்றில் எழுபெரு வள்ளல்களையும்பற்றிக் குறிப்பிடும் பாடல் ஒன்று உண்டு. அந்த வள்ளல்களில் சிறப்புடைய மலைகளையுடையவர்களைக் குறிப்பிடுகையில் அந்த மலைகளையும் பாராட்டுகிறார். பாரியின் பறம்புமலையையும், ஓரியின் கொல்லிமலையையும், எழினியின் குதிரை மலையையும் சொல்லியுள்ளார். பேகனைப்பற்றிச் சொல்லுகையில் 'பெரிய குன்றத்தையுடைய நாடன்' என்கிறார். அந்த மலையின் பெயரைச் சொல்லவில்லை.

ஈர்ந்தண் சிலம்பின் இருள்தூங்கு நளிமுழை
அருந்திறற் கடவுள் காக்கும் உயர்சிமைப்
பெருங்கல் நாடன் பேகனும்''

என்பது அப்பகுதி. 'மிகக் குளிர்ந்த மலைப் பக்கத்தில் இருள் செறிந்த பெரிய குகைகளை உடையதும், பிறரால் வெல்லுவதற்கு அரிய திறலையுடைய தெய்வம் காக்கும் உயர்ந்த உச்சியை உடையதும் ஆகிய பெரிய மலையை உடைய நாட்டுக்கு உரியவனாகிய பேகனும்' என்பது இதன் பொருள்.

அவனுடைய மலை, தனிமலை; மலைத் தொடர் அன்று; சிறுகுன்றும் அன்று. ஆதலின் அதைப் பெருங்கல் என்றார். அதன் உச்சியிலே தெய்வம் நின்று காக்கிறது என்கிறார். அருந்திறற் கடவுள் என்று அத்தெய்வத்தைப் பாராட்டுகிறார்.

சிறுபாணாற்றுப்படையிலும் எழுபெரு வள்ளல்களின் பெயர்கள் வருகின்றன. பேகனை,

அருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமகன்
பெருங்கல் நாடன் பேகனும்''

என்று ஆசிரியர் குறிப்பிக்கிறார். 'அரிய திறல் பெற்ற தெய்வத்தையுடைய ஆவியர் பெருமகன்' என்று அவனுடைய குலதெய்வத்தை அவ்வடிகள் குறிக்கின்றன. புறநானூற்றில் வரும் அருந்திறற் கடவுளும், சிறுபாணாற்றுப் படையில்வரும் அருந்திறலணங்கும் ஒருவரே. ஆண் தெய்வங்களையும் அணங்கென்று கூறுவது உண்டு. பத்துப்பாட்டில், ''சினைச் சுறவின் கோடுநட்டு, மனைச்சேர்த்திய வல்லணங்கினான்'' என்ற இடத்தில் வருணனை அணங்கென்று சொல்லியிருப்பதைக் காணலாம்.

பேகனுக்குரிய பெருங்கல்லில் எழுந்தருளியிருக்கும் தெய்வம் குறிஞ்சி நிலக்கடவுளாகிய முருகன் என்றுதான் கொள்ளவேண்டும். பொதினியாகிய அம்மலையில் முருகனுக்கு ஆலயம் இருந்தது என்பதற்கும் சான்று உண்டு. முன் சொன்ன,

'' முழவுறழ் திணிதோள் நெடுவேள் ஆவி
பொன்னுடை நெடுநகர்ப் பொதினி''

என்னும் மாமூலனார் பாட்டில், 'பொன்னுடை நெடுநகர்ப்பொதினி என்பதற்கு, 'பொன்னால் அலங்கரித்தலையுடைய உயர்ந்த திருக்கோயிலையுடைய பொதினி' என்று பொருள் கொள்ள வேண்டும். நகர் என்பது கோயிலுக்குப் பெயர்.

'' முக்கட் செல்வர் நகர்வலம் வரற்கே''
என்று புறநானூற்றிலும்,

''பூமுடி நாகர் நகர்''
என்று பரிபாடலிலும் வேறு இடங்களிலும் நகர் என்பது கோயிலைக் குறிக்க வந்திருப்பதைக் காணலாம். 'பொன்னுடை நெடு நகர்' என்பதில்வரும் பொன் தங்கமாகத்தான் இருக்க வேண்டும் என்பதன்று; எந்த உலோகத்தையும் பொன் என்று குறிப்பது தமிழ் மரபு.

இவ்வளவும் கூறியவற்றால் ஆவிநன்குடியில் உள்ள பழனிமலை பழைய பொதினி என்பதும் அதன்மேல் முருகனுக்குப் பழங்கால முதலே கோயில் இருந்து வருகிறதென்பதும் புலனாகும்.

பேகன் முருகனை வழிபட்டவன். ஆதலினால்தான் முருகனுக்கு வாகனமாகிய மயிலைக் கண்டு இரங்கிப் போர்வையை வழங்கினான் என்று கொள்வது பொருத்தமாக இருக்கும் அல்லவா?

# ஸ்ரீ காந்த விமானம்

உயிர்களுடைய உள்ளத்திலிருந்து அவற்றை நடத்தும் பொருளே இறைவன்—கடவுள். அப்பரம்பொருள் அணுவிற் கணுவாய், பெரிதிற் பெரியதாய் உள்ளது. அதனைக் காண்டல் கூடுமோ? எனின், காண விரும்பின் கூடும். எங்கும் நிறைந்தது எல்லாம் அறியும் அது—எல்லாம் வல்லது அது—விரும்பியவர் விரும்பிய வண்ணம் உடல்கொண்டு வருகின்றது, பல பெயர்களையும் பெறுகின்றது. தேவர்கள் வேண்டுகோளுக்கியைந்து குமரன் எனத் தோன்றியது. குமரனே முருகன், குகன், கந்தன், ஆறுமுகன் எனும் பல பெயரையுடையவன். ஆதலின் வேல்பிடித்த விமலனே முழுதும் நம்பி அவன் ஒருவனுக்கே அடிமையாவோர் எவராயினும் அவர்கள் விரும்பிய எல்லாம் பெற்றுப் பிறவிப் பெருங்கடலை நீந்துவர்.

முருகன் அருணகிரியாருக்கு அருள் செய்ததை—

"யாமோதிய கல்வியும் எம்மறிவுந்
தாமேபெற வேலவர் தந்ததனால்"

—கந்தரனுபூதி

இங்ஙனமே முருகப் பெருமானுடைய அருளைப் பெற்ற அன்பர்கள் எண்ணிறந்தோராவர். இறைவனை வணங்குதற்குரிய இடமாக எழுந்தவையே திருக்கோயில்களாகும்.

கோயிலுள் சென்று வழிபடுவதற்கு முன்பே 'கோபுர தரிசனம்' முக்கியம் என்பர் சான்றோர். அக்கோபுரங்கள் பலவிதத் தோற்றமுடையதாகு மென்பர். விமானம் மூலவருக்கு உடலும் உடமையுமாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. சிற்ப நூல்களில் விமானங்களின் இலக்கணங்கள் மிகவும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் நமது தமிழ் நாட்டில் தூங்கானை மாடம், சதுரஸ்ர விமானம், விருத்தகூட விமானம், ஸ்கந்த காந்த விமானம், விஷ்ணு காந்த விமானம், ருத்ர காந்த விமானம், ஸ்ரீ போக விமானம், ஸ்ரீ விசாலம், மங்கள விமானம், ஸ்வஸ்திக விமானம், விபுல சுந்தர விமானம், ஸ்ரீ காந்த விமானம் எனப் பல்வேறு விமானங்கள் நமது நாட்டு ஆலயங்களை அணி செய்கின்றன. இவ்விதமான இலக்கணங்களைக் கருத்திற் கொண்டு ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி மலைக்கோயில் விமானத்திற்கு இணைந்த பெயரினைத் தேர்ந்தெடுக்க எண்ணும்போது சிற்ப நூல் அறிந்தோர் இவ்விமானத்தைக் காந்த விமானம் என்றே வலியுறுத்திக் கூறுவர். இவ்விமானத்தில் இலக்கணம் மான சாரம் என்ற சிற்ப நூலில் காணக்கிடக்கிறது.

முருகன் ஆறுதிருமுகங்களையுடையவன். எனவே முருகன் ஆலயங்களில் ஆறுபட்டை விமானம் சிறப்பு வாய்ந்ததாகும். இதனை ஸ்கந்த காந்த விமானம் என்பர் சிற்ப நூலோர். இதற்கு எடுத்துக்காட்டாகத் தஞ்சைப் பெருவுடையார் ஆலயத்தின் வடபக்கத்தில் கட்டப்பெற்றுள்ள—கலைத்திறன் மிக்க—குமர கோட்டத்தை இங்கு குறிப்பிடலாம்.

## மலைக்கோயில் விமானம்

சதுரமான அடிவாரத்தையும், வட்ட வடிவமான சிகரத்தையும், கர்ண கூடங்கள், முகசாலை, சொருகுசாலை, அஹாரை, பஞ்சரம், மஹாநாசி, மஹா பத்மம், தேவ சோஷ்டங்கள் முதலிய சிறப்பான அம்சங்கள் ஒருங்கே அமையப்பெற்றிருக்கிறது. இத்தகைய விமானத்திற்கு தங்கத்தினால் தகடு பொறுத்தப்பட வேண்டுவது அவசியம் என்று தர்மகர்த்தக் குழுவினரால் தீர்மானிக்கப்பட்டது. சென்னை அறநிலையப் பாது காப்புத் துறை ஆணையர் அவர்களின் அங்கீகாரம் பெற்று தாமிரத் தகடுகளின்மேல் தங்கம் போடும் வேலையை தேவஸ்தான தர்ம கர்த்தக் குழுத்தலைவர் திரு. P.S.K.இலட்சுமி பதிராஜு, M.L.A., அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

விமானத்தின் ஸ்தூபியிலிருந்து சிகரம், தூக்கோடு, மஹாநாசி, பத்ரநாசி, முதலியவையும் இராஜ கோபுரத்திலுள்ள ஐந்து கலசங்களுக்கும் தங்கம் போடப்பட்டுள்ளது.

தேவஸ்தான தலைமையலுவலகக் கட்டிடத்திற்குப் பின்புறமாக ஒரு தற்காலிகக் கொட்டகை போட்டு தங்கரேக் அடிக்கப்பட்டது. தோலா 1448—3—6 எடையுள்ள தங்கத்தை ரேக்காக அடித்து முடிக்கப்பட்டது. அடுத்து தாமிரத் தகடுகளில் விமானத்திலுள்ள

வேலைப்பாடுகளை அமைப்பதற்கென மற்றொரு பிரிவினர் வேலை செய்தனர். தங்க ரேக் ஏற்றுவதற்குத் தகுதியான தாகச் செய்வதற்காக மேற்படி தாமிரத் தகடுகளை பாலிஷ் போட மிஷின் கொண்டு வந்து அதனால் சிறந்த முறையில் அதை வழவழப்பானதாகச் செய்து அதன் மேல் ஒன்றின்மேல் ஒன்றாக ஒன்பது தங்க ரேக்குகளை வைத்து முலாம் ஏற்றி உதய ஞாயிறு போலிருந்த தகடுகள் மலைவாயில் விழும் ஞாயிறு அன்ன வண்ணம் பெற்றது ஒரு நல்ல காட்சியே. இவ்விதமாக செய்யப் பட்ட தங்கத் தகடுகள் பொருத்தும் வேலையை நமது ஆணையர் திரு. A. உத்தண்டராம பிள்ளை, B.A. B.L., I. A. S. அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மேற்படி வேலையைத் தொடக்க முதல் இறுதிவரை மேற்பார்வை பார்த்து வரு வதற்கு இந்துமத அறநிலையப் பாதுகாப்புத் துறையிலிருந்து இன்ஸ்பெக்டர் திரு. எஸ். உடையார் அவர்களை நியமனம் செய்யப்பட் டது. தேவஸ்தான நிர்வாகிகளும் அவரும் காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரையிலி ருந்து வேலையைத் துரிதமாகச் செய்தது போற்றுதற்குரியது.

சிவகிரி எனும் பெயருடையதும், பழனி மலை என்று எல்லோராலும் வழங்கப்படுவ தாகிய இக்குன்றின் கண்ணே எழுந்தருளி யுள்ள பெம்மான் எம்மான் முருகனைத் தமி ழகம் மட்டுமல்ல, இந்தியத் துணைக்கண்டத் தினரும், கடல்கடந்துள்ள நாடுகளிலுள்ள தமிழர்களும் மற்றவர்களும் அறிவார்கள். கூறும் அடியார்கள் வினை தீர்க்கும் குன்று தோறாடும் கந்தனுக்கு திருக்குட முழுக்கு விழா நடைபெறுவது கண்டு இன்புற்றவர் களுக்கு எல்லா அருளும் சித்திக்குமாறு முருகன் திருவடி வணங்குவோம்.

இவ்வரிய பணியை இரண்டு பிரிவாக— தாமிர நகாசு காண்டிராக்டர் கும்பகோணம் திரு. K. B. பால்சாமி செட்டியார் அவர் களும், மேற்படி நகாசு தகட்டின்மேல் தங்க ரேக்கு ஏற்றும் பணியை பழனி சாலியா எலக்ட்ரோ பிளேட்டிங் ஒர்க்ஸ் உரிமையாளர் ஜனப் M. S. அமீர்ஜான் அவர்களும் ஏற்றுத் திறம்படச் செய்து முடித்தார்கள்.




ஏழைகள் விடுதி

# முன்னாள் அறங்காவலர்கள்

1. திரு. K. வெங்கிடகிருஷ்ணய்யர்—கொழுமம் —27-11-1911.
2. ,, சுப்பையன் செட்டியார்—ஆயக்குடி —23-4-1914.
3. ,, M. P. மங்கல கவுண்டர்—பழனி —22-1-1926.
,, ,, —30-11-1926 முதல் 7-2-1928 வரை
4. ,, S. சொக்கலிங்கம் செட்டியார்—
—காரைக்குடி—ஹானரரி டிரஸ்டி —8-2-1928
5. ,, M. P. மங்கல கவுண்டர்—பழனி (1) —14-11-1928 லிருந்து 5வருஷத்திற்கு
,, M. சம்பந்த முதலியார்—கோவை (2) — ,,
6. ,, V.C. வெள்ளியங்கிரிக் கவுண்டர்—
—வெள்ளக்கிணர்—22.10-1930
7. ,, R. M. K. வேலுச்சாமி பிள்ளை—பழனி —26-5-1934 முதல்.
8. ,, S. முத்துசாமி முதலியார்—பழனி
9. ,, G R. கோவிந்தராஜுலு நாயுடு—கோவை —1947 முதல் 1952 வரை.
,, I.T. ஒபளக் கொண்டம நாயக்கர்—ஆயக்குடி— ,,
,, V. V. C. R. முருகேச முதலியார்—ஈரோடு— ,,
,, S. V. வேணுவுடையாக் கவுடர்—சங்கரன்
பாளையம்— ,,
,, M. P. மங்கல கவுண்டர்—பழனி — ,,
,, S. C. பாலகிருஷ்ணன்—ஆயக்குடி — ,,
,, C. R. சதாசிவ முதலியார்—கோவை — ,,
,, K. P. தியாகராஜ தீக்ஷதர்—கோவை — ,,
10. ,, I. T. ஒபளக் கொண்டம நாயக்கர்—ஆயக்
குடி—1952 முதல் 1957 வரை.
,, V. V. C. R. முருகேச முதலியார்—ஈரோடு — ,,
,, M P. மங்கல கவுண்டர் M. L. A.,—பழனி — ,,
,, S. C. பாலகிருஷ்ணன் M. P.,—ஆயக்குடி — ,,
,, G. R. கோவிந்தராஜுலு நாயுடு—கோவை —1952 முதல் 1957 வரை.
11. ,, V. V. C. R முருகேச முதலியார்—ஈரோடு—1957 முதல் 1962 வரை.
,, A. அருணாசலம் பிள்ளை—பொள்ளாச்சி — ,,
,, S. R. ஆறுமுகம் M. P.,—சூலூர் — ,,
,, P. S. K. இலட்சுமிபதிராஜு M.L.A.—பழனி— ,,
,, P. S. சீனிவாசன் செட்டியார்—ஆயக்குடி — ,,
,, A. S. மாணிக்கம் பிள்ளை—ஒட்டன் சத்திரம் —26-3-59 முதல் 5 வருஷங்களுக்கு.

# ஸ்ரீ தண்டாயுதபாணிசுவாமி தேவஸ்தானம், பழநி

## கோயில்கள்

1. ஸ்ரீ தண்டாயுதபாணிசுவாமி எழுந்தருளியுள்ள பழநி மலைக்கோயில்.

2. அடிவாரத்தில் ஸ்ரீ குழந்தைவேலாயுதர் எழுந்தருளியுள்ள திருவாவினன்குடி என்னும் மூன்றாவது படைவீடு.

3. பழநி நகரத்தின் மேற்குபாகத்தில் ஊர்க்கோயில் என்னும் பெரியநாயகி அம்மன் கோயில்.

4. மேலரத வீதியில் அமைந்த இலட்சுமி நாராயணப் பெருமாள் கோயில்.

5. ஊரின் மத்திய பாகத்தில் அமைந்த வேணுகோபால் சுவாமி கோயில்.

6. பழநிக்கு வடக்காக பழைய தாராபுரம் வழியில் 3 கல் தொலைவில் சண்முகநதிக் கரையில் அமைந்த பெரியாவுடையார் கோயில்.

7. பழநிக்குத் தென்பாகத்தில் இரண்டு கல் தொலைவிலுள்ள பாலசமுத்திரம் என்ற சிற்றூரிலுள்ள அகோபில வரதராஜப்பெருமாள் கோயில் ஆகியவற்றுடன் இந்த தேவஸ்தானத்தின் பொறுப்பில் அடங்கிய பிற சிறு கோயில்களாவன.
மற்றும் பழநியில்-அபரஞ்சி விநாயகர் கோயில், உத்திரவிநாயகர் கோயில், கோசல விநாயகர் கோயில், வைகாபுரிக் குளக்கரையில் அமைந்த பாதிரிவிநாயகர் கோயில், அடிவாரம் திருவாவினன்குடிக் கோயிலருகே வேளீஸ்வரர் கோயில், மீனாக்ஷி சுந்தரேசுவரர்கோயில், கிரிவீதியில் துர்க்கையம்மன் கோயில்கள் 3-ம் ஷண்முகநதிக் கரையிலுள்ள தூர்நாச்சியம்மன், இடும்பன் மலை அடிவாரத்திலுள்ள கலிங்கன் பாறை சுப்பிரமணிய சுவாமி, கீரனூரிலுள்ள வாகீஸ்வர சுவாமி கோயில்.

# ஸ்ரீ ஆண்டவர் அபிஷேக அருச்சனைக்கான விபரங்களும் மற்ற விபரங்களும்

| | | ஒரு அருச்சனை ஒரு நாளைக்கு. | குறிப்பிட்ட நட்சத்திர நாள் 12-க்கு ஒருவருட காலத்திற்கு. |
|---|---|---|---|
| 1. | ஸ்ரீ ஆண்டவருக்கு அஷ்டோத்திர அருச்சனை | ரூ. 1-00 | ரூ. 12-00. |
| 2. | சஹஸ்ரநாம அர்ச்சனை | ரூ. 2-50 | ரூ. 30-00. |
| 3. | பால் அபிஷேகம் | ரூ. 5-00 | ரூ. 60-00 |
| 4. | பஞ்சாமிர்த அபிஷேகம் ஒரு குறிப்பிட்ட நாளில் செய்ய | ரூ. 30-00 | ரூ. 360-00 |

1. 1, 2, 3 அயிட்டங்களில் எதுவாக இருந்தாலும் அருச்சனை அல்லது அபிஷேகம் செய்து தபால்கவரில் ஆண்டவர் அபிஷேக விபூதி பிரசாதங்கள் அனுப்பிவைக்கப் படும்.

2. பஞ்சாமிர்த அபிஷேகம் ஒரு குறிப்பிட்ட நட்சத்திர நாளில் செய்ய ரூ. 30/- செல வாகும். அபிஷேக அருச்சனைசெய்து 1 பக்காப்படி பஞ்சாமிர்தம், விபூதி சந்தனம் குங்குமம் வகையராப் பிரசாதங்கள் பக்கமாயுள்ள ரயில்வே ஸ்டேஷனுக்கு அனுப் பிக் கொடுக்கப்படும்.

3. ஆண்டவருக்கு அபிஷேக அருச்சனை செய்து பிரசாதம் அனுப்பிவைக்கக்கேட்டு ரூ. 10/-அனுப்பி வைத்தால், பணம் கிடைத்தபின் வரும் ஞாயிற்றுக்கிழமையில் இதே போன்ற இதர உபயதாரர்களுடைய தொகையுடன் சேர்த்து ஆண்டவருக்கு அபிஷேக அருச்சனைசெய்து ½ பக்காப்படி பஞ்சாமிர்தம், விபூதி சந்தனம் குங்குமம் வகையராப் பிரசாதங்கள் பக்கமாயுள்ள ரயில்வே ஸ்டேஷனுக்கு அனுப்பிக் கொடுக்கப்படும்.

4. ஒரு வருட காலத்திற்கு அருச்சனை பண்ணச்சொல்லி பணம் அனுப்புகிறவர்களுக்கு மட்டும்தான் குறிப்பிட்ட நட்சத்திரநாளில் அருச்சனை செய்து பிரசாதமனுப்பி வைக்கப்படும்.

5. பணம், நிருவாக அதிகாரி, ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தானம், பழனி, மதுரை ஜில்லா என்ற முகவரிக்கு அனுப்பப்படவேண்டும்.

6. தொகை அனுப்பும் பொழுது முகவரி தெளிவாக எழுதுவதுடன், தங்களுக்குப் பக்கமாயுள்ள ரயில்வே ஸ்டேஷனைக் குறிப்பிடவேண்டும்.

7. தேவஸ்தானத்திலிருந்து பிரசாதம் முதலியவைகள் ஆதரவுபெற்ற தபாலிலோ, ரயில்வே பார்சல் மூலமோதான் அனுப்பப்படுகிறது. தேவஸ்தான நிர்வாகத்திற்கு அப்பாற்பட்ட காரணங்களால், பிரசாதம் வந்து சேரவில்லையென்றால் அதற்கு தேவஸ்தானம் பொறுப்பாளியல்ல.

8. ஸ்ரீ ஆண்டவரை மலையில் ஒரு குறிப்பிட்ட நாளில் தங்க ரதத்தில் திருவுலாச் செய் யும் வகைக்கு தேவஸ்தானத்தில் ரூ. 250/-கட்டணம் செலுத்தவேண்டும்.

**மலைக்கோயில் பூஜா காலங்கள்.** (சாதாரண நாட்களில்)

காலை 6-00 மணி திருவனந்தல், காலை 7–15 விளாபூஜை, 8 மணி சிறுகாலசந்தி, 9 மணி காலசந்தி, 12 மணி உச்சிக்காலம், மாலை 5-30 மணி சாயரக்ஷை,

இரவு 8 மணிக்கு இராக்காலம்.

மாத விசேஷங்களான—அமாவாசை, கார்த்திகை, சஷ்டி, விசாகம், பிரதோஷம், மாதப் பிறப்பு ஆகிய நாட்களில் மலைக்கோயிலில் சுவாமி புறப்பாடு உண்டு.

## தேவஸ்தான வெளியீடுகள்

(1) பழனி ஸ்தல வரலாறு ரூ. 0-50 (2) திருமுருகன் பிள்ளைத்தமிழ்த் திரட்டு ரூ. 0-37 (3) ஆறுமுக பாராயணத் திரட்டு ரூ. 0-25 (4) முருகன் பாமாலைத்திரட்டு ரூ. 0-19 (5) மயில் விடுதூது ரூ. 0-50.

**இந்த தேவஸ்தானத்திலிருந்து ஆண்டவர் பிரசாதங்கள் எதுவும் விற்பனை செய்வதில்லை.**

# ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தானம், பழனி

## 1368-1370ம் பசலியில் நடைபெற்றுக்கொண்டுவரும் திருப்பணிகள் விபரம்.

| எண். | வேலை விபரம் | மதிப்புத்தொகை |
|---|---|---|
| | | ரூ. |
| 1 | மலைக் கோயில் இராஜகோபுரம் புதுப்பிக்கும் வேலை ... | 12,000 |
| 2 | மலைக்கோயில்படி வள்ளியம்மன் கோயில் ஒரு நிலை விமானம் கட்டும் வேலை ... | 1,995 |
| 3 | மலைக்கோயில் 18ம்படி கன்னிமார் கோயில் ஒருநிலை விமானம் கட்டும் வேலை ... | 1,300 |
| 4 | மலைக்கோயில் கும்பினி வேலாயுதர் கோயில் ஒருநிலை விமானம் கட்டும் வேலை ... | 1,370 |
| 5 | மலைக்கோயில் குராவடிவேலவர் கோயில் ஒருநிலை விமானம் கட்டும் வேலை | 1,510 |
| 6 | இடும்பன்கோயில் இரண்டுநிலை விமானம் கட்டும் வேலை ... | 3,000 |
| 7 | சுப்பிரமணிய விநாயகர் கோயில் விமானம் புதுப்பிக்கும் வேலை ... | 1,490 |
| 8 | மலைக்கோயில் சுவாமிசன்னதி மூன்று வஜக்குறடு; பலிபீடக்குறடு இதர வேலைகள் செய்யும் வேலை ... | 2,075 |
| 9 | மலைக்கோயில் இராஜகோபுர வாசலுக்கு தேக்குமரக் கதவுசெய்யும் வேலை... | 4,100 |
| 10 | மலைக்கோயில் மணிக்கட்டிமண்டப வாசலுக்கு ,, ,, ... | 2,620 |
| 11 | மலைக்கோயில் திருமாளிகைப்பத்திக்கு கல் தளவரிசை போடும் வேலை ... | 4,850 |
| 12 | மலைக்கோயில் மகாமண்டபம் காற்றுவாரி தூக்குசன்னல் அமைக்கும் வேலை. | 7,500 |
| 13 | மலைக்கோயில் தெற்குமதில் வாயில் புதிதாக அமைக்கும்வேலை ... | 4,200 |
| 14 | மலைக்கோயில் தெற்குவாயிலுக்கு நிலைக்காலும் தேக்குமரக் கதவு செய்யும் வேலை ... | 4,200 |
| 15 | மலைக்கோயில் வடக்குவெளி பிரகாரத்தில் படி கட்டும் வேலை ... | 1,700 |
| 16 | அடிவாரம் மீனாட்சியம்மன் கோயில் மண்டபத்தின் மேல் மீனாட்சி கல்யாணம் சுதை வேலைகளும், கல்யாண திருவாச்சி மாடமும் கட்டும் வேலை ... | 3,800 |
| 17 | மலைக்கோயில் மகாமண்டபம், நாயக்கர் மண்டபம், மேல்பாகத்தில் பழுது பார்க்கும் வேலை ... | 2,000 |
| 18 | மலைக்கோயில் யானைப்பாதை கீழ்பாகத்தில் கைப்பிடிச்சுவர் கட்டும் வேலை | 4,800 |

| எண் | வேலை விபரம் | மதிப்புத்தொகை |
|---|---|---|
| | | ரூ. |
| 19 | மலைக்கோயில் யானைப்பாதை மேல்பாகத்தில் கைப்பிடிச்சுவர் கட்டும்வேலை. | 4,900 |
| 20 | திருவாவினன்குடி திருப்பணி ... | 3,12,210 |
| 21 | ஓரியண்டல் கல்லூரி கட்டிடத்தில் ஒரு ஹால் கட்டும் வேலை ... | 50,000 |
| 22 | மலைக்கோயில் மகாமண்டபத்திலிருக்கும் நடராஜ விக்ரகத்துடன் மாணிக்க வாசகர் ஷி நடராஜருக்கு [பிரபாவளி திருவாவினன்குடிக் கோயிலில் இருக்கும் சிவலிங்கத்திற்கு போகசக்தி விக்ரகம், ஊர்க்கோயிலுச்கு சோமாஸ்கந்தர் விக்ரகம், அம்பாள் ஸ்கந்தர் சுவாமி பிரபாவளி உள் பட தாமிரத்தால் செய்யும் வேலை ... | 3,500 |
| 23 | தேவஸ்தான சத்திரத்திலிருக்கும் ஏழைகள் விடுதிக்கு போகும் பாதையில் காம்பவுண்டு சுவர்கட்டவும் இதரவேலைகளும் செய்யும் வேலை ... | 1,900 |
| 24 | கிரி வீதியிலிருக்கும் அழகநாச்சியம்மன் கோயிலில் குளிக்கும் அறையும் நீர்த்தேக்க தொட்டியும் கட்டும் வேலை ... | 4,500 |
| 25 | கிரி வீதியிலிருக்கும் நாகல் நாயக்கன் தெப்பக்குளத்தில் குளிக்கும் அறையும் நீர்த்தேக்க தொட்டியும் கட்டும் வேலை ... | 4,500 |
| 26 | மேற்கு கிரி வீதியிலிருக்கும் கம்பிளியான் செட்டி தோட்டத்தில் குளிக்கும் அறையும் நீர்த்தேக்க தொட்டியும் கட்டும் வேலை ... | 4,500 |
| 27 | ஓரியண்டல் கல்லூரிக்காக நீர்த்தேக்கத் தொட்டியும் கட்டும் வேலை ... | 6,300 |
| 28 | கிரி வீதியிலிருக்கும் பள்ளியறைத் தோட்டத்தில் கட்டவிருக்கும் தண்ட பாணி நிலையத்திற்காக காம்பவுண்டு சுவரும், நீர்த்தேக்க தொட்டியும் கட்டும் வேலை ... | 60,000 |
| 29 | கிரி வீதியில் தேவார பாடசாலைக்காகக் கட்டிடம் கட்டும் வேலை ... | 7,400 |
| 30 | மலைப்படியில் கல்கி மண்டபம் கட்டும் வேலை ... | 6,300 |
| 31 | கிரி வீதியில் யாத்ரீகர்கள் தங்குவதற்காக ஷெட் ஒன்றுகட்டும் வேலை ... | 31,500 |
| 32 | மலைக்கோயில் யானைப்பாதையில் இடும்பர் கோயிலுக்கருகில் மண்டபம் ஒன்று கட்டும் வேலை ... | 1,650 |
| | மொத்தம் ... | 5,33,170 |

# ஸ்ரீதண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தானம்

## ப ழ னி

### நடைபெற்ற திருப்பணிகள்

| எண் | வேலை விபரம் | மதிப்புத் தொகை |
|---|---|---|
| | | ரூ. |
| 1 | மலைக்கோயில் சர்ப்ப விநாயகர் கோயில் ஒரு நிலை விமானம் கட்டும் வேலை. | 570 |
| 2 | குகன் கோயில் ஒரு நிலை விமானம் கட்டும் வேலை ... | 895 |
| 3 | மலைக்கோயில் மங்கம்மாள் மண்டபம் அருகில் உள்ள மயில் மண்டபம் ஒரு நிலை விமானம் கட்டும் வேலை ... | 1,090 |
| 4 | மலைப்படியில் வைகாபுரித்துரை கோயில் விமானம் கட்டும் வேலை ... | 1,195 |
| 5 | மலைக்கோயில் வடக்கு வெளிப்பிரகார மயில் மண்டபம் ஒரு நிலை விமானம் கட்டும் வேலை ... | 475 |
| 6 | கிழக்கு வெளிப்பிரகாரம் மயில் மண்டபம் ஒரு நிலை விமானம் கட்டும் வேலை | 440 |
| 7 | மலைக்கோயிலில் சுவாமி சன்னதி மயில் மண்டபம் ஒரு நிலை விமானம் கட்டும் வேலை ... | 850 |
| 8 | மலைக்கோயில் இராமலிங்கம் செட்டியார் மண்டபத்திற்கு மேற்கேயுள்ள விநாயகர் கோயிலில் ஒரு நிலை விமானம் கட்டும் வேலை ... | 1,190 |
| 9 | மலைக்கோயில் T. S. சிவசுப்ரமணியம் செட்டியார் மண்டபத்திற்கு மேற்கேயுள்ள விநாயகர் கோயிலுக்கு விமானம் கட்டும் வேலை ... | 500 |
| 10 | மலைக்கோயில் மாரியப்பா மண்டபத்திற்கு அருகில் உள்ள விநாயகர் கோயில் விமானம் கட்டும் வேலை ... | 500 |
| 11 | அடிவாரம் பாதவிநாயகர் கோயில் எதிரிலுள்ள மயில் மண்டபத்திற்கு விமானம் கட்டும் வேலை ... | 1,015 |
| 12 | மலைக்கோயில் நடராஜர் மண்டபம் கட்டும் வேலை ... | 650 |
| 13 | பழனி ஸ்ரீ இலட்சுமி நாராயணப் பெருமாள் கோயில் சொர்க்க வாசல் கதவு செய்யும் வேலை ... | 1,250 |
| 14 | கிரிவீதி மராமத்து ... | 1,600 |
| 15 | தேவஸ்தான ஏழை விடுதியில் காம்பவுண்டு சுவரும், மேடையும் கட்டும் வேலை ... | 4,800 |
| 16 | தேவஸ்தான சுற்றுக் கோயில்களின் பெயர்களை எனமல் போர்டில் சப்ளை செய்யும் வேலை | 1,050 |
| 17 | பெரியாவுடையார் கோயில் அபிவிருத்தி வேலை ... | 4,400 |
| 18 | ஊர்க்கோயிலில் கிழக்குப் பிரகாரத்தில் வாகன மண்டபமாக மாற்றுவதற்காக கம்பி கிராதி போடும் வேலை ... | 4,600 |
| 19 | கிரிவீதியிலிருக்கும் அழகநாச்சியம்மன் கோயில் காம்பவுண்டு சுவர்கட்டும் வேலை ... | 2,400 |

# ஸ்ரீதண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தானம்

## பழனி

### நடைபெறவிருக்கும் திருப்பணிகள் விபரம்.

| எண். | வேலை விபரம் | மதிப்புத் தொகை |
|---|---|---|
| | | ரூ. |
| 1. | பழனி தேவஸ்தானத்திற்கு சொந்தமான பள்ளி யறைத் தோட்டத்தில் கல்யாண மண்டபமும், விடுதிகளும் கட்டும் வேலை | 13,00,000 |
| 2. | மலையைச் சுற்றிலுமுள்ள கிரி வீதிக்கு சிமிண்ட் காங்கிரீட் போடும் வேலை. | 2,50,000 |
| 3. | மலையைச் சுற்றிலுமுள்ள கிரிவீதிக்கு மதில் சுவர் கட்டும் வேலை | 2,00,000 |
| 4. | பழனிடவுன் பெரியநாயகி அம்மன்கோயில் கிழக்குவாசல் இராஜ கோபுரம் புதுப்பிக்கும் வேலை | 1,48,000 |
| 5. | பாலசமுத்திரம் வரதராஜப் பெருமாள் கோயில் பிரகாரம் கல் தள வரிசை போடும் வேலை | 14,900 |
| 6. | தேவஸ்தானத்திற்கு பாத்தியப்பட்ட ஏழைகள் விடுதியில் பெண்களுக்கும் ஆண்களுக்கும் தனித் தனியே இரண்டு ஹால் கட்டும் வேலை | 9860 |
| 7. | பழனி டவுன் இலட்சுமி நாராயணப் பெருமாள் கோயில் பிரகாரம் கல் தள வரிசை போடும் வேலை | 7500 |
| 8. | தெற்கு கிரிவீதியிலிருக்கும் துர்க்கையம்மன் கோயிலுக்கு கொட்டகை ஒன்று கட்டும் வேலை | 4400 |
| 9. | மேற்குகிரிவீதியிலிருக்கும் துர்க்கையம்மன் கோயிலுக்கு கொட்டகை ஒன்று கட்டும் வேலை | 2900 |
| | | 19,37,560 |

# தேவஸ்தானத்தால்

# நடைபெறும் நிலையங்கள்

### வேதாகம பாடசாலை

பழனி நகர் தெற்குரதவீதியில் 26 மாணவர்களுக்கு வேதம், ஆகமம் ஆகியவற்றின் பயிற்சி அளிப்பதற்காக பாடசாலை ஒன்று தேவஸ்தானத்தாரால் நிறுவப்பட்டு நடைபெற்று வருகின்றது. மேற்படி மாணவர்களுக்கு நியாஸங்கள், சப்தமஞ்சரி, வேதத்தில் ருத்ரம், சந்தை முதலியவற்றில் சிட்சையளிக்கப்பட்டு வருகிறது.

### நாதசுவரக் கலைக் கல்லூரி

கிரிவீதியின் மலையின் தென்புறம் நாகப்பட்டினத்தார் தோப்பில் தேவஸ்தானத்திலிருந்து நாதசுவரக் கலையில் 20 மாணவர்களுக்கு மூன்றாண்டுப் பயிற்சி தரப்படுகின்றது. அத்துடன் தவுல் வாசிக்கவும் கற்றுத் தரப்பட்டு வருகின்றது. தவுல் வகுப்பில் 10 மாணவர்கள் கற்று வருகின்றனர். இந்த மாணவர்களுக்கு உணவு, இருக்கை வசதிகளை தேவஸ்தானம் ஏற்று நடத்திவருகிறது.

### ஏழை விடுதி

கிரிவீதியிலிருந்து தெற்கே சுமார் அரை பர்லாங்கு தூரத்தில் நல்ல வசதியாக உள்ள இடத்தில் அனாதைகளை வைத்துப் பராமரித்துவர மேற்படி விடுதி நடத்தப்பட்டு வருகிறது. அங்கு 56 பேர்கள் உள்ளனர். ஆதரவற்ற 5 வயதிற்கும் குறையாத குழந்தைகள், சிறுவர்கள் முதலியவர்களைப் பள்ளிகளில் படிக்கச்செய்து வருகிறது. அவர்களுக்காகும் எல்லாச் செலவுகளையும் தேவஸ்தானம் ஏற்றுக்கொண்டு பல ஆண்டுகளாகச் சிறந்த முறையில் நடைபெற்று வருகின்றது. இவ்விடுதிக்கென அன்பளிப்புகள் தேவஸ்தான சம்பந்தப்பட்ட இடங்களில் செலுத்தி கைச்சீட்டுப் பெற்றுக் கொள்ளலாம்.

### தேவார இசைப்பள்ளி

வடக்குக் கிரிவீதியின் தர்க்கையம்மன் கோயிலருகில் தேவார இசைப்பள்ளி தேவஸ்தானத்தினரால் நடத்தப்பட்டு வருகிறது. மேற்படி பள்ளியில் 12 மாணவர்கள் படிக்கின்றனர். மேற்படி மாணவர்கள் தேவாரம் முதலிய பாடங்களைப் படித்துவருவதுடன் உயர்நிலைப்பள்ளியிலும் படிக்க வசதி செய்யப்பட்டிருக்கிறது. உணவும், இருக்கையும் தேவஸ்தானத்திலிருந்து இலவசமாக வழங்கப்படுகிறது.

### ஸ்ரீ பழனி ஆண்டவர் கீழ்த்திசைக் கலைக் கல்லூரி

தேவஸ்தானத்தாரால் திரு. V.V.C.R. முருகேச முதலியாரிடமிருந்து மிகவும் குறைந்த விலைக்கு வாங்கப்பட்டிருக்கும் சிவகிரிப்பட்டி காலியிடத்தில் சுமார் இலட்ச ரூபாய் செலவில் கட்டிடம் கட்டி பழனி ஆண்டவர் கீழ்த்திசைக் கலைக் கல்லூரி ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அதில் படிக்கும் 12 மாணவர்களுக்கும் இலவசமாக உணவும் இருக்க இடவசதியும் தேவஸ்தானத்திலிருந்து கொடுக்கப்பட்டு வருகிறது.

# ஸ்ரீ தண்டாயுதபாணிசுவாமி கோயில்

[பழனி, மதுரை மாவட்டம்]

(இந்துமத அறநிலையச் சட்டத்தின் 31-வது பிரிவின்கீழ் 1367, 1368, 1369 பசலிகளில் பிற கோயில்களுக்கு வழங்கிய நிதி உதவி விபரம்.)

பசலி 1367.

| நிதி வழங்கிய தேதி. | கோயில்களின் பெயர் | தொகை |
|---|---|---|
| 12-12-57 | ஸ்ரீ பாலசுப்பிரமணியசுவாமி கோயில், தென்கரை, பெரியகுளம். | 1,000-00 |
| ,, | ஸ்ரீ மாசிலாமணீசுவரர் கோயில், திருமுல்லைவாயில். | 2,000-00 |
| ,, | ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோயில், வள்ளியூர். | 2,000-00 |
| ,, | ஸ்ரீ புண்ணியநாதசுவாமி கோயில், திருவிடைவாசல். | 1,000-00 |
| ,, | ஸ்ரீ திருவள்ளுவர் கழகம், மதுரை. | 250-00 |
| 10-1-58 | ஸ்ரீ மீனாட்சிசுந்தரேசுவரர்கோயில், மதுரை (நிர்வாக அதிகாரிகளுக்கு பயிற்சி வகுப்பு நடத்துவதற்காக) | 1,000-00 |
| 10-4-58 | ஸ்ரீ பட்டத்து விநாயகர் கோயில், பழனி. | 1,000-00 |
| ,, | ஸ்ரீ சிதம்பரேசுவரர் கோயில், சாத்தூர். | 2,000-00 |
| 11-4-58 | ஸ்ரீ வரசித்திவிநாயகர் கோயில், அனந்தகிரி, கொடைக்கானல் வட்டம். | 240-00 |
| ,, | ஸ்ரீ அவிநாசிலிங்கேசுவரர் கோயில், அவிநாசி. | 2,000-00 |
| ,, | ஸ்ரீ வில்வவனநாதசுவாமி கோயில், திருவைகாவூர். | 1,000-00 |
| 3-5-58 | ஸ்ரீ ஊன்றீசுவரர் கோயில் திருவள்ளூர். | 1,000-00 |
| | மொத்தம் | 14,490-00 |

பசலி 1368

| | | |
|---|---|---|
| 13-9-58 | ஸ்ரீ பாலைவனநாதசுவாமி கோயில், திருப்பாலைவனம். | 1,000-00 |
| ,, | ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோயில், கம்பம் | 500-00 |
| ,, | ஸ்ரீ பரஞ்சோதீசுவரர் கோயில், தஞ்சாக்கூர். | 2,000-00 |
| 24-9-58 | பழனி நகராட்சி மன்றம். | 3,000-00 |

| | | |
|---|---|---|
| 26-12-59 | ஸ்ரீ சங்கமேசுவரர் கோயில், பவானி. | 10,000-00 |
| ,, | ஸ்ரீ மகுடீசுவரர் கோயில், கொடுமுடி. | 1,000-00 |
| 23-1-59 | ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோயில், சென்னிமலை. | 10,000-00 |
| | மொத்தம் | 27,5(0-00 |

பசலி 1369

| | | |
|---|---|---|
| 24-8-59 | ஸ்ரீ விசாலாட்சி மனநோய் மருத்துவ நிலையம், குற்றாலம். | 200-00 |
| 29-8-59 | ஸ்ரீ பழனியாண்டவர் கோயில், பாப்பான்குளம். | 250-0 |
| 26 11-59 | ஸ்ரீ தண்டாயுதபாணிசுவாமி கோயில், மாஞேசியப்பன் சாவடி. | 1,500-00 |
| ,, | ஸ்ரீ வேலப்பர் கோயில், பூம்பாறை. | 4,000-00 |
| ,, | ஸ்ரீ பழனியாண்டவர் கோயில், பேலுகுறிச்சி. | 1,000-00 |
| 6-1-60 | ஸ்ரீ அர்த்தநாரீசுவரர் கோயில், திருச்செங்கோடு. | 5,000-00 |
| 25-1-60 | ஸ்ரீ பிரசண்டவிநாயகர் கோயில், உடுமல்பேட்டை. | 15,000-00 |
| 21-4-60 | ஸ்ரீ சங்கமேசுவரர் கோயில், பவானி. | 5,000-00 |
| 13-5-60 | ஸ்ரீ சென்னமல்லீசுவரர் கோயில், சென்னை (செய்திப்படமெடுப்பதற்காக) | 15,000-00 |
| 26-5-60 | ஸ்ரீ கிதாபவன், குருவாயூர். | 2,000-00 |
| 28-5-60 | ஸ்ரீ விநாயகர் கோயில், விநாய்நகர், புதுடெல்லி. | 5,000-00 |
| ,, | ஸ்ரீ ஊன்றீசுவரர் கோயில், திருவள்ளூர். | 9,000-00 |
| 27-7-59 | ஸ்ரீ அரங்கநாதசுவாமி கோயில், ஸ்ரீரங்கம். | 10,000-00 |
| 1-1-60 | ஸ்ரீ அரங்கநாதசுவாமி கோயில், திருமண்டங்குடி. | 5,000-00 |
| | மொத்தம் | 77,950-00 |

**கொடுக்கப்படவேண்டிய தொகைகள் விபரம்:**

| | | |
|---|---|---|
| 1. | ஸ்ரீ மாரியம்மன் கோயில், பழனி. | 10,000-00 |
| 2. | ஸ்ரீ வடபழனி ஆண்டவர் கோயில், சென்னை. | 5,000-00 |
| 3. | ஸ்ரீ பழனிஆண்டவர் கீழ்த்திசைக் கலைக்கல்லூரி, பழனி, மதுரை மாவட்டம். | 5,50,000-00 |

# யாகசாலை குண்டங்களின் விவரம்

**சனற்குமாரபிரஸ்ந குமார தந்திரத்தின்படி பதங்களின் பெயர்கள்.**

| | | |
|---|---|---|
| *திக்குகளில் ஷடஸ்ரகுண்டம்* | ... | *16* |
| *விதிக்குகளில் பத்ம குண்டம்* | ... | *16* |
| *பிரதானம் விருத்த குண்டம்* | ... | *1* |
| *ஆக மொத்தம்* | ... | *33* |

| எண் | பதம் | பதங்களின் பெயர் | எண் | பதம் | பதங்களின் பெயர் |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | குக பதம் | 17 | 128 | சுத்தமாயா |
| 2 | 8 | சக்தி பதம் | 18 | 136 | மிச்ரமாயா |
| 3 | 16 | நாதம் | 19 | 144 | கலா |
| 4 | 24 | பிந்து | 20 | 152 | காலம் |
| 5 | 32 | சதாசிவம் | 21 | 160 | நியதி |
| 6 | 40 | மகேசுவரம் | 22 | 168 | வித்யா |
| 7 | 48 | சுத்தவித்யா | 23 | 176 | ராக |
| 8 | 56 | கலா | 24 | 184 | தேவ |
| 9 | 64 | தத்வ | 25 | 192 | கண |
| 10 | 72 | புவந | 26 | 200 | சித்த |
| 11 | 80 | மந்த்ர | 27 | 208 | ஆர்ஷ |
| 12 | 88 | பத | 28 | 216 | யக்ஷ |
| 13 | 96 | வர்ண | 29 | 224 | கந்தர்வ |
| 14 | 104 | ருத்ர | 30 | 232 | சுர |
| 15 | 112 | விஷ்ணு | 31 | 240 | க்ஷர |
| 16 | 120 | பிர்ம | 32 | 248 | மாநவ |

**ஆக பதம் 3969**

# கும்பாபிஷேக 33 குண்ட யாகசாலை தத்துவங்கள்

சிவபெருமானுக்கு சொரூபம் தடஸ்தம் என்று இரண்டு வடிவங்களுள்ளன. சொரூபத்திரு மேனி சுயம்பிரகாசத் திருமேனியாகும். அது உலகத்தைக் கடந்தவடிவம். இனி தடஸ்த வடிவும், உலகத்தோடு கலந்த வடிவமாகும். இனி உலகம் நிலம், நீர், நெருப்பு உயிர் நீள் விசும்பு நிலாப்பகலோன் என்னும் எண்வகைப் பொருள்களிலும் கலந்தது அது, இதைச் செலுத்துகிற தத்துவங்கள், தத்துவங்களைச் செலுத்துகிற தத்துவேசுவரர், அவர்களைச் செலுத்துகிற சக்தியாகிய தத்துவேசுவரி, அங்ஙனமே சிவனிடத்தில் நின்று தத்துவமுதலியவைகளைச் செலுத்துகிற மூர்த்தி, மூர்த்தீசுவரர் மூர்த்தீசுவரி என்னும் ஆறு தத்துவங்களும் மந்தரம் பதம், வர்ணம், புவநம், தத்துவம், கலை என்னும் ஆறு அத்துவாகிகளாக விளங்குவது யாக குண்டமாகும். சிவபெருமான் 64 கலாமய்மாக விளங்குகிறவர். அந்தக் கருத்தினையே 64 சூத்திரங்கள் புலப்படுத்தும், 64கலைகள் சிவபெருமானுக்குடைய பூர்ணவடிவமாகும். அங்ஙனம் சக்தியின் பூர்ணவடிவிமான யாகசாலைக்கு 33 குண்டங்கள் உரியதாகி யாகசாலைக்குரிய முழுவடிவம் பெற்று விளங்குவன. இந்த யாகசாலை உத்தமோத்தமமானயாகசாலையும் உத்தம பட்ச யாகசாலையுமாகும். இந்த யாகசாலை இதுவரை சாஸ்திரங்களில் சொல்லப்பட்டதேயன்றி எங்கும் அமைத்துக் காணப்பெறுத சிறந்த யாக சாலையாகும். சிவபெருமானுடைய தடஸ்த வடிவமாகிய திருமேனியில் சொரூப சிவபெருமானை ஆவாகித்துப் பூசிப்பது இந்த யாகசாலையின் தத்துவமாகும். நிலம் நீர் நெருப்பு காற்று ஆகாயம் சூரியன் சந்த்ரன் ஜீவாத்மா என்னும் எட்டு பேதமுடையது இந்த உலகம். இந்த எட்டுப் பொருள்களிலும் சிவபெருமான் கலந்து விளங்குகிறார். அது சிவபெருமானுக்குடைய திருமேனி. சிவபெருமானை அந்த எட்டு இடங்களிலேதான் பூசிக்க முடியும். நம் உயிர் அருவமானது. அதை உருவமான உடம்பில் வைத்துத்தான் அனுமித்துக்காண முடியும். அங்ஙனமே சிவபெருமான் சொரூபத் திருமேனி உடையவர். அந்த சொரூபம் ஞானமயமானது. அந்த ஞானம் அருள்வடிவம் அவர் அதில் விளங்குவார். அவர் தடஸ்தத் திருமேனியாகிய நிலம் முதலியவைகளில் கலந்து நிற்பார், அது சிவபெருமானுக்குரிய திருமேனிகளில் ஒன்று மேலே சொன்ன ஆறுதத்துவாக்களும் சிவபெருமானுக்கு வடிவங்களென்று சிவாகமங்கள் சொல்லுகின்றன. இந்த எண்வகைப்பொருள்களும் எண்வகை மூர்த்திகளும் எட்டுக்குண்டங்களில் விளங்குகிறார்கள். அந்த எட்டுக் குண்டங்களும் ஒவ்வொன்றும் நான்ஞன்காக நான்கு ஆவரணங்களினும் 32 குண்டங்களும் அமைக்கப் பெறும். ஈசானம் முதல் சத்யோஜாத மிறுதியாக உள்ள பஞ்ச பிர்மங்களும் சிவபெருமானுக்குரிய எல்லாம் அறியும் தன்மை, வரம்பிலின்பமுடைமை, இயல்பாகவே பாசங்களில் நீங்கிய தன்மை, தன்வயத்தனாந்தன்மை, பேரறிவுடமை பேரருளுடமை. அளவிலாற்றலுடைமை, தூயவுடம்பினனுதல் முதலிய தன்மைகளும் மூல மந்திரங்களும் பிரதான குண்டத்தில் விளங்கும். இது சொரூப சிவத்தின் வடிவமாகும். இவற்றிற்கு அங்கமாக உள்ளவை நான்கு ஆவரணத்திலும் அமைந்த 32 குண்டங்களாகும். அதில் மூர்த்தி மூர்த்தீசுவரர்களும் அடுத்த ஆவரணத்தில் மூர்த்தீசுவரிகளும் அதற்கடுத்த ஆவரணத்தில் பிருதிவி முதலிய தத்துவங்களும் அந்த தத்துவங்களை நடத்துகின்ற பவன் சர்வன் முதலிய மூர்த்தீசுவரர்களும் அதற்கடுத்த ஆவரணத்தில் வாமை, ஜ்யேஷ்டை முதலிய சக்திகளும் விளங்கித் தோன்றுவார்கள் இங்ஙனம் 33 குண்டங்களிலும் ஹோமஞ் செய்வதினல் இலட்சக் கணக்கான ஹோமங்களும் யந்த்ர மந்த்ர மூர்த்தி சாந்நித்தியங்களும் சம்பூர்ணமாக ஆகின்றன.

# முன்னாள் இறைபணியாளர்கள்

| | | |
|---|---|---|
| 1. | திரு. எல். எஸ். சுவாமிநாத அய்யர் B.A.B.L. | 9-1-1939—10-5-1940 |
| 2. | ,, ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை B.A.B.L. | 11-5-1940—3-11-1944 |
| 3. | ,, ஜி. கே. பகவதிக் கவுண்டர் B.A.B.L. | 20-11-1944—3-5-1946 |
| 4. | ,, கே. சிதம்பரம் பிள்ளை B.A.B.L. | 13-6-1946—27-1-1950 |
| 5. | ,, எம். சி. கல்யாணசுந்தரம் பிள்ளை B.A.B.L. | 28-1-1950—28-9-1952 |
| 6. | ,, டி. எச். விவேகானந்தம் பிள்ளை B.A.L.T. | 29-9-1952—13-9-1954 |
| 7. | ,, கே. வி. சுப்பையா பிள்ளை B.A | 14-9-1954—21-1-1958 |
| 8. | ,, ஆர். கிருஷ்ணசாமி பிள்ளை B.A.B.L. | 21-1-1958—30-6-1958 |
| 9. | ,, எம். வீரபாகு B.A.B.L. | 1-7-1958—14-11-1959 |
| 10. | ,, ஜி. ஆதிமூலம் B.A.B.L. | 14-11-1959—14-4-1960 |
| 11. | ,, சி. எஸ். தீனதயாளு BSc. B.L. | 14-4-1960— |

# ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி கோயில், பழனி

மதுரை மாவட்டம்.

## பசலி 1360 முதல் 1369 வரையுள்ள வருமான விவரம்

| நிலங்கள் மூலம் வருமானம் ரூ. | கட்டிட மனை வருமானம். ரூ. | காணிக்கைகள் உபயங்கள். ரூ. | மலைக் கற்கள் வருமானம். ரூ. | முதலீடு வருமானம். ரூ. | பலவகை வருமானம். ரூ. | மொத்தம். ரூ. |
|---|---|---|---|---|---|---|
| பசலி 1360<br>35,229-21 | 12,017-53 | 2,29,941-71 | 7,057-60 | 44.929-89 | 1,819-91 | 3,30,995-85 |
| பசலி 1361<br>41,240-93 | 12,019-08 | 2,47,966-58 | 7,057-60 | 46,154-90 | 3,686-75 | 3,58,125-84 |
| பசலி 1362<br>8,248-12 | 8,697-71 | 2,02,865-12 | 7,057-60 | 47,749-21 | 7,872-35 | 2,82,489-11 |
| பசலி 1363<br>57,997.53 | 8,467-54 | 1,91,194-61 | 7,057-60 | 48,165-40 | 45,787-47 | 3,58,670-15 |
| பசலி 1364<br>79,218-76 | 5,640-15 | 2,16,255-22 | 7,057-60 | 51,625-78 | 55,119-30 | 4,14,916-81 |
| பசலி 1365<br>59,433-90 | 7,366-98 | 2,27,269-22 | 7,057-60 | 61,338-73 | 71,134-40 | 4,33,600-83 |
| பசலி 1366<br>53,993-40 | 6,991-49 | 3,16,891-53 | 7,057-60 | 80,675-50 | 66,065-76 | 5,31,675-28 |
| பசலி 1367<br>81,505-08 | 8,418-69 | 3,34,358-47 | 4,700-00 | 87,544-26 | 83,452-76 | 5,99,979-26 |
| பசலி 1368<br>58,104-85 | 7,680-01 | 3,79,168-24 | 9,415-20 | 1,02,191-41 | 83,531-41 | 6,40,091.12 |
| பசலி 1369<br>79,427-79 | 7,169-63 | 4,58,608-15 | 7,057-60 | 1,17.977-19 | 84,165-36 | 7,54,405-72 |



# நினைவூட்டுதல்

1. மலைக்கோயில் ஒரு தூய்மையான இடம்; ஸ்ரீ ஆண்டவர் சக்தி மிக்க தெய்வம் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

2. நீங்கள் மலையின் மீதிருக்கையில் பழைய பழக்க வழக்கங்களுக்கு மரியாதை செலுத்தக் கடமைப்பட்டவர்கள்.

3. மலையின் எந்தப் பகுதியிலும் மிதியடி போட்டுச் செல்லுதல் கூடாது; மலைப் பரப்பு முழுதும் புனிதமான இடமாகக் கருதப்படுகிறது.

4. விலக்கப்பட்டுள்ள பூக்களை இறைவனுக்குச் சூட்டுதல் கூடாது.

5. புகை பிடித்தல், வெற்றிலை பாக்கு போடுதல், வீண்வம்பு பேசுதல், படுத்து உறங்குதல், நந்தி, பலிபீடம் போன்ற உயர்ந்த இடங்களில் உட்காருதல், எச்சில் உமிழ்தல் போன்ற ஆசாரமில்லாத செயல்களைச் செய்தல்கூடாது.

6 பலிபீடம், மயில், நந்தி இவைகளுக்குக் குறுக்கே போதல்கூடாது.

7. வழிபாட்டுக்குச் செல்லுமுன் குளித்துத் தூய ஆடை அணிந்து செல்ல வேண்டும்.

8. தரிசனத்தின்போது நெருக்கி மற்றவர்களுக்கு இடைஞ்சல் செய்யாது "ஒருவழிப் பாதையில்" வரிசை வரிசையாகச் சென்று ஒவ்வொருவருக்கும் தரிசனம் கிடைக்கச் செய்ய வேண்டியது எல்லோரின் கடமையாகும்.

9. சேவார்த்திகள் மற்றவர்களை நம்பி, காணிக்கைகளை ஏமாந்து கொடுத்துவிட வேண்டாமென எச்சரிக்கப்படுகிறது.

10. உங்களது காணிக்கைகளை மலைமேலுள்ள உண்டியலில் போடுங்கள். விலையுயர்ந்த பொருளாயின் மலைமேலுள்ள அலுவலகத்தில் செலுத்தி கைச்சீட்டுப் பெற்றுக்கொள்ளுங்கள்.

11. சேவார்த்திகளுக்கு வேண்டிய விவரங்களை மலைக்கோயில், தேவஸ்தான சத்திரம், தலைமை அலுவலகம் முதலிய இடங்களில் தெரிந்துகொள்ளலாம்.

12. அபிவிருத்திக்கான சிறந்த யோசனைகளை இறைபணியாளருக்கு எழுதக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

---

வேல்வாழி, மயில்வாழி, சேவல் வாழி,
வேறுமுன படைவாழி, விளங்கு தண்டைக்
கால்வாழி, அருள்பொழியும் விழிகள் வாழி,
கவின்குலவும் ஈராறு கரங்கள் வாழி,
மால்வாழி வாழியெனப் பணிந்து வாழ்த்தும்
மலைமாது தருமுருகன் மகிழ்ந்து ஆறு
பால்வாழி, எனை ஆளுங் கருணை வாழி
பாங்கிருந்த மங்கையர்தம் பதங்கள் வாழி.

—கந்தபுராணம்.

---

பாரி அச்சகம், சென்னை-1










பாரி அச்சகம், சென்னை-1